1-6-1982 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — வைகாசி 18





இந்திய ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் திரு கே. வி. கிருஷ்ணாராவ் 21.5.'82 காலையில் மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்தார். அவருடன் பூனாவைச் சேர்ந்த தென்பிராந்திய தலைமை ராணுவ அதிகாரி லெப். ஜெனரல் டி. எஸ். ஒபராய், சென்னையிலுள்ள தென்மண்டல ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர். எஸ். பன்னு ஆகியோர் சென்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ராணுவ தலைமைத் தளபதிக்கு கீதோபதேசக் காட்சியைச் சித்தரிக்கும் வடிவத்தை வழங்கினார்.

...ல் பெரியார் நூற்றாண்டு விழா நினைவுத் தூணை மாண்புமிகு கல்வி அமைச்சர் ...அரங்கநாயகம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் ...டுஞ்செழியன் அவர்கள் 19.5.'82 அன்று திறந்து வைத்தார்கள்.





# உதகமண்டலத்தில்...



மலர்க் கண்காட்சி துவக்க விழா (22.5.82)



மலர்க் கண்காட்சி நிறைவு விழா. (23.5.82)


# தமிழரசு

திருவள்ளுவர்
ஆண்டு 2013

•

துந்துபி —
வைகாசி 18

•

மலர்:12 இதழ்: 23

•

1—6—1982


தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறப்பு விழா (16.5.1982)








# மத்திய, மாநில உறவு

**திரு இரா. மோகனரங்கம், எம்.பி.**

**தமிழக அரசின் சிறப்புப்பிரதிநிதி**

மைய அரசு-மாநில அரசுகள் உறவு என்னும் பொருள் குறித்து இன்று நேற்றல்ல, ஒருவர் இருவரல்ல ஆயிரக்கணக்கானோர் அரசியல் வித்தகர்கள், அரசியல் புரிந்தோர், கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் பலர் விவாதித்து வந்திருக்கிறார்கள்.

உலகின் இரண்டாவது பெரிய நாடு இந்தியா. பல்வேறு மாநிலங்ளை உள்ளடக்கிய நாடு. பல்வேறு மாநிலங்களை மட்டுமல்ல, பல்வேறு மொழிகளை, கலாச்சாரங்களை கொண்டநாடு. உலகத்தோடுதொடர்புகொண்டு நாகரீகத்தைப் பிற நாடுகளுக்குக் கற்றுக் கொடுத்தநாடு. நாகரீகத்தின் சின்னமாகத் திகழ்ந்த நாடு, கிராம ஆட்சியை, நிர்வாகத் திறமையை உலகத்திற்கே எடுத்துக் காட்டிய நாடு. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்குப் பின்னர் 200 ஆண்டுக் கால பிரிட்டிஷ் ஆட்சிக்குப்பின்னர் சுதந்திரம்கண்டநாடு இது. தனக்கென ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கி சமஷ்டி ஆட்சி முறையைப் பின்பற்றி வரும் நாடு மட்டுமல்ல, மொழி வழி மாநிலங்களாகப் பிரிந்து ஆட்சி முறை நடத்தி வருகின்ற நாடு இது. இந்த நாட்டிலே தான் சமஷ்டி முறையைப் பின்பற்றி வருகிறோம். மத்திய மாநில உறவைப் பற்றிப் பேசுகிறோம்.

1948ஆம் ஆண்டில் நமது இந்திய அரசியல் சாசனத்தை அளித்த அரசியல் வித்தகர்கள் சட்ட விற்பன்னர்கள் அரசியல் சட்டத்திலே மைய அரசின் அதிகாரங்கள் என்ன என்பதையும் இரு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் என்ன என்பதையும் வரையறுத்துச் சொல்லியுள்ளார்கள்.

இந்த அதிகாரப் பாகுபாடு நம் நாட்டில் ஏறக்குறைய 32 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டதாகும். அப்போதைய நிலைமை; தேவைப்பாடு - அரசியல் கூறுகள் சந்தர்ப்பங்கள் ஆகியவற்றைக்கருத்தில்கொண்டு இந்தப் பாகுபாடுகள்ஏற்படுத்தப்பட்டன.

மேலும் அனைத்திந்தியாவிலும் மைய-மாநில அரசுகளில் ஒரே கட்சி பொறுப்பேற்றிருந்த காரணத்தாலேயே - மைய அரசுக்கு அதிகாரங்கள் அதிகமா அல்லது மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் அதிகமா என்ற கேள்விக்கே இடமில்லாமல் இருந்தது.

ஆனால், காலம் தன் கடமையைச் செய்தது. மக்களின் அரசியல் கருத்துக்கள் மாறுபட்டன. நாடு முழுவதிலும் ஒரே கட்சியின் ஆட்சி என்ற நிலை மாறி பல்வேறு கட்சிகள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியை அமைத்தன. இந்தச் சூழ்நிலையில் தான் மைய மாநில உறவுக்கு ஒரு புது வடிவம் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தப் புது வடிவத்தினை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் தர முனைந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். தம் கட்சி பொறுப்பேற்று தமிழகத்தில் அரசாள வேண்டும் என்ற எண்ணம் அண்ணா அவர்களுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. ஆனால், இயற்கையின் நியதியை யாராலே மாற்ற முடியும்? நேரு பெருமகனார் ஒரு முறை Tryst with Destiny என்ற அழகான ஒரு சொல்லோவியத்தைச் சொன்னார்கள். இந்திய நாடு விடுதலையடைந்தது. இந்திய மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்கான கால கட்டம் உருவானபோது

அது இயற்கையின் நியதி என்பதை உணர்த்துவதற்காக பண்டிதர் நேரு அவ்வாறு கூறினார். அதுபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது சொன்னார், அது இயற்கைக் கட்டளை என்று.

தமிழகத்தின் முதல்வராக வர வேண்டும் என்ற எண்ணம் அண்ணா அவர்களுக்கு இல்லாமல் கூட இருந்திருக்கலாம். ஆனால், தமிழ் மாநிலத்திற்கு இன்னும் சொல்லப் போனால் இந்தியாவின் மற்ற எல்லா மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்ற எண்ணம்-கோரிக்கை அண்ணாவுக்கு நிறையவே இருந்தது. அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்படக் கூடாது, பரவலாக்க வேண்டும் என்று கேட்டார், வாதாடினார்.

அவர் தமிழக முதல்வரான சில நாட்களில் பத்திரிகையாளர்கள் மத்தியில் இதை அறுதியிட்டுக் கூறினார்.

**"Although I am the Chief Minister and although I am interested to do enormous good to my people, my hands are tied. More powers are necessary for the State''.**

''நான் முதல்வராக இருந்த போதிலும் என் மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று நான் ஆர்வம் கொண்டிருந்த போதிலும் என் கைகள் கட்டப்பட்டுள்ளன. மாநில அரசுக்கு நிறைய அதிகாரங்கள் தேவைப்படுகின்றன என்றார்'' அவர்.

மாநிலங்களுக்கு நிறைய அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டது, தான் எதேச்சாதிகாரியாக வேண்டும் என்பதற்காக அல்ல, மக்களுக்கு அதிக நன்மை தன்னால் செய்ய முடியும் என்ற அடிப்படையிலேதான். அவர் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல. மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட ஒரு மனிதாபிமானி ஆவார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவான நாளிலிருந்தே மத்திய-மாநில அரசின் உறவு பற்றிய விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டு வந்துள்ளன.

ஆனால், இந்தப் பிரச்சினைக்கு இந்தியாவிலேயே முதன் முதலாக அதிகாரப் பூர்வமான முக்கியத்துவம் அளித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அவசியமான அதிகாரங்களைப் பங்கிடு செய்வதற்கு-அரசமைப்புச் சட்டம் செயல்படுவதை ஆராய்வதற்கு உயர் அதிகார ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சராகப் பதவியேற்ற இரண்டாவது மாதத்திலேயே புது டெல்லியில் இந்தியப் பத்திரிகையாளர் கழகத்தினர் நடத்திய கூட்டத்தில் வலியுறுத்தினார்.

'மாநில அரசுகளுக்கும் -மைய அரசுக்கும் உள்ள தொடர்பு மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்' என்றார். 'மாநில அரசுகள்-மைய அரசு உறவு முறை மிக்க நிலையான அடிப்படையில் சீரமைக்கப்பட வேண்டும்' என்பது அவருடைய ஆணித்தரமான கருத்து.

அவர் கருத்தில் கொண்டது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது ஒன்று. மைய-மாநில அரசுகள் உறவு நீடித்து நிலை பெற்று வளர வேண்டும் என்பது.

-'இணக்கமான நல்லெண்ணத்தின் மூலம், நிலையானதும் நல்ல பலன் தரத்தக்கதுமான முடிவை நாம் காண வேண்டும் என்பதே என் வேட்கையாகும்'' என்று அவரே ஒரு முறைக்குப் பல முறை சொல்லியிருக்கிறார்.

தனிப்பட்ட மனிதர்கள் உறவில் எப்படி இணக்கமான நல்லெண்ணம் முக்கியமோ அப்படியே மாநில அரசின் நல்லுறவுக்கும் அது இன்றியமையாததாகும்.

ஒரு பக்கம் அதிக அதிகாரங்களைக்கோரும் மாநில அரசுகளின் நியாயமான வாதங்கள்; மறுபக்கம் இவ்வளவு பெரிய நாட்டை நிர்வகித்து நிதி வசதிகளைப் பங்கிட்டுத் தரவேண்டிய மைய அரசின் பிரச்சினைகள்.

இந்தச் சூழ்நிலையில் நடைமுறையில் சாத்தியமானது எது? நாட்டு மக்கள் நலனுக்கு உகந்த வழி என்ன? நாட்டின் நலத்தை மனத்திற் கொண்டோர் சிந்திக்க வேண்டிய கட்டம் இது.

அந்தக் கடமையைத் தமிழ் நாடு அரசு செவ்வனே முழுமையாக உணர்ந்திருக்கிறது.

இன்றைய தமிழ்நாடு அரசு அண்ணாவின் அரசு ஆகும். இதனை நமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு முறையிலும், வகையிலும் நினைவுறுத்தியிருக்கிறார்கள்.

இதுவேதான் அண்ணாவின் வழி - அன்பு வழி-அமைதி வழி. அதே வழியில் தான் தமிழக முதல்வரும் தவறாது தொடர்ந்து செல்கின்றார்கள்.

மைய - மாநில உறவினை இணக்கமான நல்லெண்ணத்தின் மூலம்தான் உருவாக்கி-உருப்படுத்த முடியும் என்று அண்ணா சொன்னவை தாரக மந்திரமாகக் கொண்டு தமிழக அரசு செயல்பட்டு வருகிறது.

இதனைச் சுட்டிக் காட்ட வேண்டுமானால் பிப்ரவரி திங்களில் தமிழகச் சட்ட மன்றப் பேரவையிலும் - மேலவையிலும் நடைபெற்ற ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து தமிழக முதல்வர் ஆற்றிய உரையில் ஒரு பகுதியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் பிரச்சனை பற்றிப் பேசிய முதல்வர், மைய அரசோடு மாநில அரசு எவ்வாறு நடந்து கொள்ள விரும்புகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நாட்டின்

**கடைசி அட்டையில்**
**மதுரையில் நடைபெற்ற சித்திரைப் பொருட்காட்சியில் (1982) செய்தித் துறை அரங்கின் முகப்பு**

நலம் முக்கியமே தவிர, அரசியல் ஆதாயம் அல்ல.

''கூடுமான வரையில் இந்தியப் பேரரசோடு சுமுகமான வகையில் மீண்டும் கேட்டு எழுதி பதில் பெற்று அவர்களுக்கு விளக்கம் தந்து, அவர்களது கருத்துக்களை மாற்றிக் கொள்ளச் செய்ய நாங்கள் விரும்புகிறோமே தவிர, வேண்டுமென்றே ஒரு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி அதனால் நாம் போடுகின்ற திட்டங்கள் அனைத்தும் தடைபட்டு விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை எங்களுக்கு உள்ளது'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த முறையைத்தான் இந்திய துணைக்கண்டத்தை ஆளுகின்ற, பிரதம அமைச்சர் இந்திரா அம்மையாரும் விரும்புகிறார்கள்.

சுமுகமான ஒரு நல்லுறவை உருவாக்க இதைவிட இணக்கமான அணுகுமுறை வேறு எதுவும் இருக்க முடியாது. நாடாள வந்தோருக்கு, நாட்டு மக்கள் நலந்தான் முக்கியமே தவிர தங்களது சொந்த விருப்பு வெறுப்புகள், வீம்புகள், பிடிவாதங்கள் முக்கியமல்ல. அரசியல் ஆதாயங்கள் அல்ல. இதனை மிகப் பெரிய ராஜதந்திரம் என்று கூறினாலும் சரி அல்லது ஒரு சராசரி மனிதனின் சமர்த்தான வாதம் என்று சொன்னாலும் சரி இந்தியாவைப் போன்ற இவ்வளவு பெரிய நாட்டில் இத்தகையதொரு கண்ணோட்டம்தான் மக்களுக்கு நிலைத்த நன்மைகளைச் செய்வதற்கு உதவியாக இருக்குமே தவிர வேறொன்றும் அல்ல

மைய அரசோடு மாநில அரசுகள் ஒத்துப் போவதன் வாயிலாகவும்-மாநில அரசுகளை மைய அரசு அரவணைத்துச் செல்வதன் வாயிலாகவும் ஒரு அமைதியான சூழ்நிலை நாடெங்கும் உருவாக வேண்டும். அப்போது தான் இரு அரசுகளும் இணைந்தும் தனித் தனியாகவும் வகுத்துச் செயல்படுத்தும் நல் வளர்ச்சித் திட்டங்கள் முழு வெற்றியடைந்து இவற்றின் முழுப்பலன் மக்களுக்குக் கிடைக்கும்

இந்த உணர்வோடுதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தமிழக அரசு, மைய அரசோடு தனது நல்லுறவை வளர்த்து வருகிறது. வலுவுள்ள மாநிலங்கள் மூலம்தான் வலுவான நாடு அமைக்க முடியும் என நம்புகிறது, சுமுகமான உறவு தமிழகத்திற்கும் மத்திய அரசுக்கும் நிலவி வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்வதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்

*[16.5.82 அன்று வானொலியில் ஆற்றிய உரை]*



## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கலைக் களஞ்சியங்கள் தயாரிப்பு

சென்னையில் 20.5.82 அன்று கூடிய தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நிதிக்குழு ஆகியன, தமிழ்ப் பல்கலைக் கழகத் தலைமையின் கீழ் 20 தொகுதிகள் கொண்ட அறிவியல் கலைக் களஞ்சியம், 14 தொகுதிகள் கொண்ட சமூகவியல் கலைக் களஞ்சியம் மற்றும் 10 தொகுதிகள் கொண்ட தமிழ்ப் பேரகராதி ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டு தொடங்கி, 1986 மார்ச் மாதத்தில் முடிவுறும். ஆண்டுதோறும் இதற்காகும் செலவு தோராயமாக ரூ. 13 இலட்சமாகும். மத்திய அரசு மற்றும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து உதவிகள் பெறப்படும். முதல் இரண்டு அகராதிகள் தமிழ் பேசுவோர்களுக்கு நவீன செய்திகளைக் கொண்டதாக வெளிவரும். மூன்றாவது அகராதி தமிழ் இலக்கியங்களில் கிடைக்கக் கூடிய சொற்களின் விரிவான அட்டவணையைக் கொண்டிருக்கும்.

### தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு நாணயங்கள் புத்தகங்கள் மற்றும் ஓலைச் சுவடிகள் அன்பளிப்பு

பாண்டிச்சேரி வருவாய்த் துறைச் செயலாளரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு.பி. எல். சாமி அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களிடம் 20.5.82 அன்று அரிய நாணயங்களை கண்காட்சியில் வைப்பதற்காக வழங்கினார்கள். அவருடைய மறைந்த சகோதரரும் ஆராய்ச்சியாளருமான திரு.பி. ஜோசப் அவர்களின் பரிசாக அந்த நாணயங்களைக் காட்சிக்கு வைக்கலாம் எனவும் திரு பி.எல்.சாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரி முன்னாள் முதல்வர் திரு கே.எஸ். கணபதி அவர்கள் அச்சிட்ட அரிய புத்தகங்களையும் மற்றும் 300 ஓலைச் சுவடிகளையும் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திற்கு வழங்கினார்கள்.

வட ஆர்க்காடு மாவட்டம், ஒடுக்கத்தூர் திரு. பி. அ. வேதவியாசர் அவர்கள் தமது தந்தை பெயரால் ஆறு பனை ஓலைச் சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்துள்ளார்கள்.


இச்சுவடியில் வள்ளலாரின் திருவருட்பாவில் இடம்பெற்ற சில உபதேசங்கள் உரை நடையாகத் திரட்டப்பட்டுள்ளன.

பதஞ்சலி மாமுனிவர் அருளிச் செய்த ஞானத்திருப்புகழ் என்று நூலின்பெயர் முதலிலும் இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நூல் காப்பு வெண்பா ஒன்று சந்தப்பாக்கள் 8, ஆக மொத்தம் 9 பாடல்கள். இதனைத் தொடர்ந்து வருட பலன் (சோதிடம்) உரைநடையில் உள்ளது.

இரண்டு சுவடிகள் கயறு சார்த்திப் பார்ப்பதற்குரிய ஆருட ஏடுகள் (நிமித்த சோதிடம்)

ஒரு சுவடியில் மன்மதன் வரலாறு நாட்டுப்பாடலாக உள்ளது. இறுதியில் ''கருணீகர் குலத்தில் தோன்றிய சாமிநாதன் விளம்பரம் செய்திட்டானே'' என்று கூறப்பட்டுள்ளது. இது இந்தச் சாமிநாதன் அவர்களால் இயற்றப்பட்டது என்று கொள்ளவும், அல்லாமல் இவரால் அவைகளில் பாடிப் பரப்பப்பட்டது என்று கொள்ளவும் இடமுள்ளது.

ஒரு சுவடியில் அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் 110 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.



# மாமல்லபுரம் மேம்பாட்டுத் திட்டம்



தமிழகத்தில் ஏராளமான அமைந்துள்ள சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வாய்ப்புகளை அறிந்தே, இவ்வரசு சுற்றுலா வளர்ச்சிக்கென மிக முக்கியயத்துவம் அளித்து வருகின்றது.

## மாமல்லபுரம்

மாமல்லபுரம் அழகிய கடற்கரையும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். சுற்றுலா வாய்ப்புக்கள் மிக்க இவ்விடத்தை இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுவினர், கிழக்கு மேற்குக் கடற்கரைப் பகுதிகளை ஆய்வு செய்து, கோவா, கோவளம், மாமல்லபுரம் ஆகிய மூன்று கடற்கரைச் சுற்றுலாத் தலங்களையும் மேம்பாடு செய்ய பரிந்துரைத்து உள்ளனர்.

இதன் அடிப்படையில் ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டத்தினை தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை வகுத்துள்ளது.

அதன் முக்கிய அம்சங்கள்:

1. பலதரப்பட்ட வருவாய் உள்ளவர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் தங்குமிட வசதிகளை விரிவு செய்தல்.

2. ஒலி, ஒளிக்காட்சி, உலாத் தலங்கள், திறந்த வெளி அரங்கம், திறந்த வெளி அருங்காட்சியகம் போன்ற பொழுதுபோக்கு வசதிகள் ஏற்பாடு செய்தல்.

3. குடிதண்ணீர், சுகாதார அடிப்படை மருத்துவ வசதிகள் செய்து தருதல்.

4. சுற்றுலாப் பயணிகள் முகாம், பேருந்துகள் நிறுத்துமிடம் போன்று வசதிகள் செய்தல்.

5. நினைவுச் சின்னப் பகுதியிலிருந்து போக்குவரத்தைத் திருப்புவதற்காகச் சுற்றுச் சாலை அமைத்தல்.

6. பேருந்து நிலையம் அமைத்தல்

7. அலங்கார வசதிகள் அமைத்தல்

8. அங்காடிகள் அமைத்தல்.

9. இவை சார்ந்த பிற வசதிகள் அமைத்தல் ஆகியவையாகும்.

சுற்றுச் சாலைகள் அமைக்க கீழ்க்கண்ட 5 திட்டங்களுக்கு இந்திய அரசிடம் உதவி கோரப்பட்டுள்ளது.

| | ரூ. இலட்சம் |
|---|---|
| 1. சுற்றுச் சாலைகள் அமைக்க | 160.00 |
| 2. சுற்றுச் சாலையை ஒட்டி ஊர்திகள் நிறுத்துமிடம் அமைக்க | 16.00 |
| 3. பேருந்து நிலையங்கள் அமைக்க | 50.00 |
| 4. அங்காடிகள் அமைக்க | 32.00 |
| 5. அலங்கார வசதிகள், பொழுதுபோக்கு வசதிகள் செய்தல் | |
| 1. அருச்சுணன் தவம் பகுதியிலிருந்து கடற்கரை கோயில் வரையிலும்<br>2. கலங்கரை விளக்கத்திலிருந்து ஐந்து ரதப்பகுதி வரையிலும் | 104.00 |
| ஆக மொத்தம் | 362.00 |

இதற்காக முதற் கட்டமாக ரூ. 25.00 இலட்சம் அனுமதிக்கும்படி கேட்ட கோரிக்கை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## ஒலி-ஒளிக்காட்சி

மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்கும் திட்டம் வெகு காலத்திற்கு முன்பே தரப்பட்டது. ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் இப்பணி தள்ளிப் போய்க் கொண்டிருந்தது. கடந்த 3 ஆண்டுகளாக மத்திய அரசுடன் இது குறித்து வலியுறுத்தியதன் பயனாக இதற்கான செலவில் 50 தொகையை உதவியளிக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய தொல் பொருள் ஆய்வுத்துறையின் அனுமதி எதிர் பார்க்கப்படுகிறது. பிலிப்ஸ் இந்தியா நிறுவ

னம் இதற்கான நடைமுறை சாத்தியக் கூறு அறிக்கையை அளித்துள்ளது. இதற்கான அனுமதி இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி இத்திட்டத்தின் கீழ்க்கண்ட முக்கிய சில பணிகளைத் தமிழக அரசு தனது நிதியிலிருந்து நிறைவேற்றத் தொடங்கி உள்ளது. அவை யாவன:

1. குறைந்த செலவில் சுற்றுலா மேற்கொள்ளுபவர்களுக்காகச் சுற்றுலாப் பயணிகள் முகாம்.

2. ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம்.

3. மாமல்லபுரத்தில் கடற்கரைப் பொழுதுபோக்கு வளாகத்தினை விரிவுபடுத்துதல்.

மேற்கண்ட திட்டங்கள் பற்றிய குறிப்பு வருமாறு:

## சுற்றுலாப் பயணிகள் முகாம்

இதுவரை மாமல்லபுரத்திலுள்ள பயணிகள் தங்குமிடங்கள் வசதிபெற்ற பயணிகள் மட்டும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளன. எனவே, குறைந்த செலவில் பயணங்கள் மேற்கொள்ளும் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் உள்ள பயணிகள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் விரைவில் தொடங்கப் பெறவிருக்கும் சுற்றுலாப் பயணிகள் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம் கடற்கரையொட்டி கடற்கரைக் கோவிலுக்குச் செல்லும் வழியில் 10 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இதில் 40 படுக்கைகள் கொண்ட இளைஞர் விடுதி, 12 குடில்கள், கூடாரங்கள் ஆகியவற்றுடன் உணவு விடுதி, ஊர்தி நிறுத்துமிட வசதி, கழிவறை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. இந்த முகாம் சுமார் 12 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் விடுதி மூன்று பெரிய படுக்கையறைகள் கொண்டவை. இதில் ஆடவர், மகளிருக்குத் தனித்தனியே குளியலறை வசதிகள் உண்டு. மாமல்லபுரத்திற்குப் பெருமளவில் வருகைதரும் சுற்றுலாக் குழுக்கள் இளைஞர்களுக்குப் பயன்தரும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. அழகிய சூழ்நிலைக்கு மத்தியில் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூடாரங்களில் தேவையான வசதிகள் உள்ளன.

குடும்பத்தினர் தங்குவதற்கான எல்லா வசதிகளும் குடில்களில் உண்டு. இந்த மூன்று வகையான தங்குமிடங்களுக்கும் குறைந்த வருவாய் உள்ளவர்கள் செலவிடக்கூடிய வகையில் மிகக் குறைந்த கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## திறந்தவெளி அருங்காட்சியகம்

சுற்றுலாப் பயணிகளுக்குக் கல்வி புகட்டுதல், பொழுதுபோக்கு வசதிகள் அளித்தல் ஆகிய இரு நோக்கங்களுடன், திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்று ஜப்பான் நாட்டில் ஹோகோன் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரத்திலுள்ள அருங்காட்சியகமும், ஜப்பானில் உள்ளது போன்று விளங்கும்.

இந்த திறந்தவெளி அருங்காட்சியகம் கடற்கரைப்பகுதியில் 20, 25 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படும். இதற்காக மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் 33 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 6 அல்லது 7 ஏக்கர் பகுதி சுற்றுலாப்பயணிகள் முகாமுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப்பகுதி நில அமைப்பு கட்டடக்கலை நிபுணர் உதவியுடன் அலங்காரமாக, நிழல்தரும் அழகிய மரங்கள், புல்வெளிகள், அலங்காரச் செடிவகைகளுடன் அமைக்கப்படும்.

இப்பூங்கா, நமது வரலாறு, பழம்பெரும் கலாச்சாரம், இவைகளை எடுத்து கூறும், தலைச்செல்வங்கள் நிறைந்தவையாக இருக்கும். மாமல்லபுரத்திலிருக்கும் சிற்பக்கலைப் பள்ளி, இந்தப் பொருட்களை உருவாக்கும் பணியினை மேற்கொள்ளும். அரசு கொள்கையளவில் இதற்காகச் சுமார் 40 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்த அருங்காட்சியகம் நாட்டிலேயே முதலாவதாக அமையும். இதற்கான பணி விரைவில் தொடங்கும். இது உள்நாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குக் கல்வி அறிவு வழங்குவதாக அமையும்.

## மாமல்லபுரத்தில் கடற்கரைப் பொழுதுபோக்கு வளாகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரைப் பொழுதுபோக்கு வளாகம் ரூ. 36.60 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படுகிறது. இதில் 18 நெடுங்கிய குடில்களும் 10 சொகுசு குடில்களும் புதியாக சேர்க்கப்படும். இவைதவிர நீச்சல்குளம் போன்ற பொழுதுபோக்கு அம்சமும் அமைக்கப்படும். பெரிய உணவு விடுதியும் கட்டப்பட்டு வருகிறது. இதில் பின்னர் கூட்ட அறை ஒன்று ஏற்படுத்தவும், சுற்றுலாக் கழகம் திட்டமிட்டுள்ளது.

## பிற துறைகளின் பணிகள்

மாமல்லபுரத்தில் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்ய உள்ளாட்சி, ஊரக வளர்ச்சித்துறை திட்டமிட்டுள்ளது.

| | ரூ. இலட்சம் |
|---|---|
| 1. ஒளி விளக்குகளில் முன்னேற்றம் செய்ய .. | 2 |
| 2. அங்காடிகள் பகுதிக்கு .. | 5 |
| 3. பேருந்து நிலையம் .. | 5 |
| 4. பொழுதுபோக்கு வசதிகள் .. | 2 |
| 5. திறந்தெவளி அரங்கம்அமைக்க .. | 3 |

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் ரூ.55 இலட்சம் செலவில் பாலாற்றிலிருந்து மாமல்லபுரம் நகருக்கு 6.75 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தினை ஆய்ந்து வருகின்றனர்.

நல்வாழ்வு, குடும்ப நலத்துறை, மாமல்லபுரத்தில் 12 படுக்கைகொண்ட ஒரு மருத்துவமனையினை ரூ. 3.50 இலட்சம் செலவில் அமைக்க கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

ஒரு நவீன பேருந்து நிலையமும் அமைக்க பல்லவன் போக்குவரத்துக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



அட்டை சொல்லும் கட்டுரை

# பண்டிதமணி நூற்றாண்டு நிறைவு விழா

நிகழ்ச்சித் தொகுப்பு :
## தமிழ்ப்பித்தன்

பைந்தமிழும் வடமொழியும் பாங்குறக் கற்றுத் தேர்ந்து இருமொழிப் புலவராக ஒளி விசித் திகழ்ந்த பண்டிதமணி கதிரேசனார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா தமிழக அரசின் சார்பில் 21-5-'82 அன்று கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

அரசுக் கலைஞர் டாக்டர் மதுரை எஸ். சோமசுந்தரம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியுடன் விழா துவக்கம் ஆகியது.

விழாவுக்கு வந்திருந்தோரை டாக்டர் ஔவை. நடராசன் அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''காட்சிக்கு இனியர்; பேசுதற்கு இனியர்; உடை அழகிலும் இனியர் ஆகத் திகழ்ந்தவர் பண்டித மணி அவர்கள். காணும் போதெல்லாம் இனிமை தவழ்கின்ற தமிழ் உருவமாக அவர் விளங்கினார்''

விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர். ம. பொ. சி. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''பண்டிதமணி, தமிழிலே நிறைபுலமை பெற்ற ஒரு பெரும் புலவர் ஆவார். தமிழ்ப் பண்பாட்டின் வடிவமாக அவர் திகழ்ந்தார். பிறருடன் கருத்து வேற்றுமைகள் இருந்த போதிலும் அவர்களிடம் பண்பாகப் பேசுவதைத் தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தார்''

அடுத்து உரையாற்றிய டாக்டர் ந. சஞ்சீவி தெரிவித்தார் :

''ஒரு மனிதன் எத்தனைமொழிகளை வேண்டுமானாலும் கற்கலாம்; ஆனால், தாய்மொழியன்றி வேற்று மொழிகளுக்கு அடிமைப்பட்டு விடக்கூடாது என்பதைப் பண்டிதமணி எடுத்துக் காட்டினார்''

பண்டிதமணி கதிரேசனாரின் உருவப்படத்தைத் திறந்து வைத்த டாக்டர் ராஜாசர் எம். ஏ. முத்தையா செட்டியார் எம். எல். சி. அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''எப்போதும் ஆராய்ச்சி செய்யும் இயல்பு படைத்தவராக விளங்கினார் பண்டிதமணி.''

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் ந. ரா. முருகவேள் தெரிவித்தார் :

''நூலார், நூல் வல்லார், நூலாருள் நூல் வல்லார் என மூன்று வகையினர் உண்டு. பண்டிதமணி அவர்கள் நூலாருள் நூல் வல்லாராகத் திகழ்ந்தார்.''

பின்னர் உரையாற்றிய டாக்டர் மெ.சுந்தரம் குறிப்பிட்டார்:

''எந்தத் துறையில் நுழைந்தாலும், இலச்சினை பொறித்தவர் பண்டிதமணி; அவர் நிறைகுடமாக விளங்கினார்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் தெரிவித்தார்:

''வடமொழிப் புலமை பெற்றிருந்தும் தமிழ் மூலமே கல்வி கற்க வேண்டும் என நினைத்தவர் பண்டிதமணி அவர்கள்''

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் லெ. ப. கரு.இராமநாதன் செட்டியார் தமது உரையில் தெரிவித்ததாவது :

''அறிவு, ஆற்றல், அருள், அன்பு ஆகிய பல பண்புகளைப் பெற்றிருந்தவர் பண்டிதமணி அவர்கள்.''

அடுத்து உரையாற்றிய மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தமது உரையில் குறிப்பிட்டார் :

''இனிமை, எளிமை, ஆழமுடைமை ஆகிய மூன்று இயல்புகளும் படைத்த நூல்களை ஆக்கியவர் பண்டிதமணி.''

அடுத்து, விழா நிறைவுப் பேருரையாற்றிய மாண்புமிகு,

நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்:

'தமிழகம் பெருமை பெற— பூரிப்புப் பெற-ஏற்றம் பெற— சான்றோர்களின் பிறந்தநாள் விழாக்களைக் கொண்டாடி வரு கிறோம்.

''தமிழகம் எந்தநாளும் விழாக் கோலம் பூண்டிருந்தது. சங்க காலத்தில் மதுரை, காஞ்சி, வஞ்சி, உறையூர் போன்ற நகரங்கள் எல் லாம் விழவு மலி மூதூர்களாக விளங்கின.

''இந்திய நாட்டின் இருபத்தி ரண்டு மாநிலங்களிலும் விழா நடத்தி மகிழ்கின்ற பெருமை கொண்டது தமிழ்நாடுதான்.


''பண்டிதமணி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை அரசின் சார்பில் நாம் கொண் டாடுகிறோம். பண்டிதமணி அவர்கள், உழைப்பால் உயர்ந்து தானே முயன்று, தமிழ்மொழியை ஆழ்ந்து கற்று, விரிந்த அறி வினைப் பெற்று, பிறர் பாராட் டத் தக்க அளவிற்குத் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண் டவர்.

''தமக்கு இருந்த உடல் ஊனத்தை அவர் ஊனமாகக் கருதவில்லை. 'ஊனமுற்றத னால்தான் நான் தமிழ்க் கல்வி கற்று மேன்மை எய்த முடிந்தது. அதற்காக ஊனத்துக்கு நன்றி சொல்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

''சொல்லுக்குச் சொல் சுவை காண வேண்டும் என்பது அவரது கருத்து. கவிதைக்கு எவரும் பதவுரை கூறலாம்; பொழிப் புரை கூறலாம்; கருத்துரையும் கூறலாம்; ஆனால் நயவுரை கூறு தல் அரிது; பண்டிதமணி அவர்கள் நயம் சொல்லி விளக்குவது மிகுந்த பாராட்டுக்குரியதாக இருந்தது.

''சங்க இலக்கியங்களான அக நானூறு, நற்றிணை, குறுந் தொகை, மற்றும் சீவகசிந்தா மணி போன்ற நூற்களுக்கெல் லாம் அவர் நயம் சொல்லி விளக்கும் பாங்கு சிறப்புடைய தாக இருந்தது.''

விழா நிறைவுரைக்குப் பின்னர் செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் நன்றியுரை கூற விழா இனிது முடிந்தது. பண்டித மணி அவர்களின் நூறாவது ஆண்டு நிறைவு விழா அனை வரின் நெஞ்சங்களிலும் நிறைந்த விழாவாகத் திகழ்ந்தது.




ஜந்தர் மந்தர்-கட்டடத்தின் வரை படம் ஒன்பதாவது ஆசியப் போட்டியின் சின்னமாகும்.

புதுடில்லியில் நகரின் நடுவே யுள்ள வான ஆராய்ச்சிக் கூடம் ஜந்தர் மந்தர். கி. பி. 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஜந் தர் மந்தர் கட்டடத்தின் மைய கட்டடமே ஆசியா1982ன் சின்ன மாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளது.

சூரியனின் உயரக்கோணத்தை அளக்கும் கருவியை (AZIMUTH) கட்டடமாகக் கட்டி வைத்துள் ளார் இதன் சிற்பி.

**வரலாற்றுச் சிறப்பு:** ஜந்தர் மந்தர் இந்தியாவின் தலைநக ரான டில்லியின் மையத்தில் உள் ளது. கி. பி. 16ஆம் நூற்றாண் டில் கட்டப்பட்டது. இந்திய வான் ஆராய்ச்சி மற்றும் கட்ட டக் கலையின் நினைவாலயமாக உள்ளது. அறிவு, நேர்மை, வேட் கைகளின் சின்னமாகத் திகழ் கிறது. இம்மூன்று காரணங்க ளால் ஜந்தர் மந்தர் ஒன்பதாவது ஆசியப்போட்டியின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**தனித் தன்மை:** ஜந்தர் மந்த ரின் இந்த வரைபடம் இதுவரை யில் பயன்படுத்தப்படாததால் இதற்கெனத் தனித்தன்மை கொண்டதாக அமைகிறது.

**எளிமை:** தடிப்பான இதன் கருநிறக் கோடுகள் எளிமையாக வரைந்து கொள்ளக் கூடியவை

**அதிர்ஷ்டக்குறி:** குட்டி யானை யின் (குழந்தை) நடை ஒன்ப தாவது ஆசியப் போட்டியின் அதிர்ஷ்டச் சின்னம். அதன் நெற்றியிலுள்ள செந்தூரப் பொட்டுதான் வெற்றித் திலகம்

வாலறிவு

வலிமை

நம்பிக்கை

ஆசியவற்றுக்கான யானை இந் திய நாட்டின் தெய்வீக இலக்கி யங்களிலும் கிராமீயக் கதை களிலும் போற்றப்படுகிறது.

வெற்றியைத் தேடி விளையாடுவோருக்குச் சித்தியைத் தர அத்தி (யானை) முன் வருவது நற்குறி என்று நம்பப்படுகிறது.

# நகல் எடுக்கும் பணிக்கு நல்லதொரு இயந்திரம்

ஜி. ஆனந்தன்

அறிவியல் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. அலுவலகப் பணிகளை விரைவுபடுத்துவதற்குத் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்றவை தோன்றின. தட்டச்சு செய்வதன் மூலம் எடுக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளன. அதிக அளவில் தேவைப்படும்போது ஸ்டென்சில் தயாரித்து அதன் மூலம் நூற்றுக்கணக்கான பிரதிகள் எடுக்கப்பட்டன. அவற்றை விட வேகமான முறையில் பிரதிகள் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் விஞ்ஞானிகளின் இதயத்திலே சுற்றிச் சுழன்றன. அதன் விளைவாக தட்டச்சு செய்ய வேண்டியதின்றி 'ஜெராக்ஸ்' என்னும் புதிய முறையைக் கண்டுபிடித்தனர். மூலப் பிரதி புகைப்படக் காமிராவினால் நெகட்டிவ் எடுக்கப்பட்டு, உடனடியாக நகல் பிரதி எடுக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான பிரதிகளை எடுத்துத் தள்ளுவதற்கு இந்த இயந்திரம் பயன்பட்டது. என்றாலும் தானாகவே இதனால் பிரதி எடுக்க முடிவதில்லை. மனித சக்தி தேவைப்படுகிறது. எனவே அறிவியலார் மென்மேலும் இந்தத் துறையில் முயற்சி செய்தனர். அதன் விளைவு, மின்னாற்றலால், தானே இயங்கும் **'போட்டோமெக்ஸ் எம். பி. 50'** என்னும் நகல் எடுக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இயந்திரம் பல்வேறு வகைகளில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. நிமிடத்திற்கு 12 பிரதிகள் எடுக்கலாம். கறுப்பு மை, நீல மை ஆகியவற்றால் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் மட்டுமின்றி பல வண்ணங்களில் அச்சடிக்கப்பட்ட காலண்டர், படங்கள் ஆகியவற்றைக்கூட வெகு விரைவில் கறுப்பு வண்ணத்தில் நகல் எடுக்கிறது இந்த இயந்திரம்.

இயந்திரத்தில் உள்ள டயலில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் பிரதிகளுக்குரிய எண்ணை அழுத்தினால் போதும். தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக, பிரதிகள் தாமாகவே நகலாக்கப்பட்டு வெளிவருகின்றன.


எவ்வகையான சாதாரணத் தாள்களையும் பயன்படுத்தி நகலை எடுத்துக் கொள்ளலாம். இதற்கென உயர்ந்த காகிதமோ- தனியான காகிதமோ தேவை இல்லை.

முன்பு இந்த இயந்திரம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. தற்போது முழுக்க முழுக்க இந்தியாவிலேயே மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்படுகிறது. இந்த இயந்திரத்தை உருவாக்கும் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ளது. ஆக்ரா, ஆமதாபாத், பங்களூர், பம்பாய், போபால், கல்கத்தா, கொச்சி, ஹைதராபாத், ஜெய்பூர், லக்னோ, சென்னை, பாட்னா ஆகிய நகரங்களில் கிளை அலுவலகங்கள் உள்ளன.

சென்னையில், அண்மையில் இதன் கிளை நிறுவனம் துவக்கப்பட்டது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். நிறுவனத்தின் விற்பனைத்துறைப் பொது மேலாளர் திரு என்.வி. நாதனும், கிளை மேலாளர் மணியும் இயந்திரத்தை இயக்கிக் காண்பித்து விளக்கம் சொன்னார்கள்.

இந்த இயந்திரத்தின் உதவியினால் மூலப் பிரதிகளுக்குச் சேதமின்றி நகல் எடுக்க முடிகிறது. அதுவும் விரைவில், குறைந்த செலவில் எடுக்க முடிகின்றது என்பதை எண்ணும்போது நகல் எடுக்கும் பணிக்கு நல்லதொரு தொண்டனாக இது விளங்குகிறது என்று சொல்லலாம்.








# ஓவியர்களுக்கு உதவுவோம்!

தமிழ்நாடு ஓவியக் கலைத் தொழிலாளர் முன்னேற்றப் பேரவை சார்பில்நடத்தப்பெற்ற இரண்டாவது மாநாட்டில் மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

சென்னையில், திரு. வி.க. மணிமண்டபத்தில் நடைபெற்ற (16.5.82) இம் மாநாட்டின்துவக்கத்தில் ,மயிலையிலுள்ள திருவள்ளுவர் சிலையிலிருந்து அலங்கார வண்டிகளும் இடம்பெற்ற மிகப் பெரிய ஊர்வலமொன்று நடைபெற்றது. ஓவியர்கள் அணி வகுத்த இதில் பல்லாயிரவர் பங்கேற்றனர்.

சாந்தி ஆர்ட்ஸ் கன்னையா, கார்த்திகேயன் குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு துவங்கியது தமிழ்நாடு ஓவியக் கலைத் தொழிலாளர் முன்னேற்றப் பேரவையின் இரண்டாவது மாநாடு. அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் திரு, எஸ். எஸ். வாசன் வரவேற்புரையாற்றினார்.


ஆர்.வி.ராகவன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் எஸ். கணபதி, ஜி. சண்முகம், சி.ம்ணி, ஜி. சேது, அசரியா, பா. அங்கமுத்து, எஸ்.வி.வேலு, கிருஷ்ணா, சண்முகம், ஆர்.வி. ராஜு ஆகியோரும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. தங்கபாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு எஸ்.கே. சீனிவாசன், பச்சையப்பன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு, ராஜ் மோகன், தலை சிறந்த ஓவியர்களான ராகி, உபால்டு, ஜெயராஜ். மாருதி, ஏ.எஸ்.நடராஜன், ஆர்.டி. ஜெயராமன் ஆகியோரும் மா. செங்குட்டுவன், நடிகர் ரவிச்சந்திரன், திரைப்பட இயக்குநர் துரை ஆகியோரும் பங்கேற்று உரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில், பெயர்பெற்ற 'பேனர் ஆர்ட்டிஸ்ட்' திரு,பி.ஈ. பிரம்மத்திற்கு மாண்புமிகு அமைச்சரும், திரு, உபால்டுக்குத் திரைப்பட இயக்குநர் துரையும் திரு, ஜெயராஜூக்கு நடிகர் ரவிச்சந்திரனும் திரு. மாருதிக்கு தங்கபாலுவும் பொன்னாடை போர்த்தினர்.







நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்

இந்த மாநாட்டில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

இரண்டு காரணத்தாலே இப்போது இந்த மாநாட்டில் நான் பங்கேற்றிருக்கிறேன். முதலாவது-உங்கள் பிரச்னைகளை அரசுக்குத் தூதுவனாக எடுத்துச் செல்ல முடியும். அடுத்தது, என் மூத்தமகள் ஓவியக் கலைத் தேர்வுக்குப் படித்து வருகிறாள் என்பதால் எங்கள் குடும்பத்திற்கும் ஓவியக் கலைக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறையில் இருக்கும்போது போய் சந்தித்தோமானால் இன்றைக்கு இந்த புத்தகத்தைப் படித்தேன் அந்தப் புத்தகத்தைப் படித்தேன் என்று கூறுவதோடு, மனதை அமைதிப்படுத்திக் கொள்வதற்காக-ஒருமைப் படுத்திக் கொள்ளுவதற்காகச் சிறிது நேரம் ஓவியம் போட்டுக் கொண்டிருந்தேன் என்பார்கள்.

அப்படிப்பட்ட உன்னதமான ஓவியத் தொழிலில் ஈடுபட்டுள்ள உங்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் வேறுபாடு உண்டு. மற்ற தொழிலாளர்கள் ஒரே தொழிலையே அதாவது ஒரே பொருளையே எண்ணிக்கையில் பலவாகச் செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்கள். நீங்களோ ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாகச் செய்யக்கூடிய கற்பனா சக்தி மிக்கவர்கள்.

இங்கே பதினாறு அம்சக் கோரிக்கை ஒன்றை வைத்திருக்கிறீர்கள். உங்கள் கோரிக்கைகளில் நியாயம் இருப்பதை நான் உணர்கிறேன். ஆகவே இவற்றை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இவைகள் நிறைவேற உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன்.

ஒன்பதாவது கோரிக்கையாக-அரசு எடுக்கிற விழாக்களில் எழுதுகின்ற ஓவியங்களோ, குடியரசு விழா போன்ற நேரத்தில் அமைகின்ற ஊர்வல வண்டிகளோ, பொருட்காட்சியில் அமைகின்ற அரசு அரங்குகளோ தனிப்பட்ட தொழில் தெரியாத வசதி படைத்த தரகர்களிடம் கொடுக்காமல், எமது பேரவையை அணுகி ஆலோசனை பெற்று, தொழில் மேம்பாட்டை வளர்த்து சிறந்த ஓவியர்களுக்கே வழங்கி அப்பணியை முடிக்க வேண்டுமெனத் தமிழக-இந்திய அரசைக் கேட்டுக் கொள்வதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.


ஓவியர்களாகிய நீங்கள் ஒற்றுமையாக இருந்து தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைப்பீர்களானால் தான் உங்கள் உழைப்பின் பயனை நீங்கள் அனுபவிக்க முடியும்-திறமையற்ற, வசதி படைத்த இடைத்தரகர்களுக்கு வேலை கிடைப்பதைத் தவிர்க்க முடியும். அரசும் உங்களுக்கு உதவ முடியும்.

படைப்பாளிகளாகிய உங்கள் படைப்புகளுக்கு உரிய பொருள் கிட்டவும், உங்களுக்கெல்லாம் பணிப்பாதுகாப்பு கிடைக்கச் செய்யவும் இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

மாநாட்டு முடிவில் ஓவியர் இ.சேது நன்றி கூறினார்.





# செல்வச் செழிப்புக்கு கால்நடை வளர்ப்பு!

டாக்டர்
சி. ஏ. கோபாலகிருஷ்ணன்,
டாக்டர்
எம். ஆர் விசுவநாதன்,
கால்நடை பராமரிப்புத் துறை,
மதுரை விவசாயக் கல்லூரி.

பசு, எருது, காளை, எருமை, வெள்ளாடு, செம்மறியாடு பன்றி, கோழி அனைத்தும் கால்நடைச் செல்வங்கள். பண்ணையில் விவசாயியுடன் இணைந்து கால்நடைகள் விவசாயத்திற்கும், விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக உதவுகின்றன.

இந்தியாவிலுள்ள ஆறு இலட்சம் கிராமங்களில் வசிக்கும் 500 மில்லியன் மக்கள் நீர்ப்பாசன வசதியுடைய இடங்களில் நெருக்கமாகக் காணப்படுகிறார்கள். மக்களுக்கு அடுத்தபடி இடத்திற்குப் போட்டியாக வருவது கால்நடைகளே. கிராமங்களில் சாதாரண சிறு விவசாயி தன் வசதிக்கேற்ப ஒரு இணை எருவுடன், ஒன்று அல்லது இரண்டுகறவை மாடுகள் வைத்திருப்பதைக் காணமுடியும். குறைந்தது ஒரு பசு அல்லது எருமையைக் கிராமங்களிலுள்ள சிறு விவசாயிகளின் வீட்டில் காணமுடியும். முக்கியமாக நிலத்தை உழுவதற்காக எருதுகளை உற்பத்திச் செய்வதுதான் சிறு விவசாயி பசு மாட்டை வளர்த்து வருவதன் உள்நோக்கம்.

பசுவின் மூலம் பாலைப்பெறுவது, சாதாரண பசுவைப் பராமரிக்கும் சுழற்சியில் கிடைக்கும் பொருளாகத்தான் கருதப்பட்டு வருகிறது. பெரும்பாலான மாடுகள் சத்தற்ற வைக்கோல் தட்டு பருவமழைக்குப் பிறகு துளிர் விடும் பசுந்தீவனங்களை மேய்ந்து உயிர் வாழ வேண்டிய கட்டத்திலிருக்கின்றன. நம்நாட்டு மாடுகள், எருமைகள் கிடைக்கும் தீவனத்திற்கேற்ப உடலைச் சிறிய அளவில் மாற்றிக்கொண்டு, இயற்கையாக வெப்பம் மிகுந்தும் ஆரோக்கியமற்ற சூழ்நிலையிலும் வாழ்ந்து காட்டக்கூடிய பிராணிகளாக நடமாடிக்கொண்டிருக்கின்றன.


எந்தச் சூழ்நிலை மனிதனுக்கு ஏற்றதாயிருக்கின்றதோ அந்த இடங்களில் மனிதனுடன் மாடுகளும் போட்டி போட்டு மனிதன் நிலப்பரப்பு விகிதம் குறைந்து, மாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஏக்கர் நிலத்திற்கு அதிகமாகவே இருந்து வருகின்றன. நன்கு செயல்படும் கலப்புப் பண்ணைகளினால் பால் உற்பத்தி அளவு ஒவ்வொரு மாடுகளின் மூலம் அதிகம் கிடைப்பதுடன், தனி நபர் உட்கொள்ளும் அளவும் அதிகரிக்கிறது. குறிப்பாக பால் உற்பத்தி சிறந்த முறையில் செயல்படுமிடங்களில் கலப்புப் பண்ணை சீரிய வழியில் செயல்படுகிறதென்று தெள்ளத்தெளிய தெரியவரும்.

பால் உற்பத்தியில் எதிர்நோக்கி உருவாகி வரும் சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்தால் இலட்சக் கணக்கான பேர் பால் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பது தெரியவரும். பால் உற்பத்தி செய்வோர் ஒரு எக்டர் நிலத்திற்குக் குறைவாக நிலத்தைப் பெற்றிருப்பது மேய்ச்சல் வசதியின்றியும் இருக்கும் சிறிய நிலப்பரப்பில் பசுந்தீவன உற்பத்திக்கு ஒதுக்கமுடியாத நிலையும், மழையையே நம்பி நிலச்சாகுபடி செய்வது, மழை பெய்யத் தவறிய காலங்களில் தீவன வசதி குறைந்து மாடும், மனிதனும் உணவு பற்றாக்குறையில் தவிப்பது, பண்ணையில் கிடைக்கும் சத்தற்ற வைக்கோலையும், அறுவடைக் காலங்களிலும், மேய்ச்சல் இடங்களில் கிடைக்கும் சொற்பத் தீவனத்தை உட்கொண்டு அதற்கு ஏற்றவாறு மாடுகள் பாலை அளித்து, உழுவதற்கு வேண்டிய காளைக் கன்றுகளைப் பெற்றுக் கொடுப்பது ஆகியவை நன்கு தெரியவரும்.

நம் நாட்டில் கால்நடைச் செல்வமும், விவசாயமும் ஒன்றுக்கொன்று உதவும் வகையில் நன்கு இணைந்து கலப்புப் பண்ணையும் செய்தால் ஆண்டு முழுவதும் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதுடன் வருவாயைப் பெருக்கவும் வழி உண்டாகிறது.

பால் உற்பத்தித் துறையில் முதன்மையானஇடத்தைப் பெறுவது கறவைப் பசு அல்லது எருமை. கறவைப் பசுக்கள், எருமைகளின் உணர்ச்சிகளுக்கேற்ப நாம் அன்றாடம் அவ்வப்

போது உடனடியாகக் கவனித்து நன்கு பராமரித்தால்தான் பசுக்களிடமிருந்து முழுமையான பலனைப் பெறமுடியும். நாட்டுப்பசு ஒரு லிட்டர் பாலை அளிப்பது அதன் கன்றைப் பராமரிக்கப் போதுமானதாகும். ஆனால் மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 10 லிட்டரிலிருந்து 40 லிட்டர் வரையில் பால் அளிக்கும் பசுக்களை நல்லமுறையில் இன விருத்தி செய்தும், நன்கு பராமரித்தும் உலகத்தில் பல பாகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் மிகுந்த பாலைப் பொழியும் கறவைப் பசுகள் பால் உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகவே மாறிவிடுகின்றன.




நல்ல கறவைப் பசு என்றால் நாள் ஒன்றுக்கு 8 முதல் 10 லிட்டர் பால் கொடுக்கவல்லதாக இருக்க வேண்டும். 300 நாட்கள் கொண்ட ஒருஈற்றில் 2220 முதல் 2400 லிட்டர் வரையில் பாலைப் பொழியும் பசுக்களே பண்ணை இலாபத்தை அளிக்க கூடியவையாகும்.

கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு ஒரு ஈற்றில் 1500 லிட்டர் வரையில் அளிக்கும் எருமை, பால் உற்பத்தியை இலாபகரமாக நடத்தவும், பால் உற்பத்திச் செலவினங்களைக் குறைக்கவும் உதவுகிறது. பால் பண்ணையை இலாபகரமாக நடத்த அதிக அளவில் பால் அளிக்கும் கலப்பின பசுக்களையே வளர்க்க வேண்டும் கலப்பினப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனால் ஏற்படும் பொருளாதார இலாபத்தைக் கணக்கிட்டால் அயல்நாட்டுக் கலப்பினப் பசுக்களை ஜெர்சி, ஹோல்ஸ்டிங் பிரிஷியன் கலப்பின பசுக்கள், நாட்டு பசுக்களைக் காட்டிலும் எட்டு முதல் பத்து மடங்கு அதிகமாகும்.


இந்திய உயர் இன பசுக்களான சிந்தி, ஹரியானா பசுக்களைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமாகவும் இலாபம் தருகின்றன. அதிக அளவில் அயல்நாட்டுக் கலப்பினப் பசுக்களை உற்பத்தி செய்து மொத்தப் பசுக்களின் எண்ணிக்கையில் ஐந்தில் நான்கு பாகத்திற்கு கலப்பின பசுக்களாக மாற்றினால் பயனற்ற பசுக்களின் எண்ணிக்கை பத்தாண்டுகளில் 50 விழுக்காடு குறைவதுடன் பால் உற்பத்தியும் இரு மடங்காகப் பெருகும்.

எருமைகள் சேற்றுழவில் மாடுகளைவிட மேன்மையாக உழுது ஆசியா கண்டத்தில் விவசாயத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. எருமைகளை ''ஆசியாவின் டிராக்டர்'' (Asian Mini Tractor), ''நடமாடும் உரச் சாலை'' (MobileFertiliser Factory) என்று செல்லமாகக் கூறப்பட்டாலும் உழவுத்தொழிலுக்கு மட்டுமின்றி பால் உற்பத்தியிலும் பெரும்பங்கு பெறுகின்றன. குறிப்பாக இந்தியாவில் எருமைகள் மொத்த பால் உற்பத்தியில் 55 விழுக்காட்டிற்கு மேல் பாலை அளிக்கின்றன. மனிதனால் புறக்கணிக்கப்பட்ட நார்சத்து மிகுந்த சத்தற்ற தீவன வகைகளை உட்கொண்டு நம் நாட்டின் மாறுபட்ட தட்ப வெப்பத்திற்கு ஈடு கொடுப்பதுடன் கடின உழைப்பையும், பாலையும், இறைச்சியையும் அளிக்கின்றன. சிறுநில உழவர்களுக்குப் பால் பொருள் முதலான உற்பத்தியைப் பெருக்க அடிப்படை இடுமுதல்களான (Basic Inputs) கலப்பினப் பசுக்களும் உழுவதற்கு வேண்டிய பவர் டில்லர்களும், டிராக்டர்களும் கிடைக்க முடியாத நிலையில் பால் உற்பத்திக்கும், உழவுத் தொழிலுக்கும் எருமைகள் ஊன்றுகோல்போல் நின்று வளர்க்கும் விவசாயிகளின் பொருளாதாரத்தை உயரும் வகையில் உதவும் என்பதில் ஐயமில்லை.



நம் நாட்டில் மாடு, எருமை மற்றும் ஆடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. செம்மறியாடுகளின் மூலம் இறைச்சி, தோல, கம்பளமும், வெள்ளாடுகள் வழியாக இறைச்சி, பால் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில் 15-20 ஆடுகள் கொண்ட சிறிய மந்தையிலிருந்து 100க்கு மேற்பட்ட ஆடுகள் பெரிய மந்தை வரை, உழவர்களின் நிதி வசதி, மற்றும் நிலத்திற்குத் தேவையான உரம் ஆகியவற்றைப் பொறுத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இடுமுதல்களின்றி மேய்ச்சல் மூலமாக பண்டைக்காலந்தொட்டு ஆடுகள் வளர்க்கப்பட்டு வருவதால் ஆடு வளர்த்தல் ஒரு இலாபகரமான



துணைத்தொழிலாக இருந்து வருகிறது. குறிப்பாக மழை தவறிய காலங்களில் விவசாயத்தை நம்பி வாழும் பெரும்பாலான உழவர்கள், பயிர் விளைச்சலில் பாதிக்கப்பட்டு, பொருளாதாரம் குறைந்து, கஷ்டமான காலங்களில் விவசாயிகள் வளர்க்கும் ஆடுகளை விற்று நிதி பற்றாக் குறையைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். இதனால் ஆடுகளை பெரும்பாலும் அடமானம் மீட்கும் அமைப்புகள் (Mortgage Lifters) என்று கூறுவது வழக்கம்.

நம் நாட்டில் பெரும்பாலும் ஆடுகள் இறைச்சி, கம்பளம் ஆகியவற்றைவிட உரத்திற்கு என்றே வளர்க்கப்பட்டு வருகின்றன. வெள்ளாடுகள் நம நாட்டின் மாறுபட்ட சீதோஷ்ணத்திற்கும், ஏற்ற தாழ்வுகள் நிறைந்த பொருளாதார சூழ்நிலைகளின் ஒருங்கே இணைந்தும் கிடைக்கும் சத்தற்ற தீவனங்களையும், மேய்ச்சல் வசதி குறைந்த இடங்களிலும் கிடைக்கும் தீவனங்களை உட்கொண்டு இறைச்சி, பாலைக் கொடுத்து உதவுகின்றன. ஆடுகள் வளர்ப்பது குறிப்பாக சிறு நில, நிலமற்ற விவசாயிகளுக்கு உபதொழிலாகவும், விவசாய வேலைகட்குப் பயன்படாத பையன்கள், உடல் ஊனமுற்றோர் வயதானவர்களுக்கு ஒரு முழுமையான தொழிலாக இருந்து வருகிறது. வெள்ளாடுகள் 15 மாத வயதிற்குள் குட்டிகளை பெறுவதுடன் ஈனும்பொழுது ஒரு குட்டிக்குமேல் இரண்டு, மூன்றுகளை பெறுவதால் மாடு, எருமைகள் ஆயுட்காலத்தில் ஈனும் கன்றுகளைக் காட்டிலும் அதிகமாக அளித்து, பால் இறைச்சியைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய வழி வகுக்கின்றன. இதனால் வெள்ளாடுகள் ஏழையின் பசுவென்றும், (Poor Man's Cow)

கிராமப்புற மக்களின் புரதப் பற்றாக் குறையை ஒரு அளவு பால், இறைச்சி வாயிலாக தவிர்த்து மக்களின் பொருளாதாரமும், ஆரோக்கியமும் மேம்பட உதவுகின்றன.

நாட்டுப் பன்றிகள் தாழ்த்தப்பட்ட மக்களால் உணவு, இட வசதியாகிய அடிப்படை இடுமுதல்களின்றி வீணடிக்கப்பட்ட தீவனங்கள் கழிவுப்பொருட்களை உட்கொண்டு 25 முதல் 30கிலோ எடையை ஓராண்டுக்குள் அடைந்து வளர்ப்பவர்களுக்கு ஆதாயத்தை அளித்து வருகின்றன.

ஆட்டின் இறைச்சி கிலோ 18 முதல் 20 ரூபாய் வரையில் விற்கும் காலத்தில் பன்றி இறைச்சி உற்பத்தி இலாபகரமானதாகும். ஒரு கிலோ பன்றி இறைச்சிக்கு 14 ரூபாய்க்கு மேல் கிடைத்தால் தான் இலாபம் கிடைக்கும். பன்றி இறைச்சி, மாமிசப் புரத உணவாக ஏற்றுக்கொள்ளும் இடங்களிலும் இறைச்சி விற்பனை அதிகமாக ஏற்படும் இடங்களை ஆராய்ந்தும் பன்றி வளர்ப்பை மேற்கொண்டால் இலாபகர முயற்சியாகும்.

சிறிதளவே நிலமுள்ள விவசாயி பயிர் தொழிலையே நம்பி வாழமுடியாமல் கலப்புப் பண்ணை மூலமாக வருவாயை பெருக்கும் முயற்சியில் பன்றி வளர்ப்பதும், கோழிப்பண்ணை நடத்துவதும் சாத்தியமென்று கருதினாலும் பன்றி இறைச்சிக்கு இன்னும் சமூகத்தில் சரியான வரவேற்பு இல்லை. இதனால் கோழி வளர்ப்பே உபதொழிலாகவும் முழு தொழிலாகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கலப்புப் பண்ணைத்தொழிலில் கோழி வளர்ப்பு இலாபகரமான தொழிலாக அமையும். கோழி வளர்ப்பில் ஒரு புத்துணர்ச்சியும், திருப்பமும் ஏற்பட்டுள்ளது. கோழிப்பண்ணைகளில் 100 முதல் பல ஆயிரம் கோழிகள் வளர்க்கப்பட்டுகின்றன.

சமீபகாலமாக கோழி பராமரிப்பில் நவீன முறைகளை பின்பற்றுவதுடன் அறிவியல் நோக்கோடு உணவு அளித்து நோய்களைத்தடுக்கும் முறைகளையும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித்திட்டங்களில் (Integrated Rural Development) கோழி வளர்ப்பு நன்கு இணைவதுடன், கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிப்பதுடன், முட்டை, இறைச்சி, உணவுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்வது மட்டுமின்றி மக்களின் ஆரோக்கியத்தினையும் பொருளாதாரத்தையும் உயர்வடைய சுடர்விளக்கினைத் தூண்டும் கோல் போன்று உதவுகிறது.



# உணவுத் தேர்வு

## டாக்டர் எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை

**நோ**ய் வந்து அதை நலப்படுத்த முனைவதைக் காட்டிலும் நோய் வராமல் உடம்பைக் காத்தலே உத்தமம். இதைத்தான் நம் முன்னோர்கள் இரத்தினச் சுருக்கமாக ''நோய்க்கு இடம் கொடேல்'' என்றனர். இன்னும் ஆசையும் உதாசீனமுமே மனித நோய்க்கு காரணங்களாகும். விரிவாகக் கூறுவதானால் நோய்க்குக் காரணங்கள்: பெற்றோர்களும், கருமங்களும், சீதோஷ்ண நிலைகளும், உணவு வகைகளும் ஆகும். மனித உடல் நலனுக்கு உண்ணும் உணவு அதிகப்பங்கு வகிக்கின்றது. உண்ணும் உணவு உருசியுடன் இருக்க நம்மில் பெரும்பாலோர் விரும்புகின்றனர். ''சாப்பாடு எப்படி?'' என்றால் ''பிரமாதம். பிரமாதம்'' என்பர். ஆனால் அந்த உணவு 'பிரமாதம்' என்று கூறியவரின் உடலுக்குப் பொருந்தியதா? என்பதைச் சிந்திக்கத் தவறுகின்றனர். நாக்குக்கு உருசி, உடலுக்குக் கேடு— என்கின்ற கருத்தை அறிந்திலர். அதன் விளைவாக உண்ட உணவு உடலில் நஞ்சாக மாற்றமடைந்து பல இன்னல்களைப் பின்னால் விளைவிக்கிறது. சில வேளை, உயிருக்கும் கேடாக முடிவதுண்டு. இந்தக் கருத்தை வள்ளுவப் பெருமானும்,

**''மருந்தென வேண்டாவாம்**
**யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்''.**

என்று கூறுகிறார்.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு சிறப்பானது. உடலுக்குப் பொருந்திய உணவை உட்கொள்ள, நோயின்றி வாழ முடிவதோடு, நம்முயிரும் உய்வடைய வழியுண்டாகும். இந்த நல்ல கருத்தைத் திருமூலரும்,

''உடல் வளர்த்தேனே, உயிர் வளர்த்தேனே'' என்று கருக்கிடையாக இயம்புகிறார்.

இந்நாகரிக உலகில் பொருளின் பம் நுகர 99.9 சதவிகித மக்கள் விழைகின்றனர். இதனால் பல தொல்லைகளும், பிரச்சனைகளும்கிளம்புகின்றன. நினைத்தது கிட்டாவிட்டால் கவலையிலும், வேதனையிலும் உழலுகின்றனர். மனக்கவலையில் ஆரம்பித்து இரத்தக் கொதிப்பு, புற்றுநோய், மனோநோய் முதலிய கொடிய நோய்களுக்கு ஆளாகின்றனர். நாகரிகம் பெருகப் பெருக, தேவைக்கும் வருவாய்க்கும் உள்ள தூரம் வளர்ந்து கொண்டே போகிறது. பலவித உடல்நோய்களும் உளநோய்களும் கிளர்ந்தெழுகின்றன.

நோயின் அடிப்படைக் காரணத்தை தத்துவார்த்தவகையில் விளக்கம், ''அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் ''எனறு கூறியதிலிருந்து. மனித உடல் பஞ்சபூதத்தின் கலவையாகும் என்பது தெரிகிறது. ஒருவன் நோய்வாய்ப்படுகிறான் என்றால், பஞ்சபூதக் கலவையினாலான உடலில் வாத பித்த சிலேற்பனமாகிய திரிதோசம் மிகுந்தோ குறைந்தோ போதலாகும். இன்னும் ஒருவருக்கு வரும் ஒருநோய், வேறொருவருக்கு வேறுவிதமாய் அமைந்து நோயின் குணங்களைக் காட்டும். எனவே சித்தமருத்துவத்தில் ஒரு நோயாளிக்குத் தரும் மருந்து அதே நோயுள்ள இன்னொரு நோயாளிக்குப் பயனளிக்காது இருப்பதைப் பார்க்கிறோம். நோயாளியின் உடல் நிலையைச் சீர்தூக்கி சித்தமருத்துவத்தில் மருந்துகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆகவே, சித்த மருத்துவத்தில் மருந்துகளின் எண்ணிக்கையும் கணக்கிலடங்காதிருக்கிறதைக் காண்கிறோம்.

இன்னும், ஒருவன் நோயுறுகிறான் என்றால், அதிகமாகவும் நீண்ட காலமாகப் பல காரணங்களின் மூலமாக அவன்உடல் பாதிக்கப்பட்டு இறுதியாக இயலாத நிலைக்குக் கொண்டு வந்துவிடும் நிலைதான் ''நோய்''. இந்நிலையைத் தவிர்த்தல் புத்திசாலித்தனமன்றோ!

தற்போது பல இடங்களில் வசதியற்றோருக்கும், உடல் மெலிந்தோருக்கும் உடல் செம்மையுறச் சத்துணவு கொடுக்கப்படுகிறது. இதன் பலன் ஒருதரப்பட்டது. இச்சத்துணவு ஒருபோது கேடாகவும் விளையக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, குறிப்பிட்ட மனிதனுக்குச் சத்துணவு தர வருவதற்கு முன், அவரின் உடல் நிலையைச் சோதித்து உடலில் உள்ள கேட்டை நிர்ணயித்தல் அறிவுடைமை. அதன் பின்னரே, உடல் கேட்டை நிவர்த்திக்க என்ன உணவு வகை, எப்படித் தரலாம் என்பதை உறுதிப்படுத்தவும் இம்முறையைச் செய்யத் தவறினால் சத்துணவுத் திட்டம் ஒரு தரப்பட்டதாய் இருந்து வரும்.

''உணவே மருந்து, மருந்தே உணவு ''என்ற தாரக மந்திர ஒலியின் ரீங்காரம், அன்றைய நாட்களில் தமிழர் இல்லங்களில் கேட்ட வண்ணமாய் இருந்தது. இதுவே, பிந்திய நாட்களில் 'பாட்டி வைததியம்', 'பாட்டன் வைத்தியம்' என்ற புனை பெயரில் நடைமுறையில் இருந்து வருவதைக் காண்கிறோம். தமிழ்ப் பெண்கள் உணவுப் பொருள் தேர்விலும், செய்பாகம்-கைபாகத்திலும் வல்லுநராக விளங்கினர். தம் வீட்டிலுள்ள ஒவ்வொரு நபரின் உடல்நிலை, அவரின் விருப்பு, வெறுப்பு போன்றவைகளையும் நுட்பமாக அறிந்திருந்தனர். எனவே தமிழக சமையல் கலை சிறப்புள்ள தாகக் கருதப்பட்டு வருகிறது. அவியல், பொரியல், வறுவல், கிச்சடி, பச்சடி, சாம்பார், ரசம், பருப்பு, குழம்பு, ஊறுகாய் வகைகள், வற்றல் வகைகள், சாத வகைகள் சட்டிவகைகள், பற்பல சிற்றுண்டிகள் முதலியன தமிழரின் தனிப்பட்ட பதார்த்த வகைகளாகும். இன்னும் ,தேர்ந்தெடுக்கும் உணவுச் சிறப்பால், நோய்களை உடலில் அணுகாது செய்வதோடு, வந்த நோயும் உணவு மூலம் குணப்படுத்தப்பட்டு வாழ்வை நீட்டிக்கவும் இயலும்.

தற்காலத்தில், வந்த நோயை உடனே நிவாரணம் செய்ய வன்மையான மருந்துகளைத் தேர்ந்தெடுத்து உட்கொள்ளுகின்றனர். இதனால் நோயாளி தோற்றத்தில் குணமடைந்தார் எனலாம். இந்த மருந்தோ பஞ்ச பூதக்கலவையாலான உடலிலுள்ள உயிர்அணுக்களை பூகம்பமென அதிரச் செய்து, சிதறடித்து, செயலிழக்கச் செய்கிறது. அதன் விளைவாக மருந்தின் வேகம் பலவித நோய்களைக் கிளப்புகிறது. இவ்வாறு பல தடவை உட்கொள்ளும் வன்மையான மருந்தின் வேகத்தால் நச்சுப் பொருட்கள் உடலில் உருவாகி பிந்திய காலத்தில் பேதமறியா நோய்களாக மாறித் தோற்றமளிக்கும். இதனால் வாழும்,

நாட்கள் குறைவதோடு, வாழும் நாட்களில் தாங்கவொண்ணா துயரும் தொடருகிறது.

ஆகவே, நோயுற்ற போதும் சரி, மற்றைய போதும் சரி, உண்ணும் பதார்த்தங்களை நுட்பமறிந்து, தேர்ந்து செய்பாகம் கைபாகம் போன்ற விதிமுறைப்படி செய்து உணவாக்கி உட்கொள்ளுங்கால் உடலிலுள்ள உயிரணுக்கள் உரம் பெற்று உடல் நோய் அகல வாய்ப்பளிப்பதோடு வாழ்வும் நீண்டு வளர ஏதுவாகிறது.

எந்த நாட்டினரும் இது வரைக்கும் அறிந்திராத மருத்துவ இரகசியங்கள் தமிழக இல்லங்களில் தயார் செய்யும் உணவு பதார்த்தங்களில் அடங்கியுள்ளன.

தமிழ் நாட்டில் மேலை நாட்டு மருத்துவத்தைப் பூரணமாய் செய்துவரும் மருத்துவர் பலர், தம் வீட்டில் பாட்டி, பாட்டன் வழிவந்த பதார்த்த வகையில் தங்கள் தாய் மனைவி மூலம் செய்து தரச்சொல்லி சாப்பிடுகின்றனர். இதில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதை இவர்கள் அறிய முற்படுவதில்லை. எந்தஎந்தப் பதார்த்தம் தங்கள் உடலுக்கு நல்லது அல்லது கெட்டது என்பதையும் அறிவதில்லை.



அன்று தமிழர் கடைப்பிடித்த ஒவ்வொரு உணவுப் பதார்த்தமும் தனிப்பண்புள்ளது. இவர்கள் நாக்குக்கு ஒவ்வாத பதார்த்தமாய் இருப்பினும் அப்பதார்த்தம் உடலுக்கு நலமெனக் கருதினால் அதை நாக்குக்கு உருசிப்பட உருவாக்கும் பக்குவத்தை அறிந்திருந்தனர்.

இன்னும் ஒருவருக்குச் சிபாரிசு செய்யும் உணவு அவரின் உடல் நிலை, வசிக்கும் இடம், காலம், செய்யும் தொழில், விருப்பு வெறுப்பு முதலியவைகளை வரம்பாக்கிக் கொண்டு நிர்ணயிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

பத்திய பாகங்கள், இயற்கை உணவு போன்றவைகள் உணவுத் தேர்வின் சிறப்பம்சங்களாகும்.

விஞ்ஞானப் பாங்குடைய ''உணவுத் தேர்வை விரிவாகத் தெரிய முற்படுவது அறிவுடைமையாகும்.

நாம் படும் பாடெல்லாம் எண்சாண் உடம்புக்காகும். நல்லுணவைத் தேர்ந்தெடுத்து சாப்பிட, நோயற்ற வாழ்வு வாழலாமல்லவா?

உணவுத் தேர்வு என்கிற பயிற்சியைப்பொது மக்களுக்கு வழங்க அரசு முன்வரலாம். இதனால் இல்லறப் பெண்கள் உடலுக்கு ஏற்ற உணவைச் செய்து பரிமாற ஏதுவாகி, இல்லமெல்லாம் நோயற்ற வாழ்வு பெருகும்.

இன்னும் மருத்துவப்பட்டம் சான்றிதழ் பெற்றவர், 'உணவுத் தேர்வு' படிப்பைச் சிறப்புப்படிப்பாகக் கற்க, கீழ்க்கண்ட நலனையும் மக்கள் பெறலாம்.

1. மருத்துவ மனைகளில் நோயாளியின் உடல் தன்மையை அறிந்து, உடலுக்குப் பொருத்தமான உணவு சிபாரிசைச் செய்ய நோய் குணப் படுவதோடு, பின் விளைவு இல்லாது நோயாளியைக் காப்பாற்றலாம்.

2. நோய் வந்து நலன் காண்பதைப் பார்க்கினும் நோய் வராமல் பொதுமக்கள் உடலைப் பேண வேண்டுமாறு சித்த மருத்துவ வல்லுநர்கள் கொண்ட ஒரு தனிப்பிரிவினை (''நோய் தடுப்புத்துறை'')யை) நிறுவி செயலாற்றச் செய்விக்கலாம்.

வட்டாரத்துக்கு ஒரு வல்லுனர் வீதம் நியமனம் செய்து, தமிழகமெங்கும் உணவுத் தேர்வின் பண்பையும், பயனையும் எடுத்துக்கூறலாம்.

இவைகளை முறைப்படி செயல்படுத்த முயலுமிடத்து, இன்று நிறுவியுள்ள மருத்துவ மனைகளில் நிறைந்து வழியும் நோயாளிகளின் நெரிசலைக் குறைக்க வழி ஏற்படும்.

## தமிழகத்தில்

## ஆந்திர மாநில ஆட்சிமொழிக் குழுத் தலைவர்

ஆந்திர மாநில ஆட்சிமொழிக் குழுவின் தலைவர் டாக்டர் சி. நாராயணரெட்டி அவர்கள் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் அனைத்து மட்டங்களிலும் தமிழ் ஆட்சிமொழியாக எவ்விதம் இயங்கி வருகிறது என்பதைக் கண்டறிய தமது குழுவின் செயலாளர் திரு ஜி. இராமகிருஷ்ணராவ் அவர்களுடன் தமிழ்நாட்டில் இம்மாதம் 11-ம் நாள் முதல் 13-ஆம் நாள் வரை சுற்றுப்பயணம் செய்தார்கள்.

அந்நாட்களில், ஆட்சிமொழிக் குழுத் தலைவர் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களையும், மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர் அவர்களையும், தமிழ் ஆட்சி மொழிக் குழுவின் செயலாளரையும் மற்றும் பல்வேறு மாவட்ட அரசு அலுவலர்களையும் சந்தித்து விரிவான முறையில் கலந்துரையாடினர். வேலூரிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும், மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கும், காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் சென்று பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் மற்றும் ஏனைய அமைச்சர்களும் எல்லா விதமானக் குறிப்புகளையும் தமிழில் எழுதுவது என்பதை ஒரு கொள்கையாகக் கொண்டிருப்பதையும் மற்றவர்களும் அதே போல் செய்ய தூண்டுகோலாய் இருப்பதையும் அறிந்து குழுத் தலைவர் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார். தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு மிகுந்த முயற்சி எடுத்துள்ளதையும், இக் கொள்கையை 17 துறைத் தலைமை அலுவலகங்களில் தீவிரமாய் செயல்படுத்துவதையும் அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மூன்றாண்டுகளில் தமிழையே முழுமையாக அரசு நடவடிக்கைகளும் கையாளுவதற்கான ஒரு ஏற்பாட்டை அரசு செய்து வருவதறிந்து குழுத் தலைவர் பெருமிதம் கொண்டார். ஆந்திர மாநிலத்தில் அரசு துறையில் உள்ள தொடர்புடைய அனைவருக்கும் தூண்டுகோலாக தமிழ்நாடு அரசின் முயற்சி இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.



# புதுக்கோட்டையில் பனைப் பண்ணை


எஸ். டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை.


பனை மரம்-நமது ''மாநில மரம்'' என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதைப் பலரும் அறிவார்கள். மயில் எப்படி நமது தேசியப் பறவையாக விளங்குகிறதோ அதுபோல் பனை மாநிலமரமாகும். பனை மரம் மற்றும் பனைப்பொருள்கள் பல்வேறு வகைகளில் எவ்வாறு பயன்பட்டு ''கற்பகத்தரு''வாகத் திகழ்கின்றன என்பதை அறிந்தால் பனை மரம் மாநில மரமாக விளங்குவதன் சிறப்பினை உணர முடியும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை, எளிய கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி பொருளாதார ரீதியில் முன்னேற்றங்காண பனைத் தொழில் வழி வகுக்க உதவுகிறது. அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நவீன ரகப் பனை ஓலைப் பொருள்கள் செய்யப் பயன்படும் குருத்தோலை, கட்டில் மற்றும் இருக்கைகள் செய்ய நார் தூரிகைகள் செய்ய, தும்பு தரும் பத்தல்கள், துடப்பம் செய்ய ஈக்கு போன்ற பல்வேறு மூலப் பொருள்களைத் தருவதோடு, பதநீர், நுங்கு, பனங்கிழங்கு-கிழங்குமாவினால் செய்யப்படும் பணியாரம், ரொட்டி போன்ற பலகார வகைகள் ''பாம்டா'' ''பாம்கோவா'' போன்ற குளிர்பானங்கள் பனஞ்சீனி, பனங்கற்கண்டு உணவுப் பொருள்களையும் தரும் ''கற்பக தரு''வாகப் பனை மரம் விளங்குவதால் கிராமப்புற மக்கள் வாழ்வில் வளம்பெற தன்னிகரில்லாத தன்னிறைவுத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தும் அரசின் மாநில மரமாக பனைமரம் திகழ்வது ஏற்றமுடையதாகும்.

புதுக்கோட்டை நகருக்கு அருகில் அமைந்துள்ள திருக்கோகர்ணம் கோவில்பட்டியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 72.26 இலட்சம் மதிப்பீட்டில் பனைப் பொருள் பெருவளத்திட்டம் செயலாக்கம் பெறும் பனைப் பண்ணையினை மாநில பனைப் பொருள் இணையம் நிறுவியுள்ளது. இத்திட்டத்தினால் 8,450 பேர்கள் சுயவேலை வாய்ப்பு பெறுகின்றனர்.

புதுக்கோட்டை இம் மாவட்டத்தில் சுமார் 5 இலட்சம் பனை மரங்கள் உள்ளன. மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்தே பனை மரங்களை திட்டமிட்டு வளர்க்கப் பட்டதன் விளைவாய் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பனை மரங்கள் பரவலாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளன. கோவில்பட்டி பனைப் பண்ணைக்குப் பயன்படும் வகையில் சுமார் 52 ஆயிரம் பனை மரங்கள் தஞ்சை சத்திர நிர்வாகம், ஆவுடையார் கோவில் தேவஸ்தானம் மற்றும் நகராட்சியினரிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டுள்ளன. மேலும், கோரையாற்றுக்கரைகளிலுள்ள பனை மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமையினை, கோவில்பட்டி பனை வகைகளை மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

## புகழ் பெற்ற புதுக்கோட்டை பனைத்தும்பு

புதுக்கோட்டையில் தயாராகும் பனைத்தும்பு தனித் தரமுடையதாகும். பனைப் பண்ணை வளர்ச்சியடைவதற்கான அனைத்து அடிப்படைவசதிகளும் உள்ளன. பனை மரங்கள் சத்துள்ள பதநீரைத் தரக்கூடிய நல்ல தரமானவையாகும். மரங்கள் அதிக உயரமில்லாமல் சாதாரண உயரத்துடன் உள்ளன.

ரூ. 38 ஆயிரம் செலவில் பனைத்தும்புத் தூரிகை கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் தயாரிக்கப்படும் பனந்தும்பு சேகரிக்கப்பட்டு இங்கு சுத்தம் செய்யப்படுகிறது. தும்பைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு இம்மாவட்டத்தில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு ஒரு பேலிங் யூனிட்டும் நிறுவப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 95,000 மதிப்பீட்டில் ஒரு பணிக்கூடமும் கட்டப்பட்டுள்ளது. இங்கு அயல் நாடுகளுக்குத் தேவையான தும்பு இறுதி சுத்திகரிப்பு செய்யப்பட்டு நேரடியாக ஏற்றுமதி செய்யப்படும்.



முதன் முதலாக தும்பு இறுதி சுத்திகரிப்பில் பெண்களுக்குப் பயிற்சி அளித்து இயங்குவது புதுக்கோட்டை கோவில்பட்டியில்தான் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கோவில்பட்டி பனைப்பண்ணையில் பனைத்தும்பு தயாரிப்பதில் 30 நபர்களும், நவீன முறையில் பனை ஏறுவதில் 27 நபர்களும், பனைவெல்லம் தயாரிப்பதில் 9 நபர்களும், பனை ஓலை பொருட்களை உற்பத்தி செய்வதில்20நபர்களுமாக தற்பொழுது பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் அதிக நபர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றது.

பனைத் தொழிலில் ஆர்வமுள்ள கிராம மக்கள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பனைத் தொழில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே ஏழை எளியவர்களுக்கு மரம் வழங்கும் திட்டம் முதன் முதலாக புதுக்கோட்டையில் செயல்படுத்துவது என்பதனைப் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.

பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை, எளிய குடும்பத்துக்கு 100 பனை மரங்கள் வீதம் முதல் கட்டமாக 35 குடும்பங்களுக்குப் பனை மரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத் திட்டம் பனைத் தொழில் செய்ய ஆர்வமிருந்தும் மரமில்லாமல் அவதிப்படும் ஏழைகளுக்கும், மரச் சொந்தக்காரர்கள் குத்தகையை உயர்த்திக்கொண்டே போவதால் அல்லல் படும் ஏழைகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் மட்டும் சுமார் 4 கோடி பனை மரங்கள் இருக்கின்றன.



பின் தங்கிய புதுக்கோட்டை மாவட்டத்தில் மனித சக்தியை ஆக்கப் பணிகளில் பயன்படுத்தி தகுந்த வேலை வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுத்து அதன் மூலம் பொருளாதார முன்னேற்றம்காணும் வகையில், நத்தம் பண்ணையில் ''சிப்காட்'' தொழில் பேட்டை நிறுவுதல், அறந்தாங்கி அருகில் ரூ. 6கோடி மதிப்பீட்டில் அமையும் கூட்டுறவு நூற்பாலை ரூ. 20இலட்சம் செலவில் விசைத்தறி மையம், சிறிய சர்க்கரை ஆலை நிறுவுதல் போன்ற பணிகள் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இத் தருணத்தில் புதுக்கோட்டை கோவில்பட்டியில் புதியதாக நிறுவப்பட்டுள்ள ''பனைப் பண்ணை'' ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்து அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறது.



# கோவை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள்

கே. மலைச்சாமி, ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
கோயம்புத்தூர்.


பைந்தமிழ் கொஞ்சும் தமிழகத்தில் கிராமப்புற மக்களின் நிலைமையை வாய்ப்பை, வளத்தை, உயர்த்துதல் பொருட்டு தமிழக அரசு ''தன்னிறைவுத்திட்டம்'' என்ற தன்னிகரில்லாத் திட்டத்தை, தரணியே போற்றும் வண்ணம் தந்ததோடு, மக்களின் மனநிறைவை உருவாக்கும் செயல் திட்டங்கள் நாள்தோறும் வளர்ந்து வருவதை அனைவரும் ஏற்கும் வண்ணம் பார்க்கின்றோம்.

எண்ணி, எண்ணிப் பார்த்து விட்டு, இது இனி கிடைக்குமா என ஏங்கிய நெஞ்சங்கள், மகிழ்ச்சியில் நீந்தும் வண்ணம், திட்டங்கள் செயலாக்கம் புரிந்து காட்சியளிக்கின்றன. எழிலார்ந்த வாழ்விற்குச் சொந்தம் கொண்டாட, பந்த பாச உணர்வோடு, பாங்கான செயல் திட்டங்கள், நாள் தோறும் செயல் வளம் பெற்று மக்களின் மனநிறைவை ஊட்டுகின்ற, காட்சி உலகோர் போற்றும் வண்ணம் காணமுடிகிறது.

உடல் ஊனமுற்றோர்க்கு, விதவைகளுக்கு, கைம்பெண்களுக்கு, சிறு விவசாயிகளுக்கு, மிகச்சிறு விவசாயிகளுக்கு, வாழ்வில் நலிவுற்றோர்க்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறவர்களுக்கு, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தோர்க்கு, மலை வாழுநருக்கு, கிராமப்புற இளைஞர்களுக்கு, முதியோர்க்கு எத்தனையோ திட்டங்கள் அடுக்கடுக்காய் எடுக்கப்பட்டு தமிழகத்தில் எங்கெணும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறத்தில் வாழ்கின்றவர்களின் வசதியை, வாய்ப்பை பெருக்கிடவும், அவர்களின் முக்கியத் தேவைகளை நிறைவு செய்திடவும், சமுதாயச் சொத்தை வளர்த்திடவும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளும், தன்னிறைவுத் திட்டப் பணிகளும் வெகு வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கோவை மாவட்டத்தில் உள்ள 21 ஊராட்சி ஒன்றியங்களில் 80-81 வது ஆண்டில் முதல் கட்டமாக அன்னூர், அவிநாசி, பொள்ளாச்சி தெற்கு ஆகிய மூன்று ஊராட்சிஒன்றியங்களில் இணைப்புச் சாலைகள் ரூ 79,08,500 செலவிலும், இணைப்புக் கல் பாலங்கள் ரூ 11,31,500 செலவிலும், ஆதி திராவிடர் குடியிருப்பில் இருந்து புதை குழிக்குச் செல்லும் பாதை ரூ 1,83,200 செல



விலும், சிறிய நீர்பாசனத் திட்டங்கள் ரூ 13,000 செலவிலும், கிராமப்புற மருந்தகங்கள் ரூ 52,000 செலவிலும், தாய்-சேய் நல விடுதிக் கட்டடங்கள் ரூ.4,22,000 செலவிலும், பள்ளிக்கட்டடங்கள் ரூ 22,71,000 செலவிலும், கால் நடை மருந்தகங்கள் ரூ 5,000 செலவிலும், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் ரூ 35,000 செலவிலும், பெண்களுக்கென பொதுக் கழிப்பிடங்கள் ரூ 42,700 செலவிலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1981-82-வது ஆண்டு நிதியாண்டில் தன்னிறைவுத் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றுதல் பொருட்டு, காரமடை, தொண்டாமுத்தூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, மடத்துக்குளம், பொங்கலூர், பல்லடம், சூலூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்கள், மக்களின் தேவைக்கேற்ப, உணர்ந்து எடுக்கப்பட்டு, அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மக்களின் மன நிறைவைப் பெருமளவில் உருவாக்கி உள்ளது என்று பகர்ந்தால் அது மிகையாகாது.

காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 33,81,000 செலவிலும், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 35,97,000 செலவிலும், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 59,11,000 செலவிலும், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 51,65,000 செலவிலும், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 39,32,000 செலவிலும், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 34,51,000 செலவிலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.66,23,000 செலவிலும், சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ 73,67,000 செலவிலும், காரமடை, சூலூர், கிணத்துக்கடவு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் ரூ 1,45,000 செலவிலும், அரசு குறிப்பிட்ட நிதியாண்டில் நிதிச் செலவினங்கள் செய்யப்பட்டு திட்டங்கள் மக்களின் பேராதரவோடு நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ் ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள பணிகளில், 220 கி.மீ. நீளம் உள்ள 715 சாலைகளும், சிறு ஓடைகளைக் கட்டுப்படுத்தி இணைக்கின்ற சிறு பாலங்கள் 684-ம், ஆதி திராவிடர் குடியிருப்பில் இருந்து புதைகுழிக்குச் செல்ல 67 கி.மீ. நீளமுள்ள 114 இணைப்புச் சாலைகளும், சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் 18-ம், கிராமிய மருந்தகங்கள் 9-ம், மகப்பேறு நிலையங்கள் 27-ம், பள்ளிக் கட்டடங்கள் 139-ம், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் 3-ம் ஆக மொத்தம் 1709 வேலைகள் ஆகும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென வைக்கப்படும்.

—என்ற குறளுக்கேற்பவும், எதுவும் அற்றவர்களுக்கு, அரும் பயன் விளைவிக்க வேண்டும் என்ற மகத்தான இலட்சியத்தை தமிழக அரசு செயலில் நிறைவேற்றி, கிராம மக்களின் பெருவாழ்வில் வளம் சேர்த்து வருகின்றது. நாடு விடுதலை பெற்று 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தகு திட்டங்கள் கிராமப்புற மக்களுக்குக் கிடைத்துள்ளதே என அனைவரும் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்த வண்ணம் உள்ளார்கள். தன்னிறைவுத்டம் நிறைவேற்றப்பட்டுள்ள, கோவை மாவட்டத்தில் உள்ள, 11 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 9 இலட்சம் மக்கள் இத்திட்டத்தின் பயனைப் பெரிதும் பெற்று இருக்கிறார்கள். கிராமப்புற மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி நீரை வழங்குவதற்காக ஏறத்தாழ ரூ. 300 இலட்சம் செலவில் குடி நீர் வழங்குகின்ற பணிகள் குடி நீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நல்ல வீட்டினை, மழையால் புயலால், தீயால் அழியாத அளவிற்குக் கிராமப்புற மக்களுக்குக் கடன் உதவியோடு கட்டித் தருகின்ற மகத்தான திட்டத்தின் அடிப்படையில் 11 ஊராட்சி ஒன்றியங்களில் 2,000. வீடுகள் ரூ. 60,00,000 செலவில் கட்டித் தரப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த ஏழை எளிய மக்கள் 2,000 வீடுகளைப் பெற்று மகிழ்கிறார்கள். சிறு குடிசையில், இருள் சூழும் நிலையில், வாழ்வதை மாற்றி ஒளி உமிழும் மின் விளக்குத் தருவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டு 11 ஊராட்சி ஒன்றியங்களில் 5,000-க்கு மேற்பட்ட குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கப்பட்டு இருக்கிறது.






கிராமப்புற மக்களுக்கு நல்ல சாலை வசதி, குடி நீர் வசதி, மின் வசதி, குடியிருப்பு வசதி, மருத்துவ வசதி, பாசன வசதி என்கின்ற வகையில் கோவை மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் பொது மக்களின் பேராதரவோடு ஊராட்சியாளர்கள், மாண்புமிகு வளர்ச்சி பிரிவு அலுவலர்கள் ஆகியோரின் அயராத உழைப்பால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் மகத்தான இந்தத் திட்டம் பாங்குடன் நிறைவேற்றித் தரப்பட்டு இருக்கிறது. காற்றாற்றை கடக்கவும், மழை வெள்ளத்தில் அடித்து வரும் நீரோடைகளைக் கடக்கவும் வகை அறியாது தவித்த மக்கள் எல்லாம் மகிழ்வு எய்துகிற வகையில், சிறு பாலங்களும், பள்ளிச் சிறார்களும் கல்விச் செல்வம் பெற பள்ளிக் கட்டடங்களும், முள் சூழும் பாதையிலே நடந்துசென்ற மக்களுக்கு, அருமையான சாலைகளும், தோண்டத் தோண்ட கிடைக்காத குடி நீர் வசதிகளை உருவாக்கித்தரும் குடி நீர்த் திட்டங்களும், குழந்தையைக் காக்க, தாய்மார்களைக் காக்க, அவர்களுக்கு ஏற்படும் நோய் நொடிகளைப் போக்க மருத்துவ வசதியோடு கூடிய மருத்துவ கட்டடங்களும், பல நூறு ஓராண்டில் கிராமப்புறங்களில் உருவாக்கப்பட்டு உள்ளன.

நடப்பாண்டில் கோவை மாவட்டத்தில் பல இலட்சம் ரூபாய் செலவில் பத்து ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகள் பாங்காக நடைபெற்று வருகின்றன.

# கோவை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சிப் பணிகள்

மாவட்ட ஊரக வளர்ச்சிக் கழகம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சிறப்புத் திட்டத்தின் கீழும், பூதான இயக்கத்தின் கீழும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் வாழ்வில் நலிவுற்றோர்க்காக, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்காகக் கோவை மாவட்டத்தில் ஆற்றப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் 21 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ. 126 இலட்சம் மானியம் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுகாறும் ரூ. 168.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 30,256 பேர் பயன் அடைந்து இருக்கிறார்கள். வேளாண்மைக்காக ரூ. 29.81 இலட்சமும், சிறு பாசன வசதிக்காக ரூ. 72,000மும், கால்நடைப் பராமரிப்பிற்காக ரூ. 40.81 இலட்சமும், பட்டு வளர்ப்பு, மீன் வளர்ப்புக்கு ரூ. 5.96 இலட்சமும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்திற்காக ரூ. 79.72 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு ரூ. 21 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 4,474 பேர் பயன் அடைந்து இருக்கிறார்கள்.

ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குச் சிறப்புத்திட்டத்தின் கீழ் ரூ. 35.85 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,581 குடும்பங்கள் பயன் அடைந்து இருக்கிறார்கள். சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் 1948 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வர்த்தக அடிப்படையில் விரிவு படுத்த வேண்டி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல்நாள் துவக்கப் பெற்றது. தமிழ்நாடு அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா இல்லங்களைப் பெற்று மிக எளிய முறையில் பணியாற்றத் தொடங்கிற்று. இக் கழகம் துவக்கத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குத் தேவையான இடவசதி அளிக்கவும் மற்றும் அவர்கட்கென சுற்றுலாப் பேருந்துகளை நடத்தும்

குறைந்த கட்டணத்திலும், உயர்ந்த தரத்திலும் இக்கழகம் வழங்கிடும் தங்கும் வசதி மற்றும் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மட்டுமின்றி வெளிநாட்டுப் பயணிகளையும் பெரிதும் கவர்ந்துள்ளது.

1971-72ஆம் ஆண்டில் ரூ. 4.58 இலட்சமாக இருந்த வருவாய், 1976-77ல் ரூ. 68.51 இலட்சத்திற்கு உயர்ந்து, பிறகு 1981-82ல் ரூ. 223.35 இலட்சத்தினை எட்டியது. 1982-82ல் வருவாய் ரூ. 308.00 இலட்சத்

1976-77ஆம் ஆண்டு முதல் இக்கழகம் முதன் முறையாக இலாபத்தில் செயல் படத் துவங்கியது. 1977-78ஆம் ஆண்டு ரூ. 1.60 இலட்சமாக இருந்த இலாபம், 1980-81ல் ரூ. 5.73 இலட்சமாக உயர்ந்தது. 1981-82ல் இக்கழகம் பெற்ற இலாபம் ரூ. 21.39 இலட்சமாகும்.

இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்குமுதலீடு 1971-72ஆம் ஆண்டு ரூ. 50 இலட்சமும், 1976-77ல் ரூ. 200 இலட்சமும், மற்றும் 1981-82ல் ரூ. 500 இலட்சமுமாகும்.

# பத்தாண்டுகளில்....



# சுற்றுலா வளர்ச்சி!

பணிகளையும் மேற்கொண்டது. கடந்த ஆண்டுகளில் இக்கழகம் சுற்றுலாப் பயணிகட்குத் தேவையான பிறபணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது.

இக்கழகத்தின் வரலாற்றில் 1977-ஆம் ஆண்டு ஒரு சீரிய திருப்பு முனையாகும். இவ்வாண்டில் கழகத்தின் பணிகள் வர்த்தக ரீதியில் மாற்றியமைக்கப் பெற்றுப் பல வழிகளில் பல்கிப் பெருகியது.

தினை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் சீரிய தொண்டிற்கு கடந்த ஆண்டுகளில் வேகமாக உயர்ந்து வந்துள்ள வருவாய் இதற்குச் சிறந்த சான்றாகும்.

இவ் வருவாய் உயர்வின் அடிப்படையில் இக்கழகம் 1.7.1980 முதல்வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறும் நிலையினை எய்தியது.

செலுத்தப்பட்ட பங்கு முதலீடு 1976-77ல் ரூ. 110.00 இலட்சமும் மற்றும் 1981-82ல் ரூ. 223.55 இலட்சமும் ஆகும். இக்கழகத்தின் வைப்புச் சொத்துக்களின் மதிப்பு 1971-72ஆம் ஆண்டில் ரூ. 34.40 இலட்சமும் 1976-77ல் ரூ. 185.71 இலட்சமும், 1980-81ல் ரூ. 334.43 இலட்சமும் மற்றும் 1981-82ல் ரூ. 424.43 இலட்சமும் ஆகும்.

### இளைஞர் விடுதிகள்

இளைஞர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகட்கென குறைந்த கட்டணத்தில் வசதிமிக்க தங்கும் விடுதிகள் நிறுவும் பணியினைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. இத்தகு இளைஞர் விடுதிகள் ஏர்க்காடு, மாமல்லபுரம், மண்டபம், ஒகேனக்கல், கொடைக்கானல், உதகமண்டலம், இராமேசுவரம், பிச்சாவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைக்கப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் பிரிவின் வரவு விவரம் வருமாறு.

| | ரூ இலட்சம் |
|---|---|
| *1971—72* | *4.17* |
| *1976—77* | *33.23* |
| *1980—81* | *81.05* |
| *1981—82* | *118.05* |

*1982—83ல்* ரூ. *177.50* இலட்சமாக உயரும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

### சுற்றுலாப் பயணத் திட்டங்கள்

*1977-78*ஆம் ஆண்டு முதல், இக்கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத்திட்டங்கள், சுற்றுலாப் பயணிகளின் கருத்துக்களை அறிந்து அதற்கேற்ப விரிவாக்கப்பட்டு, மாற்றியமைக்கப்பட்டுள்ளன.


தமிழ்நாட்டில் மட்டுமின்றி பிற மாநிலங்களில் உள்ள சுற்றுலாச் சிறப்புப்பெற்ற இடங்களையும் கண்டுகளிக்கும் வண்ணம் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் தீட்டப்பெற்றுள்ளன.

இக் கழகத்தின் சுற்றுலாப் பயணத்திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளையும் கவர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாட்டுப் பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க, கோலாலம்பூரிலும் சிங்கப்பூரிலும், இக்கழகம் முகவர்களை நியமித்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே சுற்றுலாவிற்கென வெளிநாட்டில் முகவர்களை நியமித்துள்ள முதல் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான். இதன் மூலம் பெருமளவிற்கு அந்நியச் செலாவணி பெருகுவதற்கு வாய்ப்புள்ளது.

இலண்டன் மாநகரின் ''காஸ்மாஸ்'' சுற்றுப் பயணத்திட்டங்களைப் பின்பற்றி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பயணத்திட்டங்கள் நாட்டிலேயே சிறந்தவையெனக்கருதப் படுகின்றன. பிற மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்கள், இக்கழகத்தின் சுற்றுப்பயணத் திட்டங்களைக் கண்டறிய தங்களது அலுவலர்களைச் அனுப்புமளவிற்கு சிறப்பெய்துள்ளது.

பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப புதிய சொகுசுப் பேருந்துகளை அதிக அளவில் பெற்று வருகின்றது. இப்பேருந்துகளின் சிறந்த பராமரிப்பிற்கெனப் பணிமனை ஒன்றினையும் இக்கழகமே நடத்தி வருகின்றது. சுற்றுலாப் பயணத் திட்டங்கள் நடத்துவது மட்டுமின்றி சுற்றுலாக் குழுவினருக்கும் பேருந்துகள் வாடகைக்கு அளிக்கப்பெறுகின்றன. *1972-73*ல் இரண்டு பேருந்துகளும், *1976-77*ல் ஏழுபேருந்துகளாக உயர்ந்து *1980-81*ல் இவை மேலும் 16ஆக உயர்ந்து *1981-82*ல் இவைகளின் எண்ணிக்கை இருபதினை எட்டியுள்ளது. இவற்றில் மூன்று குளிர்சாதன வசதி பொருத்தப்பெற்றவையாகும்.



மதுரை – அலங்காநல்லூரில் நடக்கும் "ஜல்லிக்கட்டு"

### படகுக்குழாம்

இக்கழகத்திற்குச் சொந்தமாக உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும் படகுக்குழாம் உள்ளன. இவை சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

### ஒலி—ஒளிக்காட்சி

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் நாள்தோறும் இக்கழகம் ஒலி-ஒளிக்காட்சியினை நடத்தி வருகிறது. ரூ. 40.00 இலட்சம் செலவில் அமைக்கப் பெற்ற இக்காட்சி அமைப்பு, தமிழர்களின் தொன்மைமிக்க வரலாற்றினை எதிரொலிக்கும் வகையில் உள்ளது.

### தொலை நோக்கி இல்லங்கள்

மிகத் தொலைவில் உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்குளிரக் கண்டுகளிப்பதற்கென இக்கழகம், தொலை நோக்கி இல்லங்களை அமைத்துள்ளது. கொடைக்கானலில் 2 தொலை நோக்கி இல்லங்கள் உள்ளன. ஏர்க்காட்டிலும் உதகமண்டலத்திலும் தொலைநோக்கி இல்லங்கள் அமைக்கபெற்று வருகின்றன.



முதுமலைக் காட்டில் காட்டெருமைகள் கூட்டம்

சுற்றுலா விடுதிகள் நடத்தும் சிறப்பு இக்கழகத்தின் தனித்தன்மையாகும். 1971-72ல் ஐந்து சுற்றுலா விடுதிகளாக இருந்த எண்ணிக்கை, 1976-77ல் 12 ஆகவும், 1981-82ல் 20 ஆகவும் உயர்ந்துள்ளது. இவ்விடுதிகளின் மொத்தம் படுக்கை எண்ணிக்கை 1971-72ல் 253, 1976-77ல் 818 ஆக உயர்ந்து, 1981-82ல் 1334 ஆக மேலும் உயர்ந்துள்ளது.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புப் பெற்ற இடங்களான சிதம்பரம், மதுரை, இராமேசுவரம், திருச்சி, தஞ்சை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, ஒகேனக்கல் மற்றும் மாமல்லபுரம் ஆகியவற்றில் அமைந்துள்ள ஒட்டல் தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளிடையே பெரும்பேறு பெற்றுள்ளது. இச்சுற்றுலா விடுதிகள் அனைத்தும் நகரின் மையப் பகுதிகளில் அமைந்து சுற்றுலாப் பயணிகள் எளிதில் அணுகும் வண்ணம் உள்ளன.

குறைந்த கட்டணத்தில் உயர்ந்த தரத்தில் சிறந்த பணிகளை இச்சுற்றுலா விடுதிகள் ஆற்றிவருகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப சுவையான உணவு வகைகள் சுகாதார முறையில் தயாரிக்கப் பெற்று வழங்கப் பெறுகின்றன.

1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மதுரை மாநகரில் துவங்கப் பெற்ற முதல் மூன்று நட்சத்திர ஒட்டல், இக்கழக வரலாற்றில் ஓர் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். கோவையில் மூன்று நட்சத்திர ஒட்டல் அண்மையில் துவங்கப்பெற உள்ளது.

1978-ஆம் ஆண்டு முதல், நெடுஞ்சாலைப் பயணிகளின் வசதிக்கென, பெருவழி ஒய்வு விடுதிகளை (Motels) நிறுவத்தொடங்கிற்று. இராணிப்பேட்டையில் ''மரகதம்'' மற்றும் உளுந்தூர்பேட்டையில் ''வைரம்'' ஒய்வு விடுதிகளும் நிறுவப்பெற்றன. கிருஷ்ணகிரியில் ''கோமேதகம்'' பெருவழி ஒய்வு விடுதி அண்மையில் துவங்கப் பெற உள்ளது. ஏனைய நெடுஞ்சாலைகளிலும் இத்தகு பெருவழி ஒய்வு விடுதிகள் கட்டும் திட்டங்கள் உள்ளன.

சுற்றுலாத்துறையின் "மோட்டல்"களில் ஒன்று



தருமபுரி மாவட்டத்தில்
ஐந்து நாட்கள்:







# ஓங்கி வளரும் ஊர்ப்புறங்கள்

தமிழக அரசு தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம் போன்ற பல திட்டங்களைச் செயற்படுத்தி, ஊர்ப்புறங்கள் ஓங்கி வளர்ந்திட உழைத்து வருகின்றது. அண்மையில், தருமபுரி மாவட்டத்தில் பயணம் மேற்கொண்டபோதுநேரில் பார்த்த ஒன்றியப் பணிகளின் தொகுப்பே இக்கட்டுரை.

எழுதியவர்

பி. வி. கிரி.

ஜீப் வளைந்து வளைந்து மேடு பள்ளங்களைக் கடந்து செல்கிறது. வழி நெடுகப் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

பர்கூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள, அங்கினாயனப் பள்ளியில் வந்து ஜீப் நிற்கிறது.


''தன்னிறைவுத் திட்டம் இரண்டாவது கட்டம்-அரசு கூடுதல் துவக்கப் பள்ளி'' என்ற பெயர்ப் பலகையைப் பார்க்கிறோம்.

பள்ளியினுள்ளே நுழைகிறோம். இரண்டு வகுப்பறை. 120 மாணவர்கள் படிக்க வசதி இருக்கிறது. ரூ. 61,147 செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பள்ளிக்கான நிலத்தை ஊர்ப் பெரியவர் ஒருவர் இலவசமாக வழங்கியிருக்கிறாராம். நான்கே

மாதங்களில் கட்டி முடிக்கப் பட்ட இந்தப்பள்ளியில் 1 முதல் 5வகுப்பு வரை இருக்கும். இந்தப் பள்ளிக் கட்டடம் எழுவதற்கு முன்பு, மாணவர்கள் மரத்தடி யில் படித்துக் கொண்டிருந்தார் களாம். புதிய இந்தப் பள்ளிக் கட்டடம் மாணவர்களுக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுக் கும் இல்லையா? இதே மாதிரி பர்கூரில் 25 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின் றன.

ஜீப் அந்தச் சாலையில் 'ஜம்' மென்று செல்கின்றது. 'முன்பெல் லாம் இந்தப்பக்கம் வண்டியே போகமுடியாது, ஒரே கரடு முர டாயிருக்கும்' என்று சொல்லிக் கொண்டே வருகிறார் ஒருவர். அந்தச்சாலைதான், கிருஷ்ணகிரி- ராணிப்பேட்டை சாலையி லிருந்து பிரிந்து, பர்கூர்-திருப்பத் தூர் சாலையை இணைக்கும் மூன்று கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகும். இந்தச் சாலையில் மூன்று சிறு பாலங்கள் உள்ளன. இதன் மதிப்பீடு ரூ. 67,000.

அதோ! அந்தச் சாலையில் வரிசையாகச் செடிகள் காணப் படுகின்றனவே! ஆம். ஒப்பத வாடிச் சாலையில் சுமார் 3 கி.மீ. தூரத்துக்கு ஆயிரம் புளியஞ் செடிகள் வைக்கப்பட்டிருக்கின் றன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த வேலைக்கு, ஆள் ஒன்றுக்கு ஏழு ரூபாயும், ஒரு கிலோ அரிசியும் கூலியாக வழங்கப்பட்டிருக் கிறது.




புதிதாகக் கட்டப்பட்டுள்ள துவக்கப் பள்ளி.

அடுத்து, ஆதிதிராவிடர் கால னிக்கு வருவோம்.

புதிதாக 25 வீடுகள் கட்டப் பட்டு வருகின்றன. 2.75 ஏக்கர் பரப்பளவில் காட்சி தரும் இந்த வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அருகே குடிசைகளில் வசித்து வரும் அவர்கள், புதிய வீடு கட்டுவ தில் உதவியும் புரிகிறார்கள். தக்க ஊதியமும் பெறுகிறார்கள். ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 7,500. வீடு நல்ல வசதியாக இருக்கிறது. மாடு கட்ட இடம், திண்ணை, படுக்கை அறை, சமையலறை, குளிக்குமிடம், வீட்டின் பின் புறம் தோட்டம்-இப்படி காட்சி தருகிறது அந்த வீடு. வீடுகளுக்கு அருகே பள்ளியும், கடைகளும் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள இந்த வீடுகளைப் போல, மேலும் 23 வீடுகள் கட்டப்படும் என்றும் தெரிந்துகொள்கிறோம்.


அந்தக் குழந்தைகள் காப்பகக் கட்டடம் எவ்வளவு அழகாக இருக்கிறது!

கந்திக்குப்பத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 30,000 செலவில் கட்டப்பட் டுள்ள இந்தக் காப்பகத்தில், 50 குழந்தைகள் பயன்பெறும். இதே போல பர்கூர், சந்தூர், போச் சம்பள்ளியிலும் குழந்தைகள் காப்

பர்கூர்—திருப்பத்தூர் சாலையை இணைக்கும் சாலை.





உருவாகிவரும் ஆதிதிராவிடர் காலனி

பகங்கள் உள்ளன. இந்தக்காப்பகங்களுக்குக் 'கேர்,' நிறுவனமும் உதவி செய்கின்றதாம்.

வரட்டனப்பள்ளியில், கால் நடைகளுக்சான குட்டை ஒன்று சாவி துவாரம் வடிவில் கட்டப்பட்டுள்ளது. 28,000 லிட்டர் தண்ணீர் கொள்ளளவு உள்ள இந்தக் குட்டை 10 அடி ஆழமுள்ளது. இது போன்று ஐந்து குட்டைகள் பல பகுதிகளில் உள்ளன.

கிராமக் குடிநீர்த்திட்டம் பற்றிய சில தகவல்கள் தெரிந்தன.

1981-82க்கு ஒதுக்கீடு ரூ. 1,20,000. மல்லப்பாடி, வரட்டனப் பள்ளி, ஒப்பதவாடி, ஐகுந்தம் கொத்தப்பள்ளி, பெரிய பணமுட்லு ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து தண்ணீர் விநியோகிக்க 'பைப் லைன்' போடப்பட்டுள்ளது. ஒன்றியப்பகுதியிலுள்ள கைப்பம்புகள்—151.

1981-82ல் தன்னிறைவுத்திட்டத்தின் கீழ் புதிதாக 140 பம்புகளுக்குத் திட்டமிடப்பட்டது. அதில் போடப்பட்ட பம்புகள் 60.

## கிருஷ்ணகிரி

பர்கூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குச் செல்கிறோம்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம் பெரிய முத்தூரில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட அழகிய துவக்கப் பள்ளியைப் போய்ப் பார்க்கிறோம். ரூ. 65,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட இந்தப் பள்ளியில் 125 மாணவர்கள் பலன் பெறுவார்கள்.

அதோ, அந்தக் காட்டுப்பாதையில், குழாய்ப்பாலம் ஒன்று தென்படுகிறதே! ஆம். ரூ. 66,000 செலவில் ஆறு குழாய்கள் பொருத்தப்பட்ட பாலம் தான் அது. கிருஷ்ணகிரி ஒன்றியப் பகுதிகளில் மொத்தம் 92 சிறு பாலங்கள் உள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் மோரமடுகுப்பகுதியில் ஒரு புதிய துவக்கப்பள்ளி கட்டப்பட்டிருக்கிறது.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள துவக்கப் பள்ளி.

கிருஷ்ணகிரி - வெலகலஹள்ளி சாலையில் ஏராளமான பெண்கள் பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அருகே போய்ப் பார்க்கிறோம். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டு வரும் சிமெண்ட் பாலம்தான் அது. ரூ. 53,000 செலவில் கட்டப்பட்டு முடியுந்தறுவாயில் உள்ள இந்தப் பாலம், ஊர் மக்களுக்குப் பெரிதும் பயன்படும். பேருந்து போக்குவரத்துக்கும், காட்டாற்று வெள்ளத்திலிருந்து விடுபடவும் இந்தப் பாலம் உதவும்.

இதே பகுதியில், புதிய துவக்கப்பள்ளி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

ஆலப்பட்டியில், தாய்சேய் நிலையம் மற்றும் துவக்கப்பள்ளி ஆகியவை அருகருகே உள்ளன. இவற்றுக்கு முன்புறம் ஒரு ஏக்கரில், கிராம விளையாட்டு அரங்கம் ஒன்றும் உள்ளது. இது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டப் பணியாகும்.

கொரல்தொட்டியில் - ஆதி திராவிடர்களுக்கான 25 வீடுகள் முடியுந் தறுவாயில் உள்ளன. இதுவும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமாகும்.

உப்புக்குட்டையில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் உருவான இது காட்டாற்று வெள்ளத்திலிருந்து விடுபட பெரிதும் உதவும்.


1979-80ல், அகில இந்திய அளவில்-குடும்ப நல அறுவைச் சிகிச்சை இலக்கை எட்டியதற்காக, சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 5000 பரிசு பெற்றதுதான் சிக்க பூவத்தி. இந்தக் கிராமத்தில் இப்போது புதிய குழந்தைகள் காப்பகம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.


ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்:

''இராயக்கோட்டையில் 3 ஏக்கரில் கூபாபுல் வளர்க்கவும், மேலேரிக் கொட்டாயில் பாலம் ஒன்று கட்டவும், எல்லாப்பள்ளிகளுக்கும் கழிவறை கட்டவும் திட்டமிருக்கிறது.

''சிறு தொழில் செய்வோருக்குக் கடன்தர ஏற்பாடு செய்கி

ஆறு குழாய்கள் உள்ள பாலம்.





வெலகலஹள்ளி சாலையிலுள்ள சிமெண்ட் பாலம்.



ஆதிதிராவிடர்களுக்கான புதிய வீடுகள்.



ஆணையாளர்

திரு எஸ். இராமகிருஷ்ணன்

றோம். பட்டதாரி இளைஞர்களுக்கு 6 மாதக் காலம் பயிற்சி அளித்து, உதவித் தொகை வழங்கி, பிறகு வங்கி மூலம் கடன் தந்து அவர்கள் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட ஆவன செய்கிறோம். இதேபோல், பெண்களுக்குத் தையல் பயிற்சியும் அளித்து தையல் இயந்திரங்கள் வழங்கியுள்ளோம். குடும்ப நலத் திட்டத்துக்குக் குறிப்பாக, பெண்களிடம் ஆதரவு மிகுதியாக உள்ளது.

''இதுவரை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 22 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 92 பாலங்கள், 2 தாய் சேய் நலவிடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 13 வட்டாரங்களில் வேலைகள் முடிந்துள்ளன. 3 வட்டாரங்களில் மட்டும் வேலைகள் இவ்வாண்டு தொடங்கும்.''

பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் ஊர்நல அலுவலராகப் பணியாற்றியவர் திரு ஏ.பி. சுப்பிரமணியம் அவர்கள். அவர் 1975ல் இந்தியாவிலேயே சிறந்த ஊர்நல அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசு பெற்றவர். இவர் பணியாற்றிய அமாணிமல்லாபுரம் என்ற கிராமமும் அப்போது சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தற்போது கிருஷ்ணகிரியில் பணியாற்றுகிறார். அவர் கூறுகிறார்.



சிறந்த ஊர்நல அலுவலர்

திரு ஏ. பி. சுப்பிரமணியம்,

''எங்கள் ஒன்றியத்தில் 29 சமூகக் கல்வி மன்றங்கள் உள்ளன. மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை மக்களுக்குப்பொது அறிவுச் செய்திகள் கூறுதல், கிராம வானொலி மூலமாக விவசாயச் செய்திகள் அறியச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறேன். இங்கு 10 கிராம இளைஞர் மன்றங்கள் உள்ளன. இவர்கள் பெரியமுத்தூரில் 2000 யூகலிப்டஸ் செடிகளை நட்டுள்ளனர். முதியோர் கல்வி, வாரத்தில் 5 நாட்கள் நடக்கின்றன

இதற்காக 100 மையங்கள் உள்ளன. அதற்கு நாங்கள் உதவுகிறோம்.''

## ஓசூர்

மூன்றாம் நாள் ஓசூருக்கு வருகிறோம்.

ஓசூரில் கிராமங்கள் ஒருபக்கம் தன்னிறைவைப் பெற்றுத் தழைத்து வருகிறது. ஒரு பக்கம் நகரப் பகுதிகள் தொழில் கேந்திரமாக மாறிக் கொண்டு வருகின்றன.

ஓசூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள அந்திவாடிக் கிராமத்துக்கு, அதன் ஆணையாளர் திரு. க. பால்ராஜ் அவர்கள் நம்மை அழைத்துச் செல்கிறார்.

அங்கே, ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட 28 வீடுகள் காட்சி அளிக்கின்றன.

முக்கிய சாலை ஒன்றில் நின்று கொண்டு பார்க்கிறோம். பார்வைக்கு அழகாகக் காட்சியளிக்கும் அந்தக் காலனி, ஏழை எளிய மக்கள் குடிவரப்போகும் குடியிருப்புகள் என்பதை எண்ணும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒவ்வொரு வீடும் 9000 ரூபாய் மதிப்பில் மிகவும் வசதியாக, 435 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. சீமைஓடுகள் வேயப்பட்ட இந்த வீட்டுக்கு முன்னால் இரண்டு தென்னை மரங்கள், நல்ல கருங்கல் சாலை, தெரு விளக்கு, வீட்டுக்கு மின்விளக்கு, பின்புறம் தோட்டம்- இப்படி நல்ல பல வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் காலனி உருவாகப் பலர் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் ஆணையாளர் திரு க. பால்ராஜ், ஊர் நல அலுவலர் திரு ஏ. பாலசுப்பிரமணியம், இளநிலைப்பொறியாளர் திரு சி. ராமன் ஆகியோர் முக்கியமானவர்கள்.



ஆணையாளர்
திரு க. பால்ராஜ்

'இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரிக் கிராமமாக விளங்கப் போகிறது' என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள் பெருமையோடு கூறுகிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்—

''இந்தக் காலனியின் மையப் பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கவும், நூலகம் ஒன்று அமைக்கவும், விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தவும் திட்டமிருக்கிறது.

''முடியுந்தறுவாயில் உள்ள இந்தக் காலனிக்குக் குடி தண்ணீர், கழிவறை, துவக்கப்பள்ளி போன்ற வசதிகள் செய்து கொடுக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

''பதினெட்டு வீடுகளுக்கு பாரத ஸ்டேட் பாங்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடன்கள் தரவும், 10 வீடுகளுக்குக் கறவை மாடுகள் தரவும் ஏற்பாடாகியுள்ளது.

''தொழில் நகரங்களுக்கு மத்தியில் இந்தக் காலனி உள்ளதால் தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கும்.''

இந்தப் பகுதியில், பொதுக்கழிவறை ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. 30அடி ஆழத்தில் பொதுக் கிணறு ஒன்றும் தோண்டப்பட்டு வருகிறது. முகப்பில் அழகிய வளைவு ஒன்று கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளாக காலி மனைகளாகக் காட்சியளித்த இந்தப்பகுதி, இன்று கவின்மிகு குடியிருப்புகளாக உருவாவதற்குக் காரணம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் தான்.

அந்திவாடி ஆதிதிராவிடர் காலனி, அனைவரையும் கவரும் என்பதில் ஐயமில்லை.

மத்திய அரசு ஊரக வளர்ச்சித் துறையின் துணை இயக்குநர் (நடுவிலிருப்பவர்) கழிவு நீர்த்திட்ட வேலைகளைப் பார்வையிடுகிறார் (ஓசூர்)





காலனியை விட்டு நெடுந் தூரம் போகிறோம். அங்கே ஐந்து ஏக்கர் பரப்பளவில் சத்துணவுக்கான காய்கறிகள், பழங்கள், கீரைகள் பயிரிடப்பட்டிருக்கின்றன. அங்கே உள்ள பெரிய புதிய கிணறு இந்தத் தோட்டத்துக்கு வேண்டிய தண்ணீரைத் தருகிறது. மாட்டுத் தீவனம் அதிக அளவில் தேவைப்படுவதால், 19 ஏக்கர் பரப்பில் மாதிரி கூபாபுல் வளர்க்கவும் திட்டமிருக்கிறது.

1976 முதல் குடும்பநலத் திட்டத்தில், மாநிலத்திலேயே 2வது இடமும், சிறு சேமிப்பில் முதல் இடமும் இவ்வொன்றியம் வகித்து வருகிறது.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் வரிசையாகப் புளியஞ்செடிகள் வைக்கப்பட்டுள்ளனவே! ஆம். போகப்பள்ளி சாலையில் 3 கி.மீ தூரத்துக்கு 550 புளியங்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ், மாசினாயக்கனப்பள்ளியில் கசிவு நீர்க்குட்டை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. 40. ஏக்கர் நீர்ப்பரப்பு இதன் கொள்ளளவாகும். இதில் நீர் தேக்கி வைப்பதால் 20 பம்ப் செட்டுக்கு நீர் கிடைக்கும். பக்கத்துக் கிராம ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் இது பெரிதும் பயன்படும். ரூ. 40,000 செலவில் வேலைகள் நடந்து முடியுந்தறுவாயில் உள்ளன. 145 மீட்டர் நீளமும் 5 மீட்டர் உயரமும் உள்ள இந்த அணை வேலையை ஆதிதிராவிடர் மக்களே செய்வது குறிப்பிடத்தக்கது. முன்பெல்லாம் இங்கு தேங்கும் மழைத் தண்ணீர் வீணாகப் போனது. இப்போது அது சேமித்து வைக்கப்படும்.

## அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சேர மாணவர்களுக்கு அரசு ஆணையில் விதிவிலக்கு

**1974-75**-ம் ஆண்டு முதல் அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படித்துவரும் மாணவர்கள் 6-ஆம் வகுப்பிற்குமேல் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று 1974-ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் வரப்பெற்ற வேண்டுகோளுக்கிணங்க அரசு இந்த ஆணையைத் தளர்த்தி கடந்த எட்டு ஆண்டுகளாக மாணவர்கள் 8-ஆம் வகுப்பு வரை சேர்த்துக்கொள்ளப்பட வகைசெய்தது.

1982-83-ஆம் கல்வியாண்டிலும் அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் அல்லது தனியாகப் பயின்ற மாணவர்கள் 6 முதல் 8-ஆம் வகுப்புவரை உள்ள அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 7 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கவும், 1974-ஆம் ஆண்டு ஆணைக்கு விலக்களித்து அரசு அனுமதி அளித்துள்ளது. தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் எல்லாவிதமான அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அரசின் இந்த விதிவிலக்கை மாவட்டக்கல்வி அலுவலர்களும், பெண்கள் பள்ளி கண்காணிப்பாளர்களும் அளிப்பர்.

## சென்னை நகரில் மலேரியா கொசுத் தொல்லையை சமாளிக்க சென்னை மாநகராட்சிக்கு அரசு ரூ. 25 இலட்சம் கடனுதவி

**செ**ன்னை மாநகரில் பெருகிவரும் கொசுத் தொல்லையைச் சமாளிக்க சென்னை மாநகராட்சி, கருவிகள் வாங்கவும் கூடுதல் ஊழியர் நியமனம் செய்யவும் வேண்டியுள்ளது. இத்தேவைக்கான கூடுதல் செலவினத்தை ஈடுகட்ட தமிழ்நாடு அரசு ரூ. 25 இலட்சத்தை சென்னை மாநகராட்சிக்குக் கடனாக வழங்கியுள்ளது.

## அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் கழிவறை வசதிக்கென ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு

**அ**ரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் போதிய கழிவறை வசதிகள் இல்லாததைக் கருத்திற்கொண்டு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சம் செலவில் போதிய கழிவறை வசதிகள் செய்து கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காகும் தொகை சிறப்பு வழக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒசூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 4 உயர் நிலைப்பள்ளிகள் 4 துவக்கப்பள்ளிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. சுயவேலை வாய்ப்பில், 82 பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச்சாலைகள் போடப்பட்டுள்ளன. 52 சாண எரிவாயுச் சாதனம் அமைக்கவும் திட்டம் உள்ளது. குடும்பநல அறுவைச் சிகிச்சை, சிறு சேமிப்பு வசூல், கதர் விற்பனை ஆகியவற்றில் இது முன்னேற்றம் கண்டுள்ளது.

# கிழக்குக் கடற்கரையின் ஓர் அணிகலன்

இயற்கைத் துறைமுகமும், கடற்கரையும், சுடற்ற அழகும் மனற்பரப்பும் கொண்ட விசாகப் பட்டினம், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையின் அணிகலனாகத் திகழ்கிறது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆந்திரா மன்னர் ஒருவர் காசிக்குச் செல்லும் வழியில் இங்கு தங்கியதாகவும், இதன் அழகில் மயங்கி அங்கு தனது விருப்ப தெய்வமான வைசாகக் கோயில் ஒன்றைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது. அதே நேரத்தில் கி.மு. 200-ல் புத்த மதத்தைச் சேர்ந்த இளவரசி வைசாகா அங்கு வாழ்ந்ததாகவும், அவளது பெயரில் இந்த நகரத்நுக்கு விசாகப்பட்டினம் என்று பெயரிடப்பட்டதாகவும் இன்னொரு கதைச் செய்தி அந்தப்பகுதியில் பேசப்படுகிறது. அசோகர் படையெடுப்புக்குப்பின் ஆந்திரம் புத்தமதக் கல்வியின் இருப்பிடமாக மாறியது.

நாட்டில் மிகப் பெரிய கப்பல் தளமும் இயற்கைத் துறைமுகமும், விசாகப்பட்டினத்துக்கே சிறப்பான தன்மையை அளிக்கிறது. உர ஆலை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, பாரத கனரக கப்பல்கள் மற்றும் பிளேட்டுகள், பெரிய தொழில்கள் போன்றவை விசாகப்பட்டினத்தை ஒரு தொழில் கேந்திரமாக உருவாக்கியுள்ளது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள எஃகாலை இந்த நகரை மிகப்பெரியதொழில் மையமாக வளர்ச்சி பெறச் செய்யும்.

வங்காள விரிகுடாவின் அருமையான காட்சிநகரைப் படம்பிடித்துக்காட்டும். ஒரு பறவை பார்வை ஆகியவற்றை 157 மீட்டர் உயரத்திலுள்ள டால்ஃபின் மூக்கு பகுதியிலிருந்து காணமுடியும்.

70 இலட்சம் மெழுகுவர்த்தித் திறன் கொண்ட கலங்கரை விளக்கம் 64 கிலோமீட்டர் வீச்சில் செயல்படுகிறது. இது உலகத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்தது. லாசன் வளைகுடா ஒரு கோடை சொர்க்கம் ஆகும். கடலில் குளிப்போர்களுக்கு இது ஒரு அருமையான இடம். கடலில் குளித்த பின்னர் நல்ல தண்ணீரில் நீராடவும், ஆடைமாற்றிக் கொள்ளவும் லாசன் வளைகுடாவில் வசதி உள்ளது. செங்குத்தாகச் சரிந்து செல்லும் சாலைகளில் கடந்து செல்லும்போது கிழக்கு மலைத் தொடரையும் வங்காள விரிகுடாவையும் எதிர் எதிரே கண்டு களிக்க முடியும்.

மாநிலத்தில் பல முக்கிய சுற்றுலா அம்சங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளன. விசாகப்பட்டினம் வருவோர் 24கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பீமுனிப்பட்டினம் செல்லத் தவறமாட்டார்கள். கடற்கரைச் சாலையில் இது அமைந்துள்ளது. பண்டைய டச்சுக்காரர்களின் குடியிருப்பு இது. பல டச்சு நினைவுச் சின்னங்கள் இங்கு உள்ளன. கடலோரத்தில் இதற்கு இணையான இடம் இல்லையெனலாம். அவ்வளவு அழகான சுற்றுலா மையம் இது.


இந்தப் பகுதியில் நீலக் கடல்பல வண்ண ஜாலங்கள் புரிவதாகச் சுற்றுலாப் பயணிகள் கூறுகிறார்கள். ஆந்திரத்தில் சுற்றுலா சர்க்யூட்டாக அபிவிருத்தி செய்வதற்குப் பீமுனிப்பட்டினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இங்கு இருவர் தங்கக் கூடிய அறைகள் 10 கொண்ட சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 60 படுக்கைகள் கொண்ட விடுதி மாதிரியான கட்டடம் ஒன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விசாகப்பட்டினம், பீமுனிப்பட்டினம் இடையே சாலை மற்றும் பூங்காக்கள் அபிவிருத்தி செய்யப்படும். இந்தப் பகுதிகளுக்காக 50 இலட்சம் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தில் இருந்து 23 கிலோ மீட்டர் தூரத்தில் சிமாச்சலம் என்ற இடத்தில் ஸ்ரீ நரசிம்மர் கோயில் மலைப்பகுதியில் உள்ளது. சிமாச்சலத்தில் சுற்றுலா ஓய்வு இல்லம் ஒன்றும் கிழக்குத் தொடர் மலைப்பகுதியில் அழகு கொலுவிருக்கும் பகுதியாகும். இது கடல் மட்டத்திலிருந்து 1067 மீட்டர் தூரத்தில் உள்ளது. பசுமையான காட்சிகள் நிறைந்த பாதை வழியே பயணம் செய்து இந்தப் பள்ளத்தாக்கை அடைவது உற்சாகமளிக்கும் ஒன்றாகும். இந்த இடத்தில் சுற்றுலா இல்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அனந்தகிரி மலைத்தொடர் அழகு நிறைந்த ஒன்றாகும். இதற்கு 5 கிலோமீட்டர் தொலைவிலும்விசாகப்பட்டினத்திலிருந்து அரக்குப் பள்ளத்தாக்கு செல்லும் வழியில் 8 கிலோமீட்டர் தொலைவிலும் போரா குகை அமைந்துள்ளது. போரா கிராமத்துக்கு பக்கத்தில் ஒரு நீரோடை சுண்ணாம்புக்கல் குன்று அருகே ஓடி திடீரென்று மறைந்துவிடுகிறது. மீண்டும் சுண்ணாம்புக்கல் மலை வழியாகப் புகுந்து வரும் அந்த நீரோடை படு பாதாளத்தில் பாய்ந்து ஓடுவதைக் காணலாம். இந்த நீரோடையின் பாதையில் குகைகள் இடம் பெற்றுள்ளன. சுற்றுலாப் பயணிகள் இந்தக் குகைகளைஅடைவதற்குப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது ஒரு புனிதத் தலமாகவும் கருதப்படுகிறது. ஒவ்வொரு சிவராத்திரியிலும் இங்கு விழா கொண்டாடப்படுகிறது. பக்கத்திலிருந்து தொலை தூரத்திலிருந்தும் ஏராளமாக குறிப்பாக மலைச் ஜாதி மக்கள் இந்த விழாக்களுக்கு வந்து கூடுகிறார்கள்.



விமானம், ரயில், சாலை ஆகியவற்றின் மூலம் விசாகப்பட்டினத்தை அடைய முடியும். ஹைதராபாத் மற்றும் கல்கத்தாவிலிருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் தினசரி விசாகப்பட்டினம் வருகின்றன. விசாகப்பட்டினத்துக்கும் வால்டேருக்கும் இடையே ரயில் இணைப்பு உள்ளது. இது சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் இடையில் பாதி வழி தூரத்தில் உள்ளது.

நவீன ஓட்டல்கள், வசதியான பஸ்கள், சுற்றுலா டாக்சிகள் விசாகப்பட்டினத்தில் எப்போதும் கிடைக்கின்றன. சுற்றுலாப்பயணிகளுக்கு வசதியான வகையில் சுற்றுலாப் பயணங்களுக்கும் இவை ஏற்பாடு செய்கின்றன.



# ஆரைக் கீரை

டாக்டர் ஜி. சாமுவேல்,
தென்னேரி.

தமிழ்ப்புலவன் கம்பனுக்கும் தமிழ் மூதாட்டி ஔவைக்கும் ஒரு சமயம் தகராறு ஏற்பட்டதாம். ஔவையை 'அடி அடி' என்று கூற விரும்பிய கம்பன் விடுகதை கூறுவது போல ''நாலுகாலடி ஒரு பந்தலடி'' என்று கூறினானாம். அதற்கு ஔவை

''எட்டேகால் லட்சணமே,
ஏமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை
வாகனமே — முட்டமேல்
கூரையில்லா வீடே,
குலராமன் தூதுவனே
யாரையடா சொன்னாய் அது' என்று

கூறிய அந்த விடுகதைக்கீரைதான் ஆரைக் கீரை. இக்கீரை நீர் ஆரைக்கிரை என்றும் ஆராக்கீரை என்றும் வழங்கபெறும். இது பயிரிடப்படுகின்றன கீரை இனமல்ல. நீரோடைகளிலும் நீர் நிலைகளிலும் வயல்வெளிகளிலும் வாய்க்கால்களிலும், பயிர்களின் இடையிலும் தன்னிச்சையாக இக்கீரை வளரும். இயற்கை அன்னையின் இணையற்ற அன்பளிப்பு ஆரைக் கீரை. சக்தி மிகுந்த இக்கீரையும் குணமும் என்று கேட்டானாம். அதற்கு அவள் ''ஆரைக் கீரை ஆணுக்கு ஆகாது'' என்று கூறினாளாம். அவள் கணவன் உண்மையை தெரிந்துகொண்டான், வயல் அறுவடை முடிந்ததும் தன் வயலில் விளைந்த 'குண்டஞ்சம்பா' நெல்லை அரைத்துத் தான் மட்டும் சாப்பிட்டானாம். அவன் மனைவி அவனைப் பார்த்து ஏன் என்று கேட்ட போது ''குண்டஞ்சம்பா அரிசி பெண்களுக்கு ஆகாது'' என்று அவன் திருப்பிக் கூறினானாம். இக்கதையிலிருந்து ஆரைக் கீரையின் சுவை நமக்குப் புரிகிறது. ஆரைக் கீரை மிகுந்த சுவை கொண்டது.

**நீரிழிவுக்கு (டயாபடிஸ்) மருந்து:**

ஆரைக்கீரையை மேற்கண்டபடி சமைத்து 1 மண்டலம் (40 நாள்) 2 மண்டலம் (80 நாள்) 3 மண்டலம் (120 நாட்கள்) தவறாமல் சாப்பிட இறைவன் அருளால் இக்கீரையின் மூலமாகவே நீரிழிவு நோய் அடியோடு ஒழிந்து போகும். சாகும்வரை 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொண்டிருப்பதைவிட நோயை வேருடன் அகற்றும் ஆரைக்கீரை

இன்னமும் அநேகருக்கு தெரிவதில்லை.

**உபயோக முறை:**

இக்கீரையை கிள்ளி எடுத்து தண்ணீரில் சுத்தமாக அலசி பூண்டு மிளகாய் கூட்டி தாளித்து நன்றாக வதக்கிச் சாப்பிடலாம். கிராமப்புறங்களில் சீதபேதிக்கு இக்கீரையை பச்சையாக கிள்ளி மென்று தின்பதை இன்றளவும் காணலாம்.

**ஆரைக்கீரை ஆணுக்கு ஆகாது:**

கிராமத்தில் வசிக்கும் ஒருவன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச சென்றானாம். அங்கிருந்த ஆரைக்கீரையை பறித்து வந்து மனைவியிடம் கொடுத்து சமைக்கச் சொன்னானாம். அவன் வயலுக்குச்சென்றபின் கீரையைச் சமைத்த அவன் மனைவி சிறிது சாப்பிட்டுப் பார்த்தாளாம். நல்ல ருசியுடன் இருக்கவே கொஞ்சம் கொஞ்சமாக எல்லா கீரையையும் சாப்பிட்டு விட்டாளாம். வயலிலிருந்து வீடு திரும்பிய கணவன் தன் மனைவியிடம் எங்கே கீரை

சாலச்சிறந்தது. தவிர பித்தத்தால் ஏற்படும் அனைத்து வியாதிகளையும் கண்டிக்கும் சக்தி கொண்டது இக்கீரை. ஆரைக்கீரையின் அருங்குணத்தை சித்தர் வாக்கு அடியிற்கண்டவாறு கூறியுள்ளது.

''தின்றாலும் ருசிதரும் தீர்ப்பயித்தியத்
தைப்
பொன்றாத நீரிழிவைப் புண்ணீரை—
யென்றுமிந்த
வூராரைச் சாரலோட்டிவிடும் நாவி
தழரார்
நீராரைக் கிரையது-நீ

—சித்தர்வாக்கு.

1. தின்பதற்கு ருசிதரும்
2. தீராத பைத்தியத்தைப் போக்கும்
3. நீரிழிவைப்போக்கும்
4. புண் ஏற்பட்டு நீர் கசியும் நோய்களைப்போக்கும்

எனவே, ஆரைக்கீரையை உணவில் சேர்த்து நோய் நீங்கி சுகம் பெறலாம்.

மாணவர் பக்கம்

# அறிவுச் சுடர்

உண்ணும் திராட்சைப் பழங்களைச் செக்கச் செவேல் என்று ஆக்குகின்றன; மது இறக்கும் திராட்சைப் பழங்களைப் பருமனாக்குகின்றன. பருத்திச் செடியின் இலைகள் உதிரச் செய்து பருத்தி அறுவடையை எளிதாக்குகின்றன; புகையிலைச் செடியின் பக்கக் கன்றுகளை அழித்துப் புகையிலையின் குணத்தைப் பெருக்குகின்றன; இவை மட்டுமா?

பச்சை வாழைக் காய்களைக் கண்ணைக் கவரும் மஞ்சள் வண்ணப் பழங்களாக்குகின்றன. அவை எவை?

செடிகளில் இயற்கையாக உண்டாகும் ஹார்மோன்கள் போன்று செயற்கையாக உற்பத்தி செய்யும் இரசாயனப் பொருள்கள்! இவை இந்த வேலைகளையெல்லாம் செய்வது மட்டுமல்ல; இயற்கையில் பல ஆண்டுகள் பிடிக்கும் மாற்றங்களைச் சில மணி நேரத்திற்குள் ஏற்படுத்திப் பயிர்ப் பச்சைகளின் பலனைப் பெருக்கவும் உதவுகின்றன; வேளாண்மையின் உற்பத்தித் திறனையும் ஆதாயத்தையும் கூட்டுகின்றன.

வளர்ச்சி, உரிய மாற்றம், இனவிருத்தி இவையெல்லாம் தாவரங்களிலும் சரி, மனிதரிடத்திலும் சரி, ஹார்மோன்களினால் ஒழுங்கு செய்யப்படுவனவாகும். தாவர ஹார்மோன்கள் 1920-க்குப் பிறகுதான் விஞ்ஞானிகளுக்குத் தெரிய வந்தன.

ஹார்மோன்கள் செய்யும் வேலைகள் பலப்பல. ஒரு செடியிலே வேர்களை வளரும்படி ஆணை இடுவன ஒரு வகை ஹார்மோன்கள்; பழங்களை உதிரும்படி ஆணை இடுவன மற்றொரு வகை ஹார்மோன்கள்; செடியிலிருந்து ஈரம் வெளியேறுவதைக் குறைப்பவை இன்னொரு வகை; பூச்சிகளை எதிர்த்த தடிப்பன மற்றொரு வகை. இவையெல்லாம் எப்படி நிகழ்கின்றன என்பது இன்னும் விளங்கவில்லை, என்கிறார் மிசிகன் பல்கலைக்கழக விஞ்ஞானி ராபர்ட் பண்டர்ஸ்கி.

## உலகின் மிகப் பெரிய கடிகாரம்

பவேரியாவில் அமைந்துள்ள உணவுவிடுதி ஒன்றில் உலகின் மிகப் பெரிய கடிகாரம் ஒன்றுள்ளது. இதற்கு 100 வயதாகிறது. 25 cwt எடையுள்ள இந்தக் கடிகாரத்தின் உரிமையாளர் ஆன்டன் ரிட்ஸ் (Anton Rietz) ஆவார். இதற்கு 10 முகங்கள் உள்ளன. அவற்றில் நான்கு, பெர்லின், வியன்னா, முனிச்சு மற்றும் பாரீசில் அப்போதுள்ள நேரத்தைக் காட்டுகின்றன.

ஆனால் இது உலகின் மிகப் பெரிய கடிகாரமானாலும் மிகச் சரியாக நேரத்தைக் காட்டுவதில்லை. மார்ச்சு 82 முதல் டுசெல்டார்ப் (Duesseldorf) டிவி டவரில் அமைக்கப்பட இருக்கிறது. ப்ருனிஸ்விக் (Brunsuick) அணுசக்தி கடிகாரத்துடன் இணைக்கப்பட்டு இயங்க இருக்கிறது. 40 முதல் 160 மீட்டர் வரை உள்ள குறுக்குவாட்டு அளவு கோலைக் கொண்டு உலகிலேயே நேரத்தைத் துல்லியமாக இது காட்ட இருக்கிறது.

## அமில மழை

அமில மழைத் துளிகளால் காரின் மேற்பகுதி அரிக்கப்படுகிறது. பூசப்பட்ட வண்ணம் மற்றும் சிமெண்ட்டு வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஏரியிலுள்ள தாவர வகைகள் சாகடிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு சில ஏரிகளுக்காவது இதனை எதிர்க்கும் சக்தி இருக்கிறது என மசாசுசெட்சைச் சேர்ந்த இரசாயன விஞ்ஞானி கருதுகிறார்.

ஆலிவர் டி சாஜிசெக் (Oliver T Zajicek) என்ற இரசாயன விஞ்ஞானி ஏரிகளுக்கு இயற்கையாகவே பாதுகாப்பு முறை உண்டு எனக் குறிப்பிடுகிறார். களிமண், மைக்கா, ஆஸ்பெஸ்டாஸ் போன்ற கூட்டுப் பொருட்களில் அலுமினிய சிலிக்கேட் உள்ளது. இது அமிலத்தை நடுநிலைப்படுத்துகிறது அல்லது தீங்கற்றதாக்கி விடுகிறது.

காற்றுமண்டலம் அசுத்தம் மிக்கதாகும் போது, மேகங்களும் பாதிப்படைகின்றன. இதனால் அமில மழை பெய்கிறது.

## ஆசான் தெய்வம்

கங்கை மணிமாறன், பி.லிட்.

எண்ணும் எழுத்தும் சொல்லித் தந்தவன்
இறைவன் போலாவான்:
கண்ணும் மனமும் ஒளிபெற் றோங்கிடக்
கண்ட பொருளாவான்!

பாதை காட்டிப் பயணம் விளக்கிடும்
பரிவுச் சுனையாவான்;
எத மழித்தே இன்பம் சேர்த்திடும்
எளிமைத் துணையாவான்!

உலகைக் கற்க உரிய வழிகளை
உரைக்கும் திறமாவான்;
இலகு செல்வம்; புகழை ஈந்திடும்
இனிய வரமாவான்!

மாசு கெடுத்து மாண்பு கொடுத்திடும்
மனித மருந்தாவான்:
ஆசான் புதிய எழுச்சி வித்திடும்
அறிவின் விருந்தாவான்!

ஆசான் இல்லாக கலைகள் உலகினில்
ஆற்றல் பெறுவதில்லை;
ஆசான் தெய்வம்; அறிவும் தெய்வமே;
அறிந்தால் துயரில்லை!.



# நேரு பற்றிய திரைப்படம்

பண்டித ஜவஹர்லால் நேரு பற்றிய திரைப்படம், இந்திய-சோவியத் கூட்டு முயற்சியால் உருவாகிறது. இந்தியா, சோவியத் யூனியன், பிரான்ஸ் மற்றும் பல நாடுகளிலிருந்து, இப்படத்திற்குத் தேவையான ஏராளமான விஷயங்கள் சேகரிக்கப்படுகின்றன.

சோவியத் தரப்பும் இந்தியத் தரப்பும், இரண்டு திரைக்கதைகளைத் தயாரித்துள்ளன; அவற்றிலிருந்து ஒரு திரைக்கதை உருவாக்கப்படும். நேருவைப் பற்றி இரண்டு பாகங்கள் கொண்ட முழு நீளப்படம் தயாரிக்கப்படும். எனவே, நேருவைப் பற்றிய டாக்குமெண்டரிப் படங்களை மட்டுமின்றி, அவரது கடிதங்கள் கட்டுரைகள், நூல்கள் ஆகியவையும் ஆராயப்படுகின்றன.

''நாங்கள் சேகரித்துள்ள ஏராளமான தகவல்கள், நேரு ஒரு தலை சிறந்த அரசியல்வாதி என்பதுடன், தலைசிறந்த மனிதர் என்பதையும் காட்டுகின்றன'' என்று இப்படத்தின் கூட்டு இயக்குநர் கூறியுள்ளார்.



# எழுதுகோலின் கதை!

பழந்தமிழ் அரசர்கள் தங்கள் ஆட்சி முறையையும், அறக்கட்டளையையும் கல்லில் தீட்டினர். இக்கல்வெட்டுகளில் உரைநடையை மட்டுமின்றிக் கவிதையும் காணலாம். எனவே தமிழர்கள் பயன் படுத்திய முதல் எழுதுகோல் 'சிற்றுளி'.

பதமாக வேகவைத்த பனை ஓலைகளை எழுதும் ஏடாகப் பயன் படுத்தி, கூரிய கருவிகளைக் கொண்டு எழுதும் வழக்கம் ஏற்பட்டது. இலக்கியமும், இலக்கணமும், சோதிடமும் மருத்துவமும் ஏட்டில் வளர்ந்தது. இந்நாள்தான் எழுத்தாணியின் காலம்.

ஏட்டுச் சுவடிக்குப் பதிலாகத் துணிச் சுருளைகளில் பறவைகளின் இறகுகளால் எழுதும் வழக்கம் அரசவைகளில் தோன்றிற்று. அழகான நீண்ட இறகுகளைக் கொண்டு எழுத புகைக் கரியிலிருந்தும் அரக்கு, மாசிக்காய், கடுக்காய் பச்சிலை முதலியவற்றிலிருந்தும் ஒரு வகை மை செய்யலாயினர். பறவையின் இறகு, காலப் போக்கில் கட்டைப் பேனாவாக மாறியது.

கி. பி. நூறாம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டகாகிதம். அரேபியர்களால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. கட்டைப் பேனா, ஊற்றுப் பேனாவாக மாறிற்று. வழவழப்பான காகிதமும், தடையின்றி எழுத பேனாவும் சேர்ந்து இலக்கியம் வளர்கிறது. அறிவும் பெருகுகிறது.

**ச. புகழேந்தி,**
**வேளாண்மை 2-ஆம் ஆண்டு,**
**சீனிவாசராவ் மேல்நிலைப் பள்ளி,**
**திருவையாறு.**

## இரத்தத் தொழிற்சாலை

இங்கிலாந்தில் இரத்தத் தொழிற்சாலை நிறுவ அந்நாட்டு அரசு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவிட முடிவு செய்துள்ளது. இத்தொழிற்சாலை மனித இரத்தத்திலுள்ள புரோட்டின்களைப் பிரித்துத் தூய்மைப் படுத்திச் சேகரித்து வைக்கும். தீக் காயங்களைக் குணப்படுத்துவதற்கும் பிற சில நோய்களைக் குணப்படுத்துவதற்கும் இப்புரோட்டின்கள் பயன்படும்.

பூமியில் உள்ள மக்கள் அதிகரிக்க அதிகரிக்க பூமியின் எடை அதிகரிக்குமா அல்லது அதே எடை இருக்குமா ?

பல டன் எடையைத் தூக்கும் தராசுத்தட்டில் சில குண்டுமணிகளைப் போட்டாலும் எடுத்தாலும்; இதனால் ஏற்படும் மாறுபாட்டை உணர முடியாது; இதேபோல, நிலத்தின் அடியிலுள்ள கனிப்பொருட்கள், எண்ணெய், தண்ணீர், பாறைகள், எரிமலைகள் ஆகியவை நிலத்தின் எடையை ஆதிகரிக்கச் செய்கின்றன. இந்த எடையுடன் மக்கள் தொகை எடையை ஒப்பிடமுடியாது. ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன் இருந்த எடையைவிடச் சிறிது எடை அதிகரித்திருக்கும். ஆனால் இதனை உணர முடியாது அந்த அளவுதான் எடை கூடியிருக்கும்.



மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் சான்றிதழ் வழங்குகிறார்

# சிறந்த ஆசிரியர்

மாணவர்களானாலும் சரி, ஆசிரியர்களானாலும் சரி ஒவ்வொருவரிடமும் ஒன்றுக்கு மேற்பட்ட திறமைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

ஓவிய ஆசிரியர் ஒருவர் அண்மையில் 'சிறந்த ஆசிரியர்' என்ற சான்றிதழ் பெற்றுள்ளார். அவர்தான் திரு ஏ. எஸ். நடராஜன்.

உலக ஊனமுற்றோர் நாளை ஒட்டி, காது கேளாதவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் தொழில் மறுவாழ்வுப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இதரப் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுள் திரு ஏ. எஸ். நடராஜன் 1981 ஆம் ஆண்டின் சிறந்த ஆசிரியர் என்று தேர்வு செய்யப்பட்டு, தமிழக அரசு இவருக்குச் சான்றிதழ் வழங்கியுள்ளது.


தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ள இவர், சென்னை அடையாறு புனித லூயிஸ் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். காது கேளாத மற்றும் பார்வையற்ற மாணவர்க்குப் பயிற்சி தரும் பணியில் சிறந்து விளங்குகிறார். குறிப்பாக ஓவியத்தில், அம்மாணவர்களுக்குப் பயிற்சி தந்து பரிசுகளும் பெறச் செய்திருக்கிறார்.

அண்மையில், சென்னை விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட் (வி. டி. ஐ.) நடத்திய ஊனமுற்ற சிறுவர்க்கான ஓவியப் போட்டியில், இவர் பயிற்சி தந்த பார்வையற்ற மாணவன் ஒருவன் முதற் பரிசைத் தட்டிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

கதை, கட்டுரை, நடிப்பு ஏன் நடனத்தில் கூடப் பயிற்சி உள்ளவர் நடராஜன். அவர் மேலும் வளர்ந்திட நாமும் வாழ்த்துவோம்!

# மடவை மீன்

உப்பங்கழிகளில் காணப்படும் மீன்களில் தரத்தால் இரண்டாம் இடம் பிடிப்பது மடவை மீனாகும். இங்கு உள்ள மீன்களில் அதிக அளவில் காணப்படும் மீன் இனமும் இதுவே ஆகும். அதிக வெப்பத்தையும், நீரின் மாறுபட்ட வெவ்வேறு உப்புத் திறன்களையும் தாங்கி நுண்ணுயிர் மிதவைகளையும் மக்கிய பொருட்களையும் உண்ணும் மீன் என்பதால் இது முக்கியமானது; உணவுக்கும் சிறந்தது. வளர்ப்புக் கண் கொண்டு பார்த்தால் பால் கெண்டைக்கு அடுத்த சிறப்பைப் பெறும் உப்பங்கழி மீன் மடவை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை முகில் (Mugil) என்ற அறிவியல் பெயரால் அழைப்பர். மொத்தம் பத்து இனங்களில் (genera) அடங்கும் மடவை மீன்களில், ஏறத்தாழ 281 உள்ளினங்கள் (species) உண்டெனச் சொல்வர். இருப்பினும் இவற்றுள் உண்மையான தோற்றவேற்றுமைகளைக் கொண்ட மீன்களைப் பார்த்தால் அவற்றுள் அடங்குபவை 77 உள்ளினங்களே என டாக்டர் தாம்ஸன் கூறுகின்றார். மடவை மீன்களைப்பற்றி 1972-ம் ஆண்டு முதல் 1973 வரை ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இம்மீன் இனத்தின் முக்கியத்துவத்தை இதன் மூலமும் அறியலாம்.



## தருமபுரி மாவட்டத்தில்

## ஐந்து நாட்கள்:

# வேகமாய் வளரும் வட்டாரங்கள்

இந்தியாவை அதன் ஒருசில

நகரங்களில் காணமுடியாது;

அதன் ஏழு இலட்சம்

கிராமங்களில்தான்

காணமுடியும்—என்றார்

காந்தியடிகள்.

அவர் கனவை நனவாக்க

தமிழக அரசு

பல்வேறு திட்டங்களைச்

செயற்படுத்தி வருகிறது.

அண்மையில்

தருமபுரி மாவட்டம்

சென்றபோது பார்த்த

வளர்ச்சிப் பணிகளின்

தொகுப்பே இது...

எழுதியவர்

**பி. வி. கிரி.**


தளி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள பென்னங்கூர் ஆதி திராவிடர் காலனிக்குச் செல்கிறோம்.

மற்ற ஒன்றியப் பகுதியில் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் வீடுகளுக்கும், இங்குக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கும் ஒரு வித்தியாசம் இருப்பதைப் பார்க்க முடிந்தது.

பென்னங்கூர் கிராமத்தில் மாதிரிக்கு இரண்டு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடச் சுவர்களுக்கு வஜ்ஜிரப் பூச்சு ஒரு புதுமையாகும். இது பற்றிய விவரங்களை ஒன்றிய ஆணையாளர் கூறத் தெரிந்து கொள்கிறோம்.

பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கழகம் ஒரு எந்திரத்திற்கு வடிவமைப்புச் செய்துள்

ளது. இதனால் எளிதாகவும் நல்ல தரத்திலும் சூளையில் வேக வைக்கப் படாத நாட்டுப்புறச் செங்கற்களைத் தயாரிக்க முடிகிறது. இந்த எந்திரத்தைப் பயன்படுத்தி, இந்தச் செங்கற்களுடன் இரண்டு வீடுகளைக் கட்டுவதன் சாத்தியக்கூறு பற்றி பரிசோதனை நடைபெற்று வருகிறது. பென்னங்கூர் கிராமத்தின் வட்டாரத்தில் வீட்டு மனைகளுள்ள இரண்டு ஆதிதிராவிடர்களுக்கு இவ்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இப்பொழுது அவர்கள் மண் சுவர்கள்கூட இல்லாத இரண்டு குடிசைகளில் வசித்து வருகிறார்கள். 10 × 6 அடி அளவில் இந்த வீடுகள் அமையும்.



பென்னங்கூர் ஆதிதிராவிடர்க்கான வீடுகள்

வேறு ஆதிதிரர்விடர்கள் குடியிருப்புப்போன்று இந்த வீடுகளின் வடிவமைப்பும் உள்ளது. அதே செலவும் ஆகும்.

கையினால் செய்யப்படுவதற்குப் பதில் இந்தப் பச்சை வெட்டுச் செங்கற்கள் செய்யப்படுகின்றன. இதற்குச் சிவந்த மண்ணும் (செம்மண்ணும்) சிறிது நீரும்தான் தேவை. இத்திட்டத்தின் கீழ் 6 தொழிலாளர்களே வேலை செய்து வந்தனர். நாள் தோறும் 500 செங்கற்கள் உற்பத்தியாயின. ஒவ்வொரு செங்கல்லும் 12''×6''×4'' அங்குல அளவும் 9 கிலோகிராம் எடையும் உள்ளது. செங்கற்கள் வழ வழப்பாகவும் இருக்கின்றன. மேற்புறச் சுவர்களைக்கட்ட இது உதவுகிறது.

இந்த எந்திரத்தை இயக்குவது எளிது. இது நீரியல் அழுத்தமுறையில் இயங்குகிறது. இதன் விலை ரூ. 2,500. பெங்களூர் இந்திய விஞ்ஞானக் கழகத்திலிருந்து இது இரவலாகப் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டப்பட்ட வீட்டுச் சுவர்களுக்கு மூன்று பூச்சுக்கள் பூச வேண்டும்.

1. 3 சதவீத மாவுப் பண்டத்தினாலான கஞ்சிப் பசைப் பூச்சு (நீருடன் மைதாவும் ஒரு சதவீத மயில் துத்தமும் கலந்தது).

2. நீருடன் வச்சிரமும், மயில் துத்தமும் (15 சதவீத வச்சிரமும், 5 சதவீத மயில் துத்தமும்) சேர்ந்த முதல் பூச்சு.

3. நீருடன் வச்சிரமும், மயில் துத்தமும் (15 சதவீத வச்சிரமும், 5 சதவீத மயில்துத்தமும்) சேர்ந்த இரண்டாவது பூச்சு.

கரையான்களைத் தடுப்பதற்கு மயில் துத்தம் சேர்க்கப்படுகிறது.

மழையினால் சுவர்களுக்கு அரிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கும், இறுகப் பிணைப்பதற்கும் வச்சிரப் பூச்சு பயன்படுகிறது. நல்ல தோற்றமளிப்பதற்குச் சுண்ணாம்பு அடிக்கப்படுகிறது.

முச்சந்திரம் என்னும் இடத்தில் 20 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகளுக்கு வஜ்ஜிரப் பூச்சு இல்லை. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன.

சுண்ணாம்பு-செம்மண்-மணல் கலவை, சுவர்களுக்குப் பூசப்படுகிறது. இவ்வாறு பூசப்படுவது இதுவே முதல் தடவை. மூன்று தெருக்களில் கட்டப்பட்டு வரும் இந்தக் காலனி முடியுந்தறுவாயில் உள்ளது. வீடுகள் ஒவ்வொன்றும் வசதியாக உள்ளன. இலவசமாக வழங்கப்படும் வீடு என்றாலும், கண்ணும் கருத்துமாகக் கவனிக்கப்படுகிறது. ரூ. 12,000 செலவில் ஒரு பொது புதுக் கிணறு முடிகின்ற நிலையில் உள்ளது. சாலை வசதி, குடிதண்ணீர், குழந்தைகள் காப்பகம், துவக்கப்பள்ளி, வானொலி, நூலகம்-இப்படி எல்லா வசதிகளும் இங்கே குடி வருகின்ற ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கப் போகிறது - கொடுத்து வைத்தவர்கள்!




ஆணையாளர்
திரு எம். பாலசுப்பிரமணியம்

இன்னொரு சிறப்பு - இந்த ஆதிதிராவிடர்காலனி எங்கேயோ ஒதுக்குப்புறத்தில் தனியாக இல்லை. இந்துக்கள் வாழ்கின்ற வீடுகளுக்குப் பக்கத்திலேயே இருக்கின்றன.

இந்த வீடுகளுக்குக் குடி வரப்பாகிறவர்கள், முன்பு குடி இருந்த குடிசைகளை, பாழடைந்த வீடுகளைப் பார்த்துப் பரிதாபப்படுகிறோம். தகுதியானவர்களுக்குத் தகுந்த வீடு கிடைக்கிறது என மன நிறைவு பெறுகிறோம்.

பொதுவாக, தளி ஊராட்சி ஒன்றியப் பகுதி கரடுமுரடான பகுதிகளாகும். இது படிப்படியாக வளம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ், டி. கொத்தனூரில் காய்கறி, கனிவகைத் தோட்டம் ஒன்று ஏழு ஏக்கர் பரப்பளவில் உள்ளது. இது குழந்தைகள் காப்பகங்களுக்குப் பயன் தருவது. தோட்டத்தில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 20,000 செலவில் பெரிய புதிய கிணறு ஒன்று தோண்டப்பட்டு, அதில் 20 ஆழம் வரை தண்ணீர் உள்ளது.

திம்மசந்திரம்-ஒரு குக்கிராமம் தான். முன்பெல்லாம் சாலையிலே நடக்கவே முடியாதாம். அவ்வளவு கரடு முரடு. அது மட்டுமன்று, மழைத் தண்ணீர் குட்டையாகத் தேங்கி சேறும் சகதி



கவின்மிகு காய்கறித் தோட்டம்

யாய்க் காட்சியளிக்குமாம். ஆனால், இன்று நிலைமையே வேறு. போக வர சாலை வசதிகள், மழைத் தண்ணீர் தேங்காமல் சாலை இருபுறமும் கால்வாய். ரூ. 10,000 செலவில், 140 மீட்டர் நீளத்துக்கு இந்தக் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளது. இப்போது இந்தப் பகுதியில் புதிய துவக்கப்பள்ளி ஒன்றும், குழந்தைகள் காப்பகம் ஒன்றும் உள்ளது.

தளி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. எம். பாலசுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்:

''இவ்வொன்றியத்திலுள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் உள்ளன. சிறப்புக் கழிவிடம், குழந்தைகள் காப்பகங்கள், தாய்சேய் நல விடுதிகள், கூபா புல் பயிரிடுதல், சிறுசேமிப்பு, குடும்ப நலம், சுய வேலைவாய்ப்பு எல்லாவற்றிலும் எங்கள் ஒன்றியம் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.''

## பென்னாகரம்

பென்னாகரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்—

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக மண் சாலைகள் போடப்பட்டு வருகின்றன. 86 கி. மீ. தூரத்துக்குக் கற்சாலை போடப்பட்டிருக்கிறது. குட்டைகள், ஊருணிகள், ஓடைகள் மராமத்து செய்யப்பட்டிருக்கின்றன.

கால்நடைகளுக்கான தண்ணீர்க் குட்டை (பென்னாகரம்)



ஆதிதிராவிடர்க்கான 25 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. நல்ல வசதியுள்ள ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 8,300. இது செங்கல்லாலும் சிமெண்ட்டாலும் ஆனது. மயானச் சாலைகள் புதுப்பிக்கப்பட்டு 12. கி. மீ. தூரத்துக்கு ஜல்லி போடப்பட்டு வருகிறது. 8 கி. மீ. தூரத்துக்குச் செடிகள் நடப்பட்டுள்ளன. அதாவது வீட்டுக்கு ஒரு மரம் என்ற திட்டத்தில் வீதிவாரியாக தென்னை, முருங்கை, புங்கை என இது வரை 4,000 மரங்கள் நடப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கான தண்ணீர்க் குட்டைகள் 26 அமைக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்து 16 கி. மீ. தூரத்திலுள்ள, சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லில் ரூ. 7500 செலவில் பரிசில் துறை அமைக்கப்பட்டுள்ளது.

## தருமபுரி

தருமபுரிக்கு வருகிறோம்.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், உழைப்புக்கு உணவுத் திட்டம் போன்ற திட்டங்களால் தமிழகக் கிராமங்கள் தண்ணொளி பெற்று வருகின்றன.

ஊராட்சி ஒன்றியங்களின் ஓயாத உழைப்பினால், ஊர்ப்புறங்கள் எல்லாம் ஓங்கி வளர்ந்து வருகின்றன என்றால் அது மிகையல்ல.

தருமபுரி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் 25-ல் 15 முடிந்து விட்டன. 10 வீடுகள் முடியுந்தறுவாயில் உள்ளன. ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ. 5,000. இதுவரை 11 பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 4 குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன. மரம் நடும் திட்டத்தில் இது வரை 5,000 செடிகள் நடப்பட்டுள்ளன. கிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் மட்டும் 750 புளியங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கான தண்ணீர்க் குட்டை ஒன்றும் உள்ளது.

கடந்த ஆண்டு 1981-82ல் 120 பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்குத் தையல் மிஷின்கள் வழங்கப்பட உள்ளன. இதேபோல ரேடியோ மெக்கானிக், எலெக்ட்ரீஷியன், டிராக்டர் ரிப்பேர், பேக்கரி; அச்சகம், பாய்முடைதல் போன்ற தொழில்களுக்கும் பயிற்சி தரப்பட்டு, பயிற்சிக் காலத்தில் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்பட்டு, சுயமாகத் தொழில்



ஆணையாளர்

திரு து. சுப்பராயன்

தொடங்க வங்கி மூலம் கடன் தரப்படுகிறது.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு து. சுப்பராயன் அவர்களைச் சந்தித்துக் கேட்டதில் குறிப்பிட்டதாவது:

### சூளகிரி ஊராட்சி ஒன்றிய தன்னிறைவுத் திட்டப்பணிகள்

சூளகிரி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.33 லட்சம் செலவில் 33 பள்ளிக்கூட கட்டிடங்களும், 3 தாய்சேய் நல விடுதி கட்டிடங்களும் 3 கிராமிய மருந்தகக் கட்டிடங்களும், 100 சிறு பாலங்களும் கட்டிமுடிக்கப்பட்டன.

“இங்குள்ள வத்தல் மலையில் 4 குழந்தைகள் காப்பகங்களும், சமூகநலத் துறை மூலம் 9 காப்பகங்களும் உள்ளன. 81-82-ல் 32 கி. மீ. தூரத்துக்குப் புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. 112 கிராமப்புறச் சாலைகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. 45 பாசன ஆதாரங்கள் பழுது பார்க்கப்பட்டும், 18 புதிய கிணறுகள் வெட்டப்பட்டும் உள்ளன. 100 மீட்டர் தூரத்துக்குக் கழிவுநீர கற்றுக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 81-82-ல் 56 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பான்மையான கிணறுகள் ஆதிதிராவிடர் காலனிகளில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.”

தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை ஏற்பாடு செய்திருந்த இந்த ஐந்து நாள் பயணத்தில், ஊர்ப்புறங்கள் வேகமாய் வளர்ந்து வருவதை நேரில் காண முடிந்தது. அரசு முனைப்புடன் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில், பல ஆக்கப் பணிகளை செயற்படுத்திச் செழிப்பான கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

குள்ளனூரிலுள்ள ஆதிதிராவிடர் வீடுகள்






# பாஞ்சைப் பகுதியில் ஓர் உணர்ச்சிப் பெருவிழா!

**இரெ. மகாலிங்கம்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்.**

"மண்ணி லின்பங்களை வேண்டி
சுதந்திரத்தின்
மாண்பினை இழப்பாரோ?
கண்ணிரெண்டும் விற்றுசுதந்திரம்
வாங்கினால்
கை கொட்டிச் சிரியாரோ?"

என்று கவிபாடி புரட்சிக்கனலை மூட்டினார் பாரதியார்.

அவர் பிறந்த மண்ணில்— எழுச்சியின் சின்னமாகத் திகழ்ந்து இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலை முழக்கம் எழுப்பினான், வீரபாண்டிய கட்டபொம்மன்.

மாற்றாருக்குத் தலைவணங்காத மாவீரனாக - போர் மறவனாகத் திகழ்ந்த கட்டபொம்மனின் பெருமையை உரைக்கவும் அவனது வீரத்தையும் தியாகத்தையும் நினைவு கூர்ந்து போற்றவும் தமிழ்நாடு அரசின் சார்பில்- இரண்டுநாள் விழா- பாஞ்சாலங்குறிச்சியில் நடைபெற்றது.

மே திங்கள் 14-ஆம் நாள் மாலை - கலைமாமணி திரு. சின்ன சுப்பையாவின் நாயன இசையோடு விழா தொடங்கியது.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை துணை ஆணையர் திரு. வ. சௌ. கோதண்டபாணி விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

விழாவிற்குத் தலைமையேற்ற திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. நிர்மல்சிங் ஹீரா ''கட்டபொம்மனின் தியாகத்தினையும், தொண்டினையும் விவரிக்க வார்த்தைகளே இல்லை' என்றுரைத்தார்.

அடுத்துப்பேசிய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். கே. பெருமாள், பாஞ்சாலங்குறிச்சியின் வளர்ச்சிக்கும் அந்தப் பகுதிவாழ் மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கும் அரசு செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை விவரித்தார்.

விழாவில் பங்கேற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கே. சுப்பு, 'ஜாதி மத இன, கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் கூடி நின்று உணர்வுபூர்வமாக எடுக்கின்ற விழா இது' என்று குறிப்பிட்டார். கடந்த ஆண்டிலிருந்து, இந்த விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வரும் அரசுக்கும், முதல்வருக்கும், அறநிலையத் துறை அமைச்சருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

சிறப்புக் கூட்டத்திற்குப் பின் வழக்காடு மன்றம் நிகழ்ந்தது. 'பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்கு புறப்பகையைவிட அகப்பகையே காரணம் எனக் கூறுவது குற்றம்' என்று புலவர் திரு வீ. செந்தில் நாயகம் வழக்குத் தொடுத்தார். அதனைப் புலவர் திரு. க. ஆ. இராமசாமி மறுத்தார். நடுவராக இருந்து, இருவரும் எடுத்து வைத்த வாதங்களைக் கேட்ட புலவர் திரு. பழநி கிருஷ்ணன், 'பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்கு அகப்பகையை விடப் புறப்பகையே காரணம் அதிகம்'' என்று தீர்ப்பளித்தார்.

வழக்காடு மன்றத்தை அடுத்து சுவையான பட்டிமன்றம் நடைபெற்றது. ''பாஞ்சாலங்குறிச்சிப் போர்-உணர்வு பூர்வமானது'' என்று பேராசிரியர் சிவசுப்பிரமணியம் தலைமையில் திரு. காசி விசுவநாதன், திரு. செல்வநாதன் ஆகியோர் வாதிட்டனர். இல்லை 'அது உணர்ச்சி பூர்வமானது' என்று திரு. கே.பி. ஆர்.

ஆர். சித்தார்த்தன் தலைமையில் திரு. இராமச்சந்திரன், திரு. இரா. தங்கமலை ஆகியோர் வாதங்களை எடுத்து வைத்தனர்.

பட்டிமன்றத்திற்குத் தலைமையேற்ற பேராசிரியர் தோத்தாத்திரி, 'கட்டபொம்மன் நடத்திய போர் உணர்ச்சி பூர்வமானது' என்றும் ஊமைதுரை நடத்திய போர் 'உணர்வு பூர்வமானது' என்றும் தீர்ப்பளித்தார்.

இறுதியில் மதுரை திரு எம். எஸ். பரமசிவம் குழுவினரின் 'வீரபாண்டியக் கட்டபொம்மன்' நாடகம் நடைபெற்றது. சுற்றுலா அலுவலர் திரு. இரா. சதாசிவம் நன்றி கூற விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

*15-5-1982* அன்று மாலை, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகக் கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு - வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின.

கட்டபொம்மனின் வீரத்தையும் விவேகத்தையும் சிறப்பினையும் எடுத்துரைக்கும் வகையில் கவியரங்கம் நடைபெற்றது.

கவியரங்கத்திற்குத் தலைமை ஏற்ற அறவாழி, திரு. வா. தி. சுப்பையா-

'தெலுங்கினது வாரிசாகத் தோன்றி தமிழில் நலுங்கு பாடி நாடாண்ட சூரன் — குலுங்கவைத்தான் கும்பினியின் ஆட்சியையே. பாஞ்சால கட்டபொம்மு நம்மின் முதலுரிமை வீரன்''

என்றுரைத்தார்.

புலவர் கமலப்பிரியன் இளங்கவிஞர் பாரதிமாறன், கவிஞர் ஸ்ரீதரன் ஆகியோர் கவியரங்கில் பங்கேற்றனர். கட்டபொம்மனின் சிறப்பு..''தன்மானத்தால்'' ''வீரத்தால்'', ''விவேகத்தால்'' ''பக்தியால்'' - என்று பலபட உரைத்து, பார்போற்றும் பாஞ்சையின் பேர் நிலைக்கச் செய்த, கட்டபொம்மனுக்குப் புகழாரம் சூட்டி மகிழ்ந்தனர், புலவர் பெருமக்கள்.

அதன்பின், விழா நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்று, அமைந்த இறுதி நிகழ்ச்சி தொடங்கியது.

மாவட்ட வருவாய் அதிகாரி திரு இரா. இரத்தினசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்து அரியதோர் உரையினை ஆற்றினார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரவரலாற்றையும்-அன்னியர் ஆதிக்கத்திற்கு எதிராக அவன் போர்முரசு கொட்டிய சரித்திரத்தையும் சிலம்புச் செல்வர் தொகுத்துரைத்தார். அதன் விவரம் வருமாறு:

''வீரபாண்டிய கட்டபொம்மனின் விழாவில் கலந்து கொள்கிறேன் என்றால் அதன் பின்னே ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றது. வீரபாண்டியக்கட்டபொம்மன் படைத்த வரலாறு அல்ல; வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பற்றி நான் படைத்த வரலாறு அது.

''வீரபாண்டியக் கட்டபொம்மன் படைத்த வரலாறு - தமிழினத்தின் புகழை தமிழ் நாட்டின் பெருமையை இந்தியாவின் முன்னே - உலகின் கண் முன்னே தலை நிமிரச் செய்ததாகும்.

''சுதந்திரப் போரைத் துவக்கி வைத்த முதல்வன் என்ற பேர் வீரபாண்டியனைத் தவிர இந்தியாவில் வேறு யாருக்கும் இருக்க முடியாது என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நான் எழுதிக் காட்டினேன். அது நான்படைத்த சரித்திரம்.

''ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து ஜான்சிராணி, ராணே சாகிப் ஆகியோர் போராடியது 1857-க்குப் பின்னர்தான். ஆனால் கட்டபொம்மன் போராடியது 1792-ல்—

'கட்ட பொம்மன் போர் நடத்திய பின் -60 ஆண்டுகள் கழித்து தான் சிப்பாய் புரட்சியே வெடித்தது.

'வீரபாண்டியன் தூக்கு மேடையை நோக்கி நடக்கும் போதும் வீரத்தோடு நடந்தான்.



தனது எதிரிகளையும் தனக்குத் துரோகம் இழைத்தவர்களையும் ஏளனத்தோடு பார்த்துச் சிரித்தான் - என்று ஆங்கில அதிகாரிகளே குறிப்புகள் எழுதி வைத்துச் சென்றிருக்கிறார்கள்.

''பலரைத் தூக்கு மேடைக்கு அனுப்பி, ஆயுள் கைதிகளாக அந்தமான் தீவுக்கு அனுப்பி விட்டு பெற்றது தான் இந்தச் சுதந்திரம்.

''இந்த சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டியது நமது கடமையாகும்.''

தொடக்கஉரையைத் தொடர்ந்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. ஆர். கே. பெருமாள், திரு. எம். அப்பாதுரை ஆகியோர் பேசினார்கள். அதன் பின் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். இல்லை - கட்டபொம்மனை, ஊமைத் துரையை வீரத் தளபதி வெள்ளையத் தேவனை - பாஞ்சாலங்குறிச்சி பெரும் போரை - படம் பிடித்துக் காட்டும் வகையில் உணர்ச்சிப் பேருரை நிகழ்த்தினார்கள்.

''கட்ட பொம்மனின் வரலாற்றில் காளிமுத்து என்று ஒரு பாத்திரம் உண்டு. கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறியபோது - காளிமுத்து நல்ல தம்பி என்ற இருவர் அவனுக்குப் பாதுகாப்பு தந்தார்கள். அவனது பரிவாரங்களைக் காத்து நின்றார்களாம். கட்டபொம்மன்கூட நான் மீண்டும் கோட்டையைக் கைப்பற்றினால் உங்களை அழைத்து செய்ய வேண்டிய சிறப்புகளைச் செய்வேன் என்று அவர்களிடம் சொன்னதாகக் கட்டபொம்மன் வரலாற்றில் ஒரு குறிப்பு உண்டு. அந்தக் காளிமுத்துவுக்கு அந்தச் சிறப்புக் கிடைத்ததோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் இந்தக் காளிமுத்துக்கு அந்தச் சிறப்பு கிடைத்திருக்கிறது என்ற வகையில் இந்த விழாவில் கலந்து கொள்கிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்'' என்ற பீடிகையோடு அமைச்சர் அவர்கள் தனது பேச்சைத் துவக்கினார்கள்.

பழந் தமிழகத்தின் வீரம், சிறப்பு, ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் மனப்பான்மை ஆகியவற்றை எடுத்துரைத்த மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''பாஞ்சைப் பதியில் நிகழ்ந்த அந்த வரலாறு வீரஞ்செறிந்த




வரலாறு - ஜாதிய உணர்வுகளை எல்லாம் கடந்து ஒன்றுபட்டு நின்று அன்னிய ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்முரசு கொட்டிய வரலாறு ஆகும்.

''வீரம் செறிந்த தமிழர்களின் வரலாறு பிற்காலத்தில் எப்படி எல்லாம குறைந்தது எந்த அளவுக்கு மாறியது என்பதனை எண்ணிப் பார்த்து வேதனைப் படுகிறோம். ஆனால் வீரஞ்செறிந்த தமிழகத்தினுடைய கடைசிச் சின்னமாக நின்று போர்க்களத்தில் அன்னியர்களை எதிர்த்தவன் வீரபாண்டிய கட்டபொம்மன் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

'வீரபாண்டியக் கட்டபொம்மன் ஏதோ முரட்டுத்தனமான வீரனாக அல்ல; விவேகமுள்ள வீரனாக இருந்தான். நெஞ்சுரமிக்க வீரனாக, நேர்மைத் திறனுள்ள வீரனாக இருந்தான்.

'கட்டபொம்மனின் வரலாறு ஒரு கட்டத்தில் முடிந்தபோது இந்தப் பாஞ்சாலங்குறிச்சியின் வீரவரலாறு முடிந்து விடவில்லை அதை நினைக்கும்போது தான் நாம் ஆச்சரியப்படுகிறோம்.

'கட்டபொம்மன் கயத்தாறு புளிய மரத்தில் தூக்கிலிடப்பட்ட பின், அவனால் வளர்க்கப்பட்டவர்கள் ஊமைத் துரையைப் போன்றவர்கள் எப்படிப்பட்ட வீரம் செறிந்த வரலாற்றை இம் மண்ணில் தொடர்ந்து நிகழ்த்திக் காட்டினார்கள் என்பதை நினைக்கும்போது நெஞ்சு நெக்குருகிறது. உடல் புல்லரிக்கிறது; உள்ளம் பொங்குமாங்கடலாக மாறுகிறது. கண்கள் குளமாகின்றன.

'ஆங்கிலம் ஆதிக்கம் வேரூன்றிக் கொண்டிருந்த நேரம். அப்படிப்பட்ட நேரத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு யாருக்கும் வராத துணிச்சல் இந்த மண்ணை அரசாண்ட மாவீரர்களுக்கு ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

'இந்த மண்ணின் வீரம் மங்காது; மறையாது. இங்கே இருக்கின்ற மண்ணைத் தண்ணீரில் கரைத்து குழந்தைக்குக் கொடுத்தால் அந்தக் குழந்தை வீரக் குழந்தையாக இருக்கும். அடை காக்கும் கோழிக்கும் பக்கத்தில் இந்த மண்ணைத் தூவினால் பிறக்கின்ற குஞ்சு வீரக் குஞ்சாக இருக்கும் என்றெல்லாம் நம்பிக்கை இருக்கின்றது.

'வீரம் என்பது எதிரியைத் தாக்கி தகர்த்து தரை மட்டமாக்குவது; தலைகளைக் கொய்வது மட்டுமல்ல, இந்தச் சூழ்நிலையில் நியாயத்திற்காகப் போராடுகின்ற நெஞ்சுறுதியைப் பெற வேண்டும் என்பதாகும்.

''அந்த நெஞ்சுறுதிக்கு அடையாளமாக, இலக்கணமாகத்தான் வீரபாண்டியக் கட்டபொம்மன் ஊமைத்துரை போன்றவர்கள் வரலாற்றில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.''

செய்தி—மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வி. டி. வீரப்பன் விழாவில் பங்கேற்ற பெருமக்களுக்கும், விழா வெற்றியுடன் நடந்தேற ஒத்துழைத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

அடுத்து நிகழ்ந்த 'வீரபாண்டிய கட்டபொம்மன்'' நாடகத்தோடு இரண்டு நாட்கள் சிறப்புடன் நடைபெற்ற, இந்த இனிய விழா நிறைவு பெற்றது. ஆனால், இந்த விழா உருவாக்கிய எழுச்சியும், உணர்ச்சியும் பாஞ்சைப் பதியில் நெடுநாட்கள் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

# பார்த்தோம்! படித்தோம்!

**உல்லாசப் பயணம்**


1-5-82 'தமிழரசு' இதழில் ''உல்லாசப் பயணிகளே வருக' என்ற தலைப்பில் கவிஞர் அ. மருதகாசி எழுதிய கவிதை சென்னை, மாமல்லபுரம், வேடந்தாங்கல், சிதம்பரம், பூம்புகார், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, குற்றாலம், உதகை போன்ற குறிஞ்சி நகரங்களை எல்லாம் நேரடியாக பார்த்தது போல் இருந்தது.

-சுப. சண்முகம்
காரைக்குடி-1.

**மனங்குளிருகிறது**

தமிழரசின் - எழில்மிகு திருச்சி மலைக்கோட்டையின் அழகான அட்டைப் படம் அம்சமாக இருந்தது. சுற்றுலாத் துறை அமைச்சரின் ''சுற்றுலா வளர்ப்போம்'' கட்டுரை சுற்றுலா செல்லும் எனக்குமிகப் பயனுள்ளதாக இருந்தது. 'தமிழ் வளர்ச்சிப் பணியில் சில படிக்கட்டுகள்' மனங்குளிர உளமார பாராட்டக் கூடிய ஒன்றாகும். 'மாணவர் பக்கம்'' சிறப்பாகவும் - சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தது. நன்றி!

-ச. புகழேந்தி
திருவையாறு.



தண்ணீரில் நீண்டகாலம் அப்படியே கிடந்து ஊறிப் போன காட்டு மரம் ஒன்றின் வேரானது அசல் பாம்பு போலவே தோற்றம் அளிக்கின்ற அற்புதக் காட்சி மதுரையில் நடைபெற்ற அரசு சித்திரைப் பொருட்காட்சி (1982) வனத்துறை அரங்கில் இடம் பெற்றது.

**மகிழ்ச்சி**

''காரைக்குடியில் பாரதியார்'' என்ற பழைய நினைவுகளை மீண்டும் தமிழரசு இதழில் பிரசுரித்தமைக்காக பாரதி அன்பர்கள் சார்பில் எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-அரு. பாரதிவேலன்
கோயம்புத்தூர்

''மாணவர் பக்கம்'' அருமையாக உள்ளது. அதில் இன்னும் நிறைய துணுக்குச் செய்திகளை வெளியிடுங்கள்

-ஜி. திருமலை,
சென்னை-40.

**அறிவுக்கு முதன்மை**

அறிவுக்கு முதன்மை அளிக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை இளைய தலைமுறையினருக்கு நல்லறிவு புகட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது.

-ஆர். டி. ஜெயராமன்
ரேக்கட ஹள்ளி.

**அடிக்கடி வேண்டும்**

பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையை அழகுற எடுத்து வெளியிட்டிருந்தது 'தமிழரசு'. இதுபோன்று அறிவுபுகட்டும் உரைகளை அடிக்கடி வெளியிடுங்கள்.

-தில்லை சிதம்பரம்
திருச்சிராப்பள்ளி.

**பாராட்டுக்குரிய கட்டுரைகள்**

முதுபுகழ்த் திருச்சியில் முப்பெரும் விழாக்கள் கட்டுரையும் திரைப்படப் பயிற்சி நிலைய ஆண்டு விழா பற்றிய கட்டுரையும் அருமையான நேர்முக வர்ணனை போல அந்த விழாக்களைப் படம் பிடித்துக் காட்டியது. எழுதியவர்களுக்கு என்பாராட்டு.

-வீ. அருமைநாதன்
சேலம்.

**நன்றி**

ஊனமுற்றோருக்கு அரசு செய்து வரும் உதவிகளை 'தமிழரசு' மூலம் அடிக்கடி படித்துவரும் நாங்கள் 16-5-82 இதழ் மூலம் முழுமையாக அறிந்து கொண்டோம். நன்றி தமிழரசுக்கு!

-இரா. அண்ணாதாசன்
திருநெல்வேலி.



# தமிழகத்திற்குப் பெருமை!

தமிழ்நாடு அரசுக் கலைஞரான செல்வி கலைமாமணி அலர்மேல் வள்ளி இதுவரை எந்த இந்திய நாட்டியக் கலைஞரும் சாதித்திராத சாதனையைச் செய்துள்ளார்.

1966ஆம் ஆண்டில் அலர்மேல் வள்ளியின் அரங்கேற்றம் நிகழ்ந்தது. 1967ல் வெளிநாட்டுக்கு முதன் முறையாகச் சென்ற அலர்மேல் வள்ளி உலக நாடுகளில் இதுவரை 17 முறை சுற்றுப்பயணம் செய்து நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

அண்மையில் பத்திரிகையாளர்களை அலர்மேல் வள்ளி சென்னையில் சந்தித்தார். அந்நிகழ்ச்சியில் பங்கேற்ற செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கே. ஏ. சுந்தரம், ஐ.ஏ.எஸ். அவர்கள், பரத நாட்டியக் கலைக்குப் பெருமை தேடித் தரும் வகையில் அரசுக் கலைஞர் கலைமாமணி அலர்மேல் வள்ளி ஆற்றியுள்ள பெருமைமிகு நிகழ்ச்சியினை விளக்கினார்,



அத்தகைய நிகழ்ச்சி என்ன?

ஏப்ரல் 2ஆந் தேதி லண்டனில் நடைபெறும் இந்திய விழாவில் இவருடைய பரதநாட்டியத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; மார்ச் மாதத்தில் ரோமிலும் வியன்னாவிலும் இவருடைய நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அங்கிருக்கும் பொழுது லண்டனில் தொடர்ச்சியாக பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக் கொள்ள வேண்டும். பொது மக்கள் மிக அதிகமாக பரதநாட்டிய நிகழ்ச்சிகளைக் காண விரும்புகிறார்கள் என்று லண்டனிலிருந்து தொடர்ந்து டிரங்கால்கள் வந்தன. அதே சமயத்தில் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள்! போன் மூலமாக பாராட்டுக்கள். இதற்குக் காரணம்—

பி. பி. சி. யின் புகழ் பெற்ற தயாரிப்பாளர் Michael Macintyre. அலர்மேல் வள்ளியைவைத்து பரதநாட்டியம் பற்றிய ஒரு படம் தயாரித்தார். கடந்த டிசம்பர் மாதம் சென்னை வந்திருந்த அவர் இந்தியப் பண்பாட்டினை விளக்கும் வகையில் அமைத்திருந்த அப்படத்தில் அலர்மேல் வள்ளி பரதநாட்டியம் ஆடியதுடன் அதைப்பற்றி விளக்க உரையும் அளித்திருந்தார். இதை 'இந்திய விழா' லண்டனில் நடைபெறும் சமயத்தில் காட்டினார்கள். இதனால்தான் அவர் நாட்டியத்தைப் பாரத்திட பெரும் கூட்டம்.

அதனால் ஆறு நாட்கள் தொடர்ச்சியாக காமன்வெல்த் இன்ஸ்டியூட் தியேட்டரில் அலர்மேல்வள்ளியின் நாட்டிய நிகழ்ச்சிகள். இதுவரை இந்தியாவிலிருந்து சென்ற யாருக்கும் இதுமாதிரி வாய்ப்புக் கிடைத்ததில்லை. ஒவ்வொரு நாளும் 'ஹவுஸ்புல்' நிகழ்ச்சிகள்.

இதுவரை எந்தநாட்டிய நிகழ்ச்சிக்கும் இல்லாத கூட்டம் கூடியது, காமன்வெல்த் இன்ஸ்டியூட் தியேட்டர் நிர்வாகிகளையே வியப்பில் ஆழ்த்தியது, இங்கிலாந்து நாட்டில் பரதநாட்டியத்தின் மிக மிக ஆழமான ஈடுபாட்டை உருவாக்கியுள்ளது, அலர்மேல் வள்ளியின் பரதநாட்டிய நிகழ்ச்சி.

தென்கிழக்கு ஆசிய நாடுகள், சோவியத் நாடு, மேற்கு-கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார் அலர்மேல்வள்ளி.

வியன்னாவில் புகழ் பெற்ற ஆப்ரா ஹவுஸில் அலர்மேல்வள்ளியின் பரதநாட்டிய நிகழ்ச்சி அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கிறது. அங்கு அந்நிகழ்ச்சி நடைபெற்றால் முதன் முதலாக அங்கு நடைபெறும் இந்தியக் கலைஞர் ஒருவரின் பரத நாட்டிய நிகழ்ச்சியாக அமையும்.

தன்னுடைய பரதநாட்டியத்தால் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் ஏன் இந்தியக் கலைஞர்களுக்கும்புகழ் சேர்க்கும் அலர்மேல் வள்ளி, இந்தோனேஷிய நாட்டியக்கலைக்கும் பரதத்துக்கும் உள்ள ஒப்புமைகளையும் தொடர்புகளையும், விளக்கவிருக்கும் ஒரு படத்தில் நடிக்கவிருக்கிறார்.

பி. பி. சி.யின் புகழ் பெற்ற தயாரிப்பாளர் எடுக்கவிருக்கும் அந்தப் படத்தினாலும் பரதக் கலைக்கு மேலும் புகழ் சேர்க்க அலர்மேல் வள்ளியை வாழ்த்துவோம்!

—மாமூலன்

தமிழன்னை ஈன்றெடுத்த தவ மைந்தர்களுள் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரும் ஒருவர். இவ் இருபதாம் நூற்றாண்டில் தம் பழுத்த தமிழ்ப் புலமையால் தமிழ் மொழியைப் பல்லாற்றானும் வளர்த்த பெருமை அவருக்கு உண்டு. சிலர் சில துறையில் மட்டுமே வல்லவர்களாய் விளங்குவர். பல்வேறு ஆற்றல்களும் ஒருங்கே பொருந்திய கூட்டுப் புலமையை நாம் பண்டிதமணியிடம் காணலாம். பல பட்டைகள் தீட்டப்பட்ட வைரக்கல்லைப் போல அவர்தம் புலமையும் திறனும் ஒளிவிட்டன. கருவிலே திருவுடைய அம்மேதையின் பலதரப்பட்ட திறனையும் ஓரளவு பகுத்தும் வகுத்தும் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.


தையும் அறவே ஒழித்தார். அருட்குறியாகிய சிவலிங்கத்தைச் சிவபெருமானின் வேறாகக் கருதினாரல்லர். இரவெல்லாம் வேடராலும் விலங்குகளாலும் ஊறுபாடு நேராவண்ணம் பாதுகாத்தலிலும், பகலெல்லாம் இறைவனுக்கு உணவு தேடிக் கொணர்தலிலும் இவர் கருத்துச் சென்றது. தாய், தந்தை, சுற்றம், நட்பு முதலிய பிறப்புத் தொடர்புகளை அறவே மறந்தார். யாவர் எது செய்யினும் எது பேசினும், இவர்க்கு இறையருள் நாட்டமே யன்றிப் பிறிதொன்றில்லை. கரணமெல்லாம் பசுத்துவம் நீங்கிப் பதி கரணமாகத் திகழ்ந்தமையால் இவர்செயல் அனைத்தும் சிவச்செயலாயின.''

பண்டிதமணி எதையும் தெளிவாகவும் திட்ப நுட்பத்தோடும் செலச்சொல்லும் ஆற்றல் பெற்ற திட்பநுட்பம் துறுமியனவாய் விளங்கின.

காலமும் கருவியும் கண்ணிய
இடனும்
நூலோர் முறையின் நுண்ணிதின்
தேர்ந்து
தொடங்குமெக் கருமமும் மடங்க
லின்றிச்
செவ்விதின் முடிக்கும் எவ்வமில்
திறலினன்;
நாடுநன் னலம்பெற நாடிமற்
றதற்குக்
கல்வியும் அறியும் கவின்பெற
வளர்த்தலே
ஒல்லுவ தெனக்கண்டு ஓங்குதன்
பெயரால்
நல்லிய லறிஞர் நவின்றுபா
ராட்ட
பல்கலைக் கழகம் பாங்குற
நிறுவியோன்'

# பல்கலைச் செல்வர் பண்டிதமணியார்

டாக்டர் மெ. சுந்தரம்



### உரைநடை கைவந்த வல்லாளர்

இருபதாம் நூற்றாண்டினை ஓர் உரைநடைக் காலம் (Age of Prose) எனலாம். பாட்டின் செல்வாக்கு மெல்ல மெல்ல அருகி, எல்லாம் உரைநடையே என்று ஆகிவிட்ட நிலையை இன்றைய நாளில் காண்கிறோம். எனவே, தமிழின் இன்றைய வளர்ச்சியும் மலர்ச்சியும் உரைநடையாலேயே அமைகின்றன என்பது வெளிப்படை.

தமிழ் உரைநடைக்கு வலிவும் பொலிவும் ஊட்டிய தமிழ்ப் பெரும் புலவர்களில் பண்டிதமணிக்குத் தக்கதோர் இடமுண்டு. 'உரைநடைக் கோவை' என்னும் நூல் அவரது உரைநடைத் திறத்தை உலகுக்கு எடுத்துரைக்க வல்லது. அதில் ஒரு பகுதியைக் காண்போம்:

''கண்ணப்பர் ஆறு நாட்கள் இரவு பகல் உணவையும் உறக்கத்

வர் என்பதை இப்பகுதி காட்டுகின்றதல்லவா?

### நாவிறு படைத்த பாவலர்

பண்டிதமணி உரைநடைத் திறம் கைவரப் பெற்றவர் என்பது எந்த அளவு உண்மையோ, அதே அளவு அவர், நாவீறு படைத்த பாவலர் என்பதும் உண்மையாகும்.

பண்டிதமணி கவி பாடுவதைத் தம் தொழிலாகக் கொண்டவர் அல்லர். ஆனால், உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடும் ஒண்மையர். அவர் எழுதிய வாழ்த்துப் பாடல் கவிகளும் மிகப் பலவாகும். ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் முதலிய பல்வேறு யாப்புகளிலும் விரைந்து பாடும் ஆற்றல் பண்டிதமணியிடம் இருந்தது. அவர் பாடும் அகவற் பாக்கள் சங்க இலக்கியப் பாக்களைப் போன்றே

என வரும் பாடல் வரிகள் செட்டிநாட்டரசை வாழ்த்திப் பாடியனவாகும். இப்பாடலில் உள்ள சொல்வளமும், இழுமென் ஓசையும், ஆற்றொழுக்கான நடையும் சங்கச் சான்றோர்களின் பாட்டையே நமக்கு நினைவூட்டுகின்றன.

### சிறந்த திறனாய்வாளர்

பாட்டின் அழகையும் பொருளையும் நுண்ணிதின் உணர வல்லவர்கள் திறனாய்வாளர்களே. படைக்கும் புலவனைவிட அதன் நயத்தை நுனித்தறியும் திறனாய்வாளர்களே ஒரு வகையில் மேம்பட்டவர்கள் எனலாம்.

பண்டிதமணி பாட்டின்பத்திலே மூழ்கி மூழ்கித் திளைப்பவர்; தாமின்புறுவது உலகு இன்புற வேண்டும் என்று நினைப்பவர். காவியச் சோலையுள் நுழைந்து கவித்தேனை உண்டு தேக்கெறிபவர். இத்தகு ஆற்றல் பெற்றவராக இருந்தால்தான்


அவர் சிறந்த திறனாய்வாளராகவும் திகழ்ந்தார். பாட்டின் திறத்தையும், பாநலன் நுகரும் திறனாய்வாளனின் இலக்கணத்தையும் பின்வரும் பண்டிதமணியின் கூற்று நன்கு எடுத்துக் காட்டுகிறது :

''மதிவலி மிக்க முதுபுலவனிடத்தினின்றுந் தோன்றிய பாடல் நங்கைக்குத் திட்பநுட்பம், தெளிவு, விளக்கம், இனிமை முதலிய பண்புகளமைந்த சொற்பொருட் குழுவே அழகிய உடலும், சுவைநலந் துறுமும்தொனிப் பொருளே உயிருமாம். இந் நங்கைக்கு உவமை முதலிய அணிகளே அணிகலன்களாம். அழகுக்கு அழகு செய்தல்போல் இவ்வணிகள் சேர்க்கப்படினும் இப்பாடன் மெல்லியற்பாவை நல்லாளின் இயற்கை வனப்பு மிக்க நல்லுடலைச் சார்ந்து, உவமை முதலிய அணிகளே சிறந்த அழகு பெற்றுத் திகழ்வனவாம். இங்ஙனம் இயற்கை நலம் மிக்குச் செயற்கை நலனையும் ஏற்றுத் திகழும் இத்தகைய பாடல் நங்கையைக் கூடி நுகர்தற்குரிய இளநலஞ்சான்ற மணமகனியல்பை இயம்பவும் வேண்டுங்கொல்? அன்னான் இலக்கிய இலக்கண நூலறிவானும் மதிநுட்பத்தானும் சிறந்து மலர்ந்து மணப்பருவம் வாய்க்கப் பெற்றுக் கட்டழகு வாய்ந்த பாடல் நங்கையைக் கரண்டலிற் காதல் மிக்குடையனாய் அப்பேறு குறித்துத் தவம் புரிந்த தனிப்பெரும் செல்வனாதல் வேண்டும். வேட்கை முயற்சியும் தவப்பயனாகும் ஆகூழ் வலியும் ஒருங்கு கைவரப் பெற்றாலன்றி அப்பாடல் நங்கையின் பரிசுணர்தல் அரிதாகும்.''

பண்டிதமணி, திறனாய்வாளனுக்கு உரியதாகக் கூறும் அத்தனை பண்புகளும் அவர்மாட்டே அமைந்திருந்தன. எனவேதான், தம்மை நாடி வரும் ஆர்வலர்கள் அனைவரையும் பாட்டின்பத்தில் மூழ்கும்படி அவரால் செய்ய முடிந்தது.

**நல்ல உரையாசிரியர்:**

இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரும் சான்றோர்கள் அனைவருமே மிகச் சிறந்த உரையாசிரியர்களாக விளங்கினர். மறைமலையடிகள், திரு. வி. க., ச.சோ. பாரதியார், இராகவையங்கார் போன்றோர் தம் திறனெல்லாம் புலப்படப் பழைய நூல்கள் சிலவற்றிற்கு உரையெழுதிப் போந்தனர். பண்டை இலக்கியப் பயிற்சியும், இலக்கணப் புலமையும் இல்லாதோர் உரையெழுதப் புகுவது, அரங்கின்றி வட்டாடுவது போலாகும். அதுவும் திருவாசகம் போன்ற சமய நூல்களுக்கு உரையெழுதுவோர் மேற்கூறிய இரு திறனோடு மட்டுமன்றிச் சமய சாத்திரங்களிலும் வல்லவரார்ய் இருத்தல் வேண்டும். பண்டிதமணி இவ்வாற்றல் எல்லாம் ஒருங்கே நிரம்பப் பெற்றவராய் விளங்கினார்.



காரைக்குடி முத்துப்பட்டணம்
தவத்திரு. சொக்கலிங்க ஐயா அவர்கள்
(பண்டிதமணியாரின் சைவ சித்தாந்த ஆசிரியர்)

திருவாசகத்திலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் ஆகிய இரு பகுதிகளுக்கும் 'கதிர்மணி விளக்கம்' என்ற பெயரில் பண்டிதமணி ஓர் அழகிய உரை விளக்கம் எழுதியுள்ளார். இவ்வுரை பரிமேலழகரின் திருக்குறளுரை, நம்பிள்ளையின் ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலிய பண்டை உரை நூல்களோடு ஒப்பவைத்து எண்ணுதற் குரியதாகும். கண்ணழித்துக் கருத்துரைத்துப் பொழிப்புத் தந்து, நுட்பம் கூறி, ஆழ அகலமாய் உரை விரிக்கும் பண்டிதமணியாரின் உரைத்திறம் வியந்து போற்றுதற்குரியதாகும்.

ஏனை யாவரு மெய்திட
ஒற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை ஆனெயைக் கரும்பினின்
தேறலைச்
சிவனையென் சிவலோகக்
கோனை மானை நோக்கிதன்
கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின்
றேன்கெடு
வேனுயிர் ஓயாதே

என்ற திருவாசகப் பாட்டிற்கு உரையெழுதும்போது 'தேனை, ஆனெயைக், கரும்பினின் தேறலை' என்ற வரிக்கு அவர் தரும் விளக்கம் சுவையுடையது. இந்த வைப்பு முறைக்கு (தேனை முதலாவதாகவும், நெய்யை இரண்டாவதாகவும், கருப்புக் கட்டியை இறுதியாகவும் அமைத்துள்ளமை) அவர் தரும் விளக்கம் இது:

''ஆண்டவன் தன் இயல்பை முதலில் எளிமையில் காட்டி, சார்த்துப் படிப்படியாக அருமை நிலையை உணர்த்தி ஆட்கொண்டதைப் புலப்படுத்துவாராய், ''தேனை ஆனெயை'' எனத் தொடங்கி, முறையே கூறுவாராயினர். தேனைப் பெற்றவுடன் அடுதல் முதலிய செயற்படுத்தாமல் இனிமை தோன்ற எளிதில் உண்ணலாம். ''ஆனெயை'' என்றமையால் பசுவினிடத்தினின்றும் நெய் பெற வேண்டுமானால் பாலை அடுதற் செயற்படுத்துத் தயிராக்கிப் பெறல் வேண்டும். கரும்பின் இன்

தேறல் என்புழி, தேறல் ஆகுபெயராய்க் கட்டியை உணர்த்தும். கரும்பின் தேறல் பெற வேண்டுமானால், கரும்பை ஆலையில் இட்டுத் தெளிந்து சாறு எடுத்து, அடுதற் செயலாற் கட்டியாக்கிப் பெற வேண்டும். ஈண்டுக் கூறிய தேன், நெய், கருப்புக்கட்டி இம் மூன்றும் இனிமைச் சுவையில் ஒன்றுபட்டிருந்தாலும் முன்னதை நோக்கப் பின்னது அரிதிற் பெறத் தக்கதாக இருத்தல் அறியத் தக்கது. தேனை என அடைமொழி இன்றியும், ஆனெயை, கரும்பின் இன்தேறலை என மற்றைய இரண்டிற்கும் அடைமொழி புணர்த்தும்படி கூறியது, தேன் ஆக்கும் செயல், ஈக்களுக்கு அன்றியும் மக்களுக்கு இன்றென்பதும், நெய்யும் கருப்புக்கட்டியும் ஆக்கும் செயல் மக்களுக்குரியன என்பதும் புலப்படுத்தற்கு என்க."

மேற்கண்ட உரைப்பகுதி பண்டிதமணியின் பகுநிலைச் சிந்தனையையும், தொகுநிலைச் சிந்தனையும் ( analytic and Synthetic ) ஒருங்கே வெளிப்படுத்தக் காண்கிறோம். சுருங்கச் சொன்னால், இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய உரையாசிரியர்களின் வரிசையில் பண்டிதமணிக்குத் தலையாய இடமுண்டு எனலாம்.

**மொழிபெயர்ப்பாளர்:**

மொழி பெயர்த்தல் என்பது அரிய கலை. பல்கலைத் திறனும் பன்மொழிப் புலமையும் இல்லாதோர் இத்துறையில் வெற்றி பெறல் முடியாது.

பண்டிதமணி வடமொழி, தமிழ் ஆகிய இருமொழியினும் கற்றுத் துறைபோயவர். வேதம், ஆகமம் முதலிய எண்ணிறந்த பல்வேறு அறிவுநூற் பெருக்கங்களையுடைய வடமொழியும் தமிழ்மொழியும் ஆகிய இருபெருமொழிக்கும் இலக்கண முடிபுகள் பல ஒன்றி வரலானும், தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த புலனழுக்கற்ற அறிவுடையோர் பலர் வடமொழி வல்லாராய் அம்மொழி மரபு பலவற்றை எடுத்தாண்டமையாலும் தமிழ் இலக்கணப் புலமை நிரம்புதற்கு வடமொழியறிவும் வேண்டற்பாலதாகிறது. இவ்வுண்மையறிந்த பண்டிதமணி இருமொழியையும் அழுத்தமுறக் கற்றார். அதன் பயனாகச் சுக்கிர நீதி, மிருச்சகடிகம், கௌடலியம் முதலிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

''மிருச்சகடிகம்'' வடமொழியில் எழுதப்பட்ட ஓர் அரிய நாடக நூல். பண்டிதமணி ''மண்ணியல் சிறுதேர்'' என்ற பெயரில் இதனை மொழிபெயர்த்தார்.

இந்நாடக ஆக்கத்தின் மற்றொரு சிறப்பு என்ன வென்றால், அழகும் உணர்ச்சியும் உடைய பல பகுதிகள் பாட்டாகவே எழுதப்பட்டிருப்பது தான். உரைநடையை மொழி பெயர்ப்பது எளிது. பாட்டைப் பாட்டாகவே மொழி பெயர்ப்பது அரிதினும் அரிது. நம் பண்டிதமணி இத்துறையிலும் மாபெரும் வெற்றி பெற்றுள்ளார்.

சாருதத்தன் கூற்றாக வரும் ஒரு பாடலைக் காண்போம்:



சோழவந்தான் அரசன் சண்முகனார்
(பண்டிதமணியாரின்
இலக்கிய, இலக்கண ஆசிரியர்)

''காமமிகு மங்கைகதுப் பென
வெளுத்துத்
தாரகையின் கணங்கள் சூழத்
தாமமிகு சந்திரன்கோப்
பெருந்தெருவின்
தனிவிளக்காய்ச் சார்ந்தான்
அன்னான்
சேமமிகு வெள்ளியதண்
கதிர்க்கற்றை
நீர்வடிந்த சேற்றின் கண்ணே
ஏமமிகும் பாலொழுக்கின்
இருட்குழாத்து
இடைவீழ்ந்து இலகு மாலோ'

**நாநலம் படைத்த
சொற்பொழிவாளர்**

'நாநலன் என்னும் நலனுடைமை' எல்லா நலத்துள்ளும் சிறந்தது என்று கூறுவார் திருவள்ளுவர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் திறன் எல்லார்க்கும் வாய்ப்பதன்று. பண்டிதமணியோ, இந்நலத்தையும் கருவிலே வாய்த்த திருவாகப் பெற்றிருந்தார்.

கதிரேசனார் எங்கே இருப்பினும் அங்கே தமிழ்க் கதிரும் சைவக்கதிரும் ஒளி வெள்ளம் வீசி நிற்கும். புலவர் பலர் விண்மீன் போல் சூழ்ந்திருப்பத் தாம் சித்திரைத் திங்களே போல் ஒட்பமும் தட்பமும் ஒருங்கே பொருந்த வீற்றிருப்பார். பண்டிதமணி தலைமை தாங்காத கழகமே இத்தமிழ் நாட்டில் இல்லை எனலாம. சொற்பொழிவு நிகழ்த்துங்கால் பண்டிதமணியவர்களுடைய ஆன்ற புலமையும் அவையறிந்துரைக்கும் திறமையும் வெளிப்படும். பிறர் கூற்றை மறுத்துரைக்கும் அமையம் நேர்ந்த போதெல்லாம் அவர் கடுஞ்சொல் கூறியதே இல்லை. குறிப்பாகவும் நகைச்சுவையோடும் சதுரப்பாட்டோடும்தான் எடுத்துக் காட்டினார். அவர் அவையில் பேசுங்காலத்து அருங்கலை விநோதராகவே திகழ்ந்தார்.

மேடைப்பேச்சு என்னும் கலையில் காலஞ்சென்ற திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளும், அறிஞர் அண்ணாவுமே இவரோடு ஒப்புரைக்கத்தக்கவர்கள். மேடை தோறும் நாக்கூடிப்பாக வாய்ப்பறை அறைந்து தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர் நம் பண்டிதமணியே ஆவர்.

**நல்லாசிரியர்:**

பண்டிதமணி, மாணவர்களுக்குப் பாடம் சொல்லுவதில் வல்லவர். தொல்காப்பியம், அகநானூறு முதலிய எல்லா இலக்கண இலக்கியங்களையும், திருமந்திரம் முதலிய சமய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றிருந்த பண்டிதமணி, மாணாக்கர்க்கு மிக மிக இனிமையாகப் பாடம் சொல்லி வந்தார். உரைக்கப்படும் பொருளை உள்ளத்தே அமைத்து, விரையாமலும், வெகுளாமலும், விரும்பி முகம் மலர்ந்து, கொள்வோன் குறிப்பறிந்து கற்பிக்கும் இவரது ஆற்றலை அந்தக் காலத்தில் பாராட்டாதார் யாருமே இல்லை. இவரிடம் கல்வி கற்றுப் பெரும்புலமை எய்திய மாணாக்கர்கள் பலராவர். திருப்பதி கீழ் நாட்டுக்கலையாராய்ச்சிப் பகுதிச் சொற்பொழிவாளராக விளங்கிய பெருந்திருவாளர் தி. பொ. பழனியப்பப் பிள்ளை அவர்கள் பண்டிதமணியின் மாணவரே யாவர். சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் வாயிலாகச் சங்க நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதி வெளியிட்ட உரை வேந்தர், பெருமழைப் புலவர், பொ. வே. சோமசுந்தரனாரும் பண்டிதமணியிடம் பாடம்கேட்டவரே யாவர்.

**உரையும் பாட்டும் உடையோர்:**

உலகத்தில் பிறப்போர் பலர். பிறந்தோர் அனைவருமே புகழ் வாழ்வு வாழ்கின்றவர் அல்லர். ஒரு சிலரே உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் நெஞ்சில் வாழ்கிறார்கள்.

தம் உழைப்பாலும், உரையாலும் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய இப்பெரும் புலவர் தமிழர் அனைவராலும் நன்றியோடு நினைக்கத் தக்கவர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 00?


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கோ-ஆப்டெக்ஸ்
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
Sir

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23 தமிழரசு 1-6-1982 75

